
# மண்

ஜேர்மனி / 02.05.2015

25 வது
ஆண்டு
சிறப்புமலர்



25TH JUBILEE

1990 - 2015



# நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு

சூபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள்
புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!

## வீட்டுக்கடன் 1,4% வட்டிவீதத்திலிருந்து

உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், **60.000€** வரை உடனடி கடன் உதவி!




தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை (Privatkredit) குறைந்த வட்டிக்கு மாற்றுதல்

**நீங்கள் வீடு கட்ட முடிவெடுத்து விட்டீர்களா ?**

**NRW மாநிலத்தில் உங்களுடைய விருப்பத்துக்கேற்றவாறும், நியாயமான விலையிலும் உங்கள் இல்லத்தை அமைத்துத் தருகின்றோம் !**

தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
**0231/53375365**
**0231/10876361**
**0231/13029415**
**0152/53961138**

## BCN·TRAVELS



**கோடைகால விடுமுறைக்குரிய விமானச்சிட்டைகள் முற்பதிவு ஆரம்பமாகிவிட்டது**

**599€** இல் இருந்து

தொடர்புகளுக்கு:
**BCN Travels // Consulting Network (TBW) UG // Inh. Rasan Sivalingam**
**Rheinische Str. 72, 44137 Dortmund // Tel.: 0231-10876361, 0231-98539416, 0231-58440763 // Fax: 0231-10876362 // Mobile: 0163-8714369**

# மண் சஞ்சிகை

25வது

ஆண்டு விழா மலர்

02.05.2015

ஜேர்மனி

அன்பளிப்பு
வசீகரன்
ஜேர்மனி
27/8/18



'Mann' - Erde e.V.

# இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து!..
# உங்கள் மண் சஞ்சிகை!....

14.01.1990 ஆம் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டதுதான் மண் சஞ்சிகை. இச்சஞ்சிகையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக இருந்தவரும் தற்போது தாயகத்தில் விசித்துவருபவருமான திரு பே.அமிர்தநாதன் அவர்களையும் நினைவில் நிறுத்தி இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம். மண் சஞ்சிகை என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவுசெய்து வெற்றிகண்டிருப்பதை வாசகர்களின் வாழ்துக்களிலிருந்து புரிந்துகொண்டுள்ளோம்.

இந்த வெள்ளிவிழா நிவைுகாணும்வேளை இச்சஞ்சிகையூடாகப் புலம்பெயர் தேசங்களிலும் தாயகத்திலுமாகப் பல்லாயிரக் கணக்கானோர் பலவகையான நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பது இச்சஞ்சிகையின் மாபெரும் வெற்றியாகவே கருதலாம். இந்த 25வருட வரலாற்றில் இச்சஞ்சிகை எத்தனையோ சோதனை களையும் வேதனைகளையும் எதிர்கொண்டவேளை வாசகர்களும் எழத்தாளர்களும் நலன்விரும்பிகளும் பல வகையான ஒத்துழைப்புக்களையும் நல்கியே இச்சஞ்சிகையை வளர்த்தெடுத்திருக்கிறார்கள். அனைத்துத் தரப்பினருக்கும் இவ்வேளையில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் பகிர்ந்து கொள்கிறோம்.

எதிர்காலத்திலும் மண் சஞ்சிகை தொடரும் சகல பணிகளுக்கும் அனைவரின் தொடர்ச்சியான ஆதரவையும் பங்களிப்புக்களையும் எதிர்பார்க்கிறோம். தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் தமிழர் துயர்கள் நீங்கி அனைவரும் அனைத்து உரிமைகளுடன் தலைநிமிர்ந்து வாழ்வோம்!. வெள்ளிவிழா சிறப்புற நடந்தேற ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எங்கள் நன்றிகள்!..

-ஆசிரியர்-

மண்

முகவரி: V. Sivarajah
Am Windhovel 18A
47249 Duisburg - Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# மண்ணின் மலரோடு இணைந்தவர்கள்........

## பொதுத்தாபனங்கள்

மாநகர முதல்வர் - டியூஸ்பேர்க்
வெற்றிமணி பத்திரிகை - ஜேர்மனி
ஐரோப்பிய தமிழ் வானொலி - ஜேர்மனி
கத்தோலிக்க ஆன்மீகப்பணியகம் - ஜேர்மனி
ஜேர்மன் தமிழ்க்கல்விச்சேவை - ஐரோப்பா
தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி
தமிழ்க்கல்வி கலாச்சார மன்றம் - ஜேர்மனி
தமிழ்க்கல்விக் கலாச்சார அமைப்பு - ஜேர்மனி
தமிழர் விளையாட்டுக் கழகம் - ஜேர்மனி
ரூத் மிஷன் - கிளிநொச்சி
அருளகம் - வவுனியா
அன்பகம் - வவுனியா
சிறிசண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உலகத்தமிழர் பண்பாட்டு இலக்கம் - கனடா
யாழ்-நாவற்குழி மகாவித்தியாலயம் - இலங்கை
யாழ்-நாவற்குழி காந்தி சனசமூக நியைம்-இலங்கை

## கவிஞர்கள் - எழுத்தாளர்கள் நலன்விரும்பிகள்

திரு ஐ இரகுநாதன் - ஜேர்மனி
திரு ப பசுபதிராசா - ஜேர்மனி
திரு பொன் புத்திசிகாமணி - ஜேர்மனி
திரு அம்பலவன்புவனேந்திரன் - ஜேர்மனி
திரு முல்லைமோகன் - ஜேர்மனி
பொ சிறீஜீவகன் - ஜேர்மனி
திரு பொ குகதாஸ் - ஜேர்மனி
திரு சி இராஜகருணா - ஜேர்மனி
திரு ப ஜெயரூபலிங்கம் - ஜெர்மனி
திரு சி சிறீகரன் - ஜேர்மனி
திரு சோமசிவ குலநாயகம் - ஜேர்மனி
திரு. முல்லை மோகன் - ஜேர்மனி
திரு க பத்மகுணசீலன் - ஜேர்மனி
திருமதி சாந்தினி துரையரங்கன் - ஜேர்மனி
திருமதி கெங்கா ஸ்ரான்லி - ஜேர்மனி
திருமதி மீனா சிவலிங்கம் - ஜேர்மனி
திருமதி கலைவாணி ஏகானந்தராசா - ஜேர்மனி
திருமதி ஜெயா நடேசன் - ஜேர்மனி
திருமதி புனிதமலர் இராஜேஸ்வரன் - ஜேர்மனி
திருமதி கீத்தா பரமானந்தன் - ஜேர்மனி
திருமதி கௌசி சிவபாலன் - ஜேர்மனி
திருமதி நகுலா சிவநாதன் - ஜேர்மனி
திருமதி வசந்தா ஜெகதீசன் - ஜேர்மனி

உடுவை தில்லைநடராசா - இலங்கை
திரு கே கே அருந்தவராசா - இலங்கை
திரு முத்துச்சொக்கன் - இலங்கை
செல்வி தர்சிகா - இலங்கை
செல்வன் பிரியங்கன் - இலங்கை

திரு ஜீவகுமாரன் - டென்மார்க்
வேலணையூர் பொன்னண்ணா - டென்மார்க்

திரு ஜெயம் தங்கராசா - நெதர்லாந்து

மட்டுவில் ஞானக்குமரன் - கனடா
திரு சௌந்தரராஜன் - கனடா

வண்ணைத் தெய்வம் - பிரான்ஸ்
திரு துரைசிங்கம் - பிரான்ஸ்

திரு க அருந்தவராசா - சுவீஸ்லாந்து
திருமதி பவானி மூர்த்தி - சுவீஸ்லாந்து

திருமதி நவஜோதி யோகரட்ணம்-லண்டன்
திருமதி பராசக்தி பரமசாமி - லணடன்
திரு சி த மார்க்கண்டு - லண்டன்
திரு சிவனடியான் சிறிபதி - லண்டன்
திரு வை .நடராசா - லண்டன்
திரு முல்லை அமுதன் - லண்டன்

திரு சிசு நாகேந்திரன் - அவுஸ்திரேலியா

மண்ணோடு இணைந்துகொண்ட

அத்தனை நல்லுள்ளங்களுக்கும்

இனிதான நன்றிகள்!..

# தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

அருட்பணி அ பெனற் பெர்னாண்டோ
தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
ஜேர்மனி

## வெள்ளிவிழா வாழ்த்து மடல்

யேர்மன் நாட்டில் வெளிவரும் எமது உறவுப் பத்திரிகையான - கல்வி, கலை, இலக்கியக் கழக இருமாத இதழான "மண்" இருபத்தைந்து ஆண்டு நிறைவு காண்பதை, இதே நாட்டில் இருந்து வெளியாகும் இன்னொரு பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் அதன் கனஅளவை உணர்ந்து வாழ்த்துவதில் ' பாராட்டுவதில் பெருமைப்படுகிறேன்.

நாட்டை விட்டு சூழ்நிலை காரணமாகப் புலம் பெயர்ந்த தமிழ் மக்களை செம்மையான பாதையில் வழி நடாத்தும் நோக்குடன் 1985, 90களில் எண்ணடங்காப் பத்திரிகைகள் ஈசல்கள் போல் உருவெடுத்தன. ஆனால், அவற்றில் பல பொருளாதாரப் போர்ச்சூழலில் சிக்குண்டு காணாமல் போயின. ஆனால், ஆமையின் வேகத்துடனும் ஆனையின் பலமான நிதானமான நடையுடனும் புறப்பட்ட சில பத்திரிகைகளே, அவற்றின் நீண்ட வாழ்நாளை ஒத்த நிலையில் பல்லாண்டுகள் வாழ்ந்து வருகின்றன. அவற்றில் "மண்" இருமாத இதழும் ஒன்றெனக் கூறுவதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

1990 தைத் திங்களில் உருவெடுத்த "மண்" இருமாத இதழானது "தமிழால் இணைந்து தமிழக்குப் பணி செய்வோம்" என்ற கருப்பொருளுடன் கல்வி, கலை, இலக்கியம் எனப்பல விடயங்களை தன்னகத்தே கொண்டதோடு உலகில் இருபத்து நான்கிற்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் எழுத்தார்வம் கொண்டோரையும் உள்ளீழத்து அத்தனை நாடுகளிலும் வாழும் முதலாம் தலைமுறையினருக்கு வழிகாட்டத் தொடங்கி, படிப்படியாக வளர்ந்து இரண்டாம் தலைமுறையினரையும் கவர்ந்து, அவர்கள் கூட வாசிக்க, எழுதத் தூண்டுகோலா அமைந்தது.

இந்த இரண்டாம் தலைமுறைக்குத் தமிழ்க் கல்வியை ஊட்டியது தமிழ்க் கல்விச்சாலைகள் என்றால், அவர்களைத் தொடர்ந்து தமிழ்க் கலாச்சாரத்தில் இருந்து பிசகாமல் காத்து வருவதில் "மண்" போன்ற பத்திரிகைகள் பெரும்பங்காற்றி வருகின்றன. இந்த இரண்டாம் தலைமுறைச் சிறார்கள் "மண்" பத்திரிகையை வாசிப்பதோடு மட்டும் நில்லாமல் அதில் தமது ஆக்கங்களையும் இணைத்து எழுத்து ஆற்றலையும் வெளிப்படுத்தி வருகின்றனர். அது மாத்திரமல்லாமல் இன்று மூன்றாம் தலைமுறைக் குழந்தைகள் கைகளில் விளையாட்டுப் பொருள் போல் தவழும் இப்பத்திரிகை, எதிர்காலத்தில் அவர்களுக்கும் பல பணிகள் புரியும் என்பது குன்றத்து விளக்குப் போல் தெளிவாகத் தெரிகிறது.

எனவே, இவ்வாறு பணிகள் பல புரிந்து வரும் "மண்" இருமாத இதழ் எதிர்காலத்திலும் சிறப்பான பணிகள் பல ஆற்றிட யேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனர் என்ற முறையிலும் இறைமக்கள் சார்பிலும் வாழ்த்துகிறேன். இறையருளை வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்!

# தமிழ் எழுத்தாளர் சங்கம் - யேர்மனி
## Tamilischer Schriftsteller Verein – Deutschland
## Tamil Writers Association – Germany

**இருபத்தைந்து ஆண்டுகள் சாதனைதந்த வாழ்த்துக்கள்.!**

'மண் சஞ்சிகையின் இருபத்தைந்தாவது இலக்கியப்பணியும் சமூகப்பணியும் நிறைவுபெற்று அடுத்த வருடத்தின் ஆக்கத்தில்செயல்படும் இவ்வேளை எமது சங்க உறுப்பினர்கள் சார்பாக எங்கள் இதயம் நிறைந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.ஆசிரியர் திரு வ.சிவராசா அவர்கள் எங்களைப்பொறுத்தமட்டில் சிறப்பான வாழ்த்துக்களுக்குரியவர் காரணம் பத்து வருடங்களுக்கு மேலாக எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் இவரே செயல்பட்டு வருகிறார்.காலம் ஒருவரை வாழ்த்துமாக இருந்தால் காரணங்கள் இருக்கவேண்டும்.இவரை வாழ்த்துவதற்குக்கான காரணங்கள் வாசகர்கள் அறிந்ததே கையெழுத்துப் பிரதியாக ஆரம்பித்த இந்த மண் சஞ்சிகை இன்று இருபத்தைந்து ஆண்டுகளில் பலரின் பாராட்டுக்களுடன் சிறப்பான விழாவொன்றை முன்னெடுத்திருக்கின்றது.

ஒருவாரல் மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான நற்காரியங்கள் அவர் வாழகின்ற காலத்திலேயே அவருக்கான கௌரவத்தை வழங்கவேண்டும்.இதன் அடிப்படையிலேயே மதிப்பிற்குரிய திரு சிவராசா அவர்கள் பலராலும் பாராட்டுப்பெற்று வியந்து நிற்கின்றார்.இலக்கியம் என்பது காலத்தைப்பிரதிபலித்து காலத்தைக்கடந்தும் வாழகின்றது.அந்த வகையில் மண் சஞ்சிகையும் ஆரம்பித்த காலங்களின் பதிவுகளையும் ஆக்கதாரர்களின் இலக்கியச்சுவையோடு இன்றும் வாசகர்களின்கைகளில் தவழ்கின்றது.சிறுவர்களுக்கான கல்வி அறிவை ஊட்டுவதுடன்.அவர்களை அதற்குள்புகுத்தி எழுத்தாளர்களாகவும் மாற்றியிருக்கின்றது.மண் சஞ்சிகைக்கு சிறுவர் ஆக்கங்களை எழுதிய சிறுவர்கள் வளர்ச்சி பெற்று, நல்ல பல இலக்கியங்களை வளர்ந்த நிலையில் இச்சஞ்சிகைக்கே எழுதிவருவதை அறியும்போது பெருமகிழ்ச்சியளிக்கிறது.

அதன் எதிர்பார்ப்புகளும் இதுவேதான். எத்தனையோ இளம் எழுத்தாளர்கள் இதன் மூலம் வெளிவந்திருக்கின்றார்கள். சிறுவர்கள் முதல் பெரியவர்வரை ஒரே நேரத்தில் படித்துப் பயன்பெறும் சஞ்சிகையாக அதுவும் யேர்மனியில் இருந்து வருகிறது என்பதை நினைக்கும்போது பெருமையாக இருக்கிறது.சிறுவர் ஆக்கங்களை எழுதுகின்ற சிறுவர்களின் தொகை வெகுவாகக்குறைந்து வருவது கண்டு கவலையுற்று ஆசிரியர் தனது சஞ்சிகையில் அதைப்பதிவு செய்திருந்தார்.பெரியவர்கள் பெற்றோர்கள் இவரின் ஆதங்கத்தை மனதில் நிறுத்தி சிறுவர்களை ஊக்கப்படுத்தி அவர்களை எழுதவைக்கவேண்டும்.எழுதுவதன்மூலம் தமிழ் இலகுவாக புகுந்துவிடும்.இதனால் இரட்டிப்புப் பலன் கிடைக்கிறது.

தமிழையும்,இலக்கியத்தையும் வளர்க்கின்ற இவ்வேளையிலும் இன்னுமொரு மகத்தான பக்கமொன்று 'மண் சஞ்சிகைக்குண்டு.அதுதான் மனிதாபிமானப் பணி.இதன் மூலம் எத்தனையோ ஆதரவற்றசிறுவர்களுக்கு தாயகத்தில் வாழ்வு கிடைத்திருக்கின்றது.எத்தனை பிள்ளைகள் இதன்மூலம் கல்விகற்று நல்ல நிலைக்கு வந்திருக்கிறார்கள்.அவர்களுக்கு வழங்கிய ஆதரவு ஆத்மார்த்தமான வாழ்த்துக்களை ஆசிரியர் திரு சிவராசா அவர்களுக்கு வழங்கி வாழவைக்கும்.இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து கொண்டாடும் இவ்வேளை இவரின்குடும்பத்தினர்க்கும் வாழ்த்துக்களை வழங்கிக்கௌரவிப்பது பொருத்தமாகும்.

இன்னும் பல ஆண்டுகள் சிறப்போடு இச்சஞ்சிகை வெளிவர வேண்டும் அதற்கு வாசகர்களும் எழுத்தாளர்களும் உற்ற துணையாக நின்று செயல்பட்டு இதனைமேலும் வளர்த்தெடுக்க வேண்டும்.என்று கேட்டுக்கொள்வதுடன் எங்கள் எழுத்தாளர் சங்க உறுப்பினர்களின் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் இவ்வேளை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

'எழுத்தையும், வாசிப்பையும் இருகண்களாகப்போற்றிடுவோம்!..

உபதலைவர் - பொ. சிறிஜீவகன் செயலாளர் - பொன். புத்திசிகாமணி

# மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி

Bürgermeister

**Grußwort der Stadt Duisburg**

Seit 25 Jahren ist die Zeitschrift „Mann" ein verlässlicher Begleiter der Tamilinnen und Tamilen in Duisburg und der Region. Damit feiert das Magazin nun ein ganz besonderes Jubiläum, zu dem ich auf diesem Wege im Namen der Stadt Duisburg, aber auch persönlich sehr herzlich gratuliere.

Die erste Auflage der Zeitschrift „MANN" wurde im Februar 1990 mit dem Anliegen veröffentlicht, die tamilische Sprache und Kultur im Zufluchtsort zu bewahren, zu fördern und zu verbreiten. Gleichzeitig sollte die Publikation mit der deutschen Kultur und der deutschen Sprache vertraut machen. Mit dieser Zielsetzung hat sich die Zeitschrift sehr schnell zu einer weithin geschätzten Informationsplattform für Kultur, Literatur und soziale Themen entwickelt. Sie fördert außerdem das soziale Miteinander, ist Mittler der Kulturen und verfolgt darüber hinaus karitative Zwecke, indem sie regelmäßig zur Unterstützung von Kriegsopfern, behinderten Menschen und Waisenkindern in Sri Lanka aufruft.

Von der ersten Auflage an wird das regelmäßige Erscheinen der Zeitschrift von Herrn Vyramuthu Sivarajah ermöglicht. Er prägt „MANN" als Initiator, Herausgeber und als Chefredakteur seit nunmehr einem Vierteljahrhundert. Für dieses kontinuierliche Engagement, für die damit verbundene viele Arbeit möchte ich mich bei dieser Gelegenheit sehr herzlich bedanken, auch weil das Magazin mit seinen Anliegen einen wichtigen Beitrag zur Integration leistet.

Ich freue mich, dass sich das Magazin so erfolgreich etablieren konnte. Schließlich zeigt dieser Erfolg auch, welch große Bedeutung die Zeitschrift für das tamilische Leben in Duisburg und seiner Umgebung hat. Und so wünsche ich der Zeitschrift „MANN" und auch ihrem Herausgeber auf dem Weg zum nächsten Jubiläum alles erdenklich Gute und weiterhin viel Erfolg!



**Sören Link**
Oberbürgermeister



## Dolmetscher- und Fachübersetzungsbüro

A.Ragunathan
Limburgstr. 7, 45476 Mülheim
Tel. 0208/990477
E-mail: Ragunathan.Dolm@t-online.de

Sehr geehrter Herr Sivarajah,

ich bin Ihnen dankbar, dass Sie mir Gelegenheit geben, zum 25. Jubiläum Ihres Magazins „MANN" einige Worte an Sie und Ihre Leser zu richten.

Gerade in einer Zeit, in der die Digitalisierung voranschreitet und die Entwicklung der sogenannten, sozialen Medien' die klassischen Druckerzeugnisse zu verdrängen scheint, sind Blätter wie das Ihre geeignet, ja geradezu berufen, den Glauben daran zu erhalten und zu festigen, dass das gedruckte Wort auch weiterhin seine Leser erreichen und beeindrucken wird.

In diesem Zusammenhang ist besonders hervorzuheben, dass Sie als einzelne Person den Mut für ein derartiges Experiment aufgebracht haben und gleichzeitig das persönliche und wirtschaftliche Risiko seines Scheiterns eingegangen sind, auch und gerade in der heutigen Zeit, in der ständig von ‚Selbstverwirklichung' die Rede ist, aber – im Rahmen einer allgemeinen Kaskomentalität - möglichst mit Rückversicherung.

Dank, Respekt und Anerkennung gebühren Ihnen aber auch deshalb, weil Sie seit mehreren Jahrzehnten mit Ihren Berichten und Informationen aus der früheren Heimat eine Verbindung zu dieser aufrechterhalten haben und damit für die vielen in Europa lebenden Tamilen ein Band zu ihren zurückgebliebenen Familienangehörigen, Freunden und Bekannten geknüpft und erhalten haben, dessen Wert nicht hoch genug eingeschätzt werden kann.

Es ist sicherlich nicht vermessen, Ihrem Blatt in diesem Zusammenhang die Funktion eines ‚Leuchtturms' zuzubilligen, der für die Auslandstamilen ein Anknüpfungspunkt war, sich stets ihrer Herkunft bewusst zu sein und zu bleiben, gleichzeitig aber auch der Bevölkerung des jeweiligen Gastlands Anlass und Gelegenheit gab, sich bezüglich der Wünsche, Hoffnungen und Träume, aber auch nicht erfüllter Erwartungen ihrer neuen Landsleute zu orientieren.

Nicht zuletzt hat Ihr Magazin in den Zeiten eines rund 30jährigen Bürgerkriegs, der zwangsläufig eine objektive Sicht auf die realen Verhältnisse wenn nicht verstellte, so doch stark beeinträchtigte, sicherlich dazu beigetragen, über die Tamilen als Bevölkerungsgruppe innerhalb eines multiethnischen Staates, der nur einem Teil seiner Bürger gerecht zu werden vermochte, einigermaßen vorurteilsfrei zu informieren und Verständnis für deren Anliegen zu wecken.

Im Sinne dieser vielfältigen Funktionen Ihres Blatts, die an dieser Stelle nur angerissen werden konnten, wünsche ich Ihnen noch viele Jahre eine erfolgreiche Informationstätigkeit und gleichzeitig den Fortbestand der Brückenfunktion des „MANN – Tamilisches Magazin für Kultur, Literatur & Soziales".

*Mit freundlichen Grüßen*

A. Ragunathan



www.Uebersetzungen-Ragunathan.de

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை (ஐரோப்பா)

( இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைய )

Tamilischer Bildungsverein Deutschland e.V.(Europa)

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

இன்றைய உலகம் விஞ்ஞான உலகம். தொடர்புச் சாதனங்களின் உச்ச வளர்ச்சியில் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மிகமிக வேகமான பாதையில் உலகம் சென்று கொண்டிருக்கின்றது. இந்த வேகத்திற்கு ஈடு கொடுக்கும் நிலையில் உலக மக்கள் யாவரும் தங்கள் தங்கள் சொந்த வேலைகளையே நிறைவேற்ற முடியாதபடி உள்ளனர். இந்த நிலையில் பொதுவாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியுமா? என்ற கேள்வி பலரின் மனங்களிலும் தோன்றிய வண்ணம் உள்ளன. இப்படியான நிலையில் இருபத்தைந்து வருடங்களாக ஒரு சஞ்சிகையைப் புலம்பெயர்ந்த நாட்டில் நடாத்தி, அதனூடாக பல செயற்திட்டங்களை நிறைவேற்றி, நிதி சேகரித்து உரிய முறையில் தாயகத்தில் அல்லல்பட்டுத் துயரப்பட்டுத் துன்பங் களுக்கு உள்ளானவர்களுக்கு உதவிகளையும் புரிந்து வருவது மாபெரும் சாதனையாகும். இச்சாதனையை யேர்மன் நாட்டின் டுய்ஸ்பேர்க் நகரத்திலிருந்து "மண்" சஞ்சிகை புரிந்து வருகின்றது.

இச்சாதனையைப் பாராட்டும் வகையிலும், அதனைச் செயற்படுத்திவரும் செயற்பாட்டாளர்களின் சேவையையும் நினைவிற்கொண்டு, மண் சஞ்சிகையின் இருபதாவது ஆண்டு நிறைவு விழாவில், அதன் பிரதம ஆசிரியர் திரு.வயிரமுத்து சிவராசா அவர்களைக் கௌரவித்து "புகலிடச் சாதனையாளர்" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தோம். இதுபோல் தொடர்ந்தும் அவரது செயற்பாட்டுக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்துப் பாராட்டுவதில் மனம் மகிழ்கின்றோம்.

தமிழின, தமிழ்மொழி வளர்ச்சி கருதி கல்வி, கலை, இலக்கியம், சமூகம் பற்றிய விடயங்களைப் புள்ளி விபரங்களுடனும், படங்களுடனும் வெளியிட்டு வருகின்ற தன்மை பாராட்டுதற் குரியதாகும். சிறுவர்க்கான பணிகளில் மண்சஞ்சிகை அவர்களுக்கு எழுத்தறிவூட்டுவதிலும், வாசிப்புத் திறன்களை வளர்ப்பதிலும், ஈழத்துச் செய்திகளை அறிவிப்பதிலும் அளப்பெரும் தொண்டினைச் செய்துவருகின்றது. பிள்ளைகளுக்குப் பல்வேறு விதமான அறிவூட்டும் போட்டிகளைச் சஞ்சிகை மூலம் நடாத்திப் பரிசில்களை வழங்குவதை மனதாரப் பாராட்டுகின்றோம். யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் பணிக்கு ஒத்துழைப்பை நல்கிவரும் "மண்" சஞ்சிகையையும், அதன் பிரதம ஆசிரியரும், கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினருமான திரு.வ.சிவராசா அவர்களையும் நாம் போற்றிப் பாராட்டுகின்றோம்.

ஈழத்தில் இனக் கொடுமைகளினால் அல்லலுற்று பல்வேறு வழிகளில் தமது அவயவங்களை இழந்து தவிப்பவர்க்கும், பெற்றோர்களை இழந்து தவிக்கும் ஆதரவற்ற சிறுவர்களுக்கும், ஆதரவற்றவர்களாக, அகதிகளாகத் தவிக்கின்ற ஏனையோர்களுக்கும் உதவி புரிந்துவருவதோடு, பத்துப் பிள்ளைகளின் வாழ்வாதாரச் செலவுகள் முழுமையையும், இங்குள்ள நல்மனம் படைத்தவர்கள் மூலம் பெறுப்பெடுத்துச் செயற்படுத்துகின்றமை பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியதாகும். ஈழத்தில் ஏழு (7) மாவட்டங்களிலுள்ள நாற்பத்தாறு (46) சமூகசேவை நிறுவனங்களுக்கு 43997 (DM) மார்க்குளையும், 45436 (Euro) ஒயிரோக்களையும் அனுப்பிவைத்துள்ளனர். இது மிகச்சிறந்த பெரும்பணியாகும். இப்பணியினைச் செய்து வளர்ச்சிபெற்றுத் தமிழ் மக்களுக்கு மேன்மேலும் சிறப்பான நற்பணிகளைச் செய்யவேண்டுமென நாம் மனம் நிறைந்த பாராட்டுதலையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொ.சிறீஜீவகன்
தலைவர்



# வெள்ளிவிழா சிறக்க வெற்றிமணியின் வாழ்த்துக்கள்!...

மு. க. சு. சிவகுமாரன்
பிரதம ஆசிரியர்
வெற்றிமணி - ஜேர்மனி

யேர்மனியில் திரு.வ.சிவராஜா அவர்களை ஆசிரியராகக் கொண்டு கடந்த 25 ஆண்டுகளாக மண் சஞ்சிகை வெளிவருகின்றது. சஞ்சிகையில் முக்கியமாக சிறுவர்களுக்கு நல்ல களம் அமைத்து கொடுத்துள்ளார். மேலும் பெயருக்கு ஏற்றால்போல் -மண்- அதாவது நமது தாய்மண்ணின் மீது உள்ள பற்றை எழுத்தில் மட்டுமன்றி செயலிலும் காட்டிய ஒரு சஞ்சிகையாக இதனைக் காணமுடிகின்றது. பல லட்சம் இலங்கை ரூபாய்க்கள் இச்சஞ்சிகைமூலமாக சேர்க்கப்பட்டு நமது மண்ணில் உள்ள சிறார்களுக்கும் ஆதரவற்ற மக்களுக்கும் வழங்கப்பட்டு வருவதை நான் அறிவேன்.

25 வருடங்களில் சஞ்சிகையுடன் பேச்சு சித்திரம் கவிதை என பலபோட்டிகளை வைத்து மாணவர்களை ஊக்குவித்தும் வருகின்றார். ஒன்று இரண்டு என சிலகாலம் பெருமையாக திறமையாக சிலவற்றை செய்துவிடலாம்.ஆனால் தொடர்ந்து 25 வருடம் அதன் வலியும் அதே நேரம் வலிமையும் செய்பவர்களுக்குப் புரியும்.

மேலும் சஞ்சிகை வளர்ச்சிகண்டு பலசாதனைகள் புரியவும், ஆசிரியர் என்றும் தனது கடமையைச் செய்ய இறைவன் நல்ல ஆரோக்கியத்தை வழங்கவும் ஆண்டவனை வேண்டி வெள்ளிவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

ஐரோப்பியத் தமிழ் வானொலி



Po. Box 4153
59037 Hamm
Deutschland

Telefon: 02381 95 66 09
Telefax: 02381 97 25 556

Web: www.etr.tm
eMail: info@etr.tm

01.12.2014

மண்ணுக்கு மனமார்ந்த வாழ்துக்கள்!

மண் இருமாத இலவச இதழ் வெள்ளிவிழா காண்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம் வாஞ்சையோடு வாழ்த்தி நிற்கின்றோம்.

ஜேர்மனியில் இருந்து தொடர்ச்சியாக இருபத்தைந்து ஆண்டுகள் வெளிவரும் ஒரே ஒரு இலவச இதழ் என்ற பெருமை மண் இதழுக்கு மட்டுமே உண்டு.

பிரதம ஆசிரியர் வி.சிவராஜா அவர்களின் அயராத உழைப்பே இந்த வெள்ளிவிழா காணும் மண். அதே வேளை அவருடைய குடும்பத்தாருக்கும், மண்குழுமத்திற்கும், ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம்.

மண் பலதலைமுறையினரையும் கவரும் சஞ்சிகையாக வெளிவருகின்றது. குறிப்பாக எமது இளம் சந்ததியினரையும் இணைத்து அத்தோடு அவர்களுக்கும் தேவையான விடயங்களையும் உள்ளடக்கி வருகிறது.

பிரதம ஆசிரியர் வி.சிவராஜா அவர்கள் மண் இதழோடு மட்டும் நின்று விடாமல் ஜேர்மனியில் பல பொது சேவையளையும் ஆற்றிவருவது இந்த நேரத்தில் நினைத்து வியந்து பார்த்து நிற்கின்றோம்.

இவை எல்லாவற்றிக்கும் மகுடம் வைத்தாற் போல் இலங்கையில் ஆதரவற்றோருக்கு மற்றும் அங்கவீனர்களுக்கு அநாதை இல்லங்களுக்கு என்று தன் சக்திக்கு மேலாக முயன்று பல ஆயிரங்களை சேகரித்து அனுப்பி உதவுவது இவருடைய மனிதநேய பண்பை பறை சாற்றி நிற்கின்றது. இந்த தருணத்தில் இவருடைய முயற்ச்சிக்கு கைகொடுத்த சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் நன்றியுணர்வோடு வாழ்த்தி நிற்கின்றோம்.

வீழ்வது நாமாயினும் வாழ்வது தமிழாகட்டும!...

வாழ்க உங்கள் பணி
வளர்க உங்கள் தொண்டு

வாஞ்சையோடு வாழ்த்தி நிற்கின்றோம்
தர்மலிங்கம் இரவீந்திரன்
(ஐரோப்பிய தமிழ் வானொலி, அகரம், அகரதீபம்)

Bankverbindung Bank: Volksbank Hamm eG Konto: 4734 097 700 Bankleitzahl: 441 600 14 IBAN: DE96 441600144734097700 BIC: GENODEM1DOR

அறிவாலயம் தமிழ்ப்பாடசாலை - ஒபகௌசன்
ARIVAALAYAM TAMIL SCHOOL – OBERHAUSEN
ARIVAALAYAM TAMILISCHE SCHULE - OBERHAUSEN

‘ மண் , மலருக்கு வெள்ளிவிழா வாழ்த்து

பாட்டுக்குள் உறைந்திட்ட பாடுபொருளாய் நீ ஆனாய்
படைப்பதிலும் பகர்வதிலும் பாவடிக்க கருவானாய் -தன்
பாட்டினிலே உருவாகி தருவாகி படர்ந்தே நீ விரிந்தாய்
பைந்தமிழ் மொழியினுக்காய் பாடுபட்டே நீ உழைத்தாய்
ஏட்டினில் முதலாவதாய் இங்கு எழுந்துவந்த தமிழ்மலரே
எண்ணி இருபத்தைந்தகவையை எட்டியதால் வாழ்த்துகிறோம்.!

நாட்டுக்கு வேண்டிய நல்லவற்றுக்காய் நீ உழைத்தாய்
நடைமுறைக்கு உகந்ததை நயமாக நீ உரைத்தாய் -நேர்
கோட்டினில் பயணித்தே நேர்மையினை நீ வளர்த்தாய்
நெடும்பயண அநுபவத்தில் நெருடல்களையும் நீகண்டாய்
காட்டினிலே பொழிந்திட்ட கடும்மழைபோல் அல்லாது
காலத்தின் கடமையாயுமைக் களிப்போடு வாழ்த்துகின்றோம்.!

போட்டிகள் பலநிறைந்திட்ட இப்பூவுலக வாழ்க்கைதனிலே
புதுமைகள் பலசெய்து புதுயுகத்தினைப் படைத்தாய் -தமிழ்
ஊட்டிடும் நோக்கத்திலே உண்மையினை இலக்காக்கி
உழைப்பாலே உயர்ந்த நீ உயரங்கள் பலதைத்தொட்டாய்
கூட்டுக் குடும்பமாகவே எம்தமிழக் குவலயம் வாழவேண்டி
குரல்கொடுத்திடும் உன்னைக் குதூகலத்தால் வாழ்த்துகின்றோம்.!

வாட்டிடும் இன்னல்களில் மிக வதங்கிடும் நெஞ்சங்களுக்கு
வசந்தமாகவீசி நீயோ வாஞ்சையோடு அரவணைத்தாய் -கொடி
நாட்டிடும் நோக்கத்தை நனவிலும் நினைத்திடாமலேயே
நலிந்திடும் நம்உறவுகளுக்கு நல்லவற்றை நீ செய்தாய்
பூட்டுக்கள் பலவற்றைத் தகர்த்து புவியினில் நீநடைபயின்று
புதுமைகள் நிகழ்த்தியதனால் புழகாங்கிதமாய் வாழ்த்துகின்றோம்.!

சுட்டுகின்ற திசையெங்கும் சுழற் காற்றாய் சுழன்று வந்தாய்
சூழ்நிலைக்கு ஏற்றவாறு சுடராகவும் நீ யே ஒளிர்ந்தாய் -கரம்
நீட்டுகின்ற உறவுகளுக்கு நேசக்கரத்தை நீ கொடுத்தாய்
நிலமெல்லாம்படர்ந்து வென்று மனிதநேயத்தை நீ வளர்த்தாய்
சூட்டுவதற்கு மலர்மாலைகளைச் சுந்தரமாய்த் தொடுத்துவந்து
சுற்றவந்து மலர்தூவி உம்மை சுடச்சுடவே வாழ்த்துகின்றோம்...!

**திரு. வி.சபேசன்** (தலைவர்) **திரு. அ.புவனேந்திரன்** (செயலாளர்)

# ஆடற்கலாலயம் கிறீவீல்ட் - ஜேர்மனி

ஆடற்கலைமணி
திருமதி றெஜினி சத்தியகுமார்
நடன ஆசிரியர்



## வாழ்த்துச்செய்தி

நாலாறு ஆண்டுகளைக் கடந்து, நானிலம் போற்ற வெள்ளிவிழாக்காணும் மண்ணே!.. உனக்கு எங்கள் முதல் வணக்கம். புலம்பெயர்ந்து வேற்றுக்கலாச்சார மொழிச் சூழலில் வாழ்ந்தாலும் மண்ணை மறவாமல் மண் வாசம் வீசும் மண்ணே உன் பணி போற்றுதற்குரியது. கல்வி ,கலை, இலக்கியம் என்பதோடு, தாயக நிகழ்வுகள், உலக நிகழ்வுகள் என அனைத்தையும் உள்ளடக்கி இருமாத இதழாக விரிந்து வலம்வருவது நமக்கெல்லாம் கிடைத்த வரப்பிரசாதமே. சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை அனைவரையும் உள்வாங்கி அவர்களின் அறிவாற்றல்களையும் வளர்த்துவிடும் உன் திறமைகண்டு உவகை கொள்கிறோம். மாற்றான் தோட்டத்தில் மலர்ந்தாலும் மண்ணின் வாசமும், அழகும் குன்றாமல் பூர்த்துப்பொலிந்து நிற்பது நம்மவர்களுக்கெல்லாம் பெருமையே!...

காலத்தின் கட்டாயத்தால் நாம் புலம்பெயர்ந்துவிட்டோம். நாம் உண்டு..நம் குடும்பம் உண்டு என்று வாழும் நம்மவர்கள் மத்தியில் சஞ்சிகைப் பணியில் நீண்டகாலம் ஈடுபடுவதென்பது இலகுவான ஒன்றல்ல. வேலைப்பழு என்பதற்கு மேலாகப் பொருளாதாரச் சிக்கல்கள், மாற்றுக் கருத்துக்கள், ஆரோக்கிமற்ற விமர்சனங்கள் போன்ற இன்னோரன்ன இடர்களால் நசிந்துவிடாமல் புலத்தில் வாழும் சந்ததிகளின் எதிர்கால வளர்ச்சியினையும் தாய்மொழி ஊட்டலையும், கலை இலக்கிய ஆர்வலர்களின் திறமைகளை வளர்த்துவிடும் பணியினையும் மேற்கொள்ளும்"மண்" சஞ்சிகையின் ஆசிரியர் அவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. எத்தனை இடர்கள் வரினும் அத்தனையையும் தாண்டி அவரின் பணிகள் மென்மேலும் சிறப்பாகத் தொடரவேண்டும் என நாமும் வாழ்த்துகிறோம். நம் மலர்க்கரங்கள் ஒன்றுபட்டு சத்தியமாய் இது சாத்தியமாகுமே!..

புலம்பெயர் தமிழர்களுடன் என்று தம் பணியை வரையறுத்துக் கொள்ளாமல் தாயகத்தில் வாழும் நலிந்தோர், ஆதரவற்றோர் என அவர்களுக்கு நேசக்கரம் நீட்டும் தங்கள் எல்லையற்ற பணிகளைக்கண்டு தலைசாய்க்கிறோம். மண் சஞ்சிகை நடாத்திய கலைவிழாக்கள் அனைத்திலும் எம் ஆடற்கலாலய மாணவர்களுக்கு இடம்கொடுத்து, ஊக்கமும் உற்சாகமும் வழங்கிக் கலையாற்றல்களை வளர்த்துவரும் மண் ஆசிரியரை மனம்நிறைந்த நன்றிகளோடு வாழ்த்துகிறோம். இருமாதம் ஒரு இதழ் என இதழ்விரிக்கும் மண்ணே.. நீ மாதம் ஒருமுறை மலர்ந்திட வேண்டும் என மண்ணின் மைந்தர்களை நெஞ்சில் நிறுத்தி மனதார வாழ்த்துகிறோம்.

வாழ்க நின்பணி!...வளர்க தமிழ் மொழி!..

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
# INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE

*Non-Profit, Non-Political, Non-Religious, Charitable, Worldwide Registered, Tamil Cultural Organization - Est. in 1974.*

**Head Office:** 5310 Finch Ave. East, Unit #10, Toronto, Ontario M1S 5E8
Tel: (1) 647 829 4044 and (1) 647 298 5104 Email: raja@cfsginc.com
Web.www.imtcweb.com Email: imtc1974@ msn.com

**BOARD OF DIRECTORS**

*President*
**Mr. Vel Veluppillai***
(USA)

*Special President*
*Director of Tamil Studies*
**Mr. V. S. Thurairajah***
(Canada)

*Secretary General*
**Mr. Thurai Ganesalingam***
(Germany)

*Treasurer*
**Mr. Visu Selvarasa***
(France)

*Deputy Presidents*
**Mr. P. K. Shanmugam***
(Malaysia)
**Mr. S. Thyagalingam***
(Norway)

*Patrons*
**Mr. Micky Chetty***
(South Africa)

*Legal Administration*
**Dr. C. Ramamoorthy***
(India)

*Human Rights*
**Mr. N. R. Wickramasingam***
(Australia)

*Regulations & Discipline*
**Mr. E. R. Somaskandan***
(England)

*Assistant Secretary*
**Mr. R. Thavagopal***
(Sri Lanka)

*Assistant Treasurer*
**Mr. Vel Govindan ***
(Mauritius)

*Administrative Secretary*
**Mr. Waran K. Vigneswaran**
(Canada)

திரு. வை. சிவராசா
பிரதம ஆசிரியர்
மண், கலை, இலக்கிய
சமூக இருமாத இதழ்



## வெள்ளிவிழா சிறப்பு மலர்

ஊடகத்துறையில் 25 ஆண்டுகள் நிலைத்து நிற்பது என்பது எவ்வளவு கஸ்டமான காரியம். அத்தனை தடைகளையும் தாண்டி எம் மண்ணின் மைந்தன் வெள்ளிவிழா கொண்டாடும் இவ்வேளையில் அம்மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

ஜேர்மனியில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு மகாநாட்டில் தாங்கள் பங்கு பற்றிச் சிறப்பித்து எனக்கு மிகுந்த சந்தோசத்தை ஏற்படுத்தியது.

புலம் பெயர் நாடொன்றில் ஊடகப் பணியாற்றுவது என்பது ஒரு வரலாற்றுப் பணி. அடையாளத்தை இழந்து போகும் ஒரு இனத்தைத் தடுத்து நிறுத்தி எமது தமிழர் சமூகம் தொடர்ந்தும் தமிழர்கள் என்ற அடையாளத்தோடு வாழ வழி செய்யும் பணி. இந்த வரலாற்று நாயகர்கள் வாழும் வரை மொழி வாழும், பண்பாட்டு விழுமியங்கள் வளரும். தமிழரின் அடையாளமும் நிலைக்கும்.

வாழ்க உங்கள் தமிழ்ப் பணி!

அன்புடன்

வி.சு. துரைராசா
அகில சிறப்புத் தலைவர்
உ.த.ப.இயக்கம்

*(Canadian Govt. Patent No. 377188-1)*

**Bank:** CIBC,
1100 Ellesmere Road,
Toronto, Ontario
M1P 2X3 Canada
A/C No.
**01732 -2314118**

***President's Email***
**Mr. Vel Veluppillai**
Email: velpilai@hotmail.com

IMTC News Magazine
(Ulaka Thamilar Kural)

***Secretary Gentral's Office***
**Mr. Thurai Ganesalingam**
Salzbergener Str. 142
48431 Rheine
Germany
Tel/Fax: (49) 59 711 4258
Email: imtc1974@yahoo.com

***Administration's Office***
**Mr. V. S. Thurairajah**
Special President
Director of Tamil Studies
5310 Finch Ave. E. Unit #10
Toronto, ON M1S 5E8
Tel: 416-548-7300
Cell: 647-829-4044

***Treasure's Office***
**Mr. Visu Selvarajah**
36 Place Des Avnettes
91000 Evry, France
Email: vselva@hotmail.fr
Cell: 0033651139586
Office: 0033160784689
Fax: 0033170908644

[IMTC have representatives in 42 Countries]

IMTC project site under construction at Maruthanagar, Karachchi, Kilinochchi(Jaffna), Sri Lanka

# வாழ்த்துச்செய்தி

எம் சொக்கலிங்கம் J.P
கலாபூ சணம் (முத்துச்சொக்கள்)
உடப்பு - இலங்கை

"பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்ற வானில் நனி சிறந்தது" என்பார்கள் கற்றறிந்தோர். ஏனெனில் ஒரு இனமானது தனித்துவத்துடனும், கலை பண்பாடுடனும் சிறப்புடன் வாழவேண்டுமாயின் அவர்கள் பிறந்த மண் (நாடு) அடிமைப்படாமல் தனித்தன்மையுடன் சகல ஜனநாயக உரிமைகள் பெற்று வாழவேண்டும். அப்போதுதான் ஒரு இனமானது எப்போதும் தனது மொழி, பண்பாடு, கலைகளோடு நிமிர்ந்து நிற்கவேண்டிய நிலைமையை உருவாக்க முடியும்.

அப்பணியை மண் என்ற பெயர்கொண்டு இருபத்தைந்து ஆண்டுகளாக ஜேர்மனியில் செயற்பட்டுக்கொண்டு வருவது என்பது ஒரு சாதாரணமான செயல் என்று சொல்லிவிடமுடியாது. இதனால் உன் தொழிற்பாட்டை புகழ்வதற்கு எனக்கு வார்த்தைகள் இல்லாமல் வியப்படைகின்றேன். இருந்தும் மண்ணே நீ என்றும் எமது மண்ணின் பெருமை. எமது மொழிப் பெருமை. எமது குலப்பெருமைகளை மறவாமல் வளர்த்துக்கொண்டு வருவாயாக அதுவே நீ இவ்வுலகில் தோன்றியதன் பயனை அடைந்துள்ளாய்"தோன்றிற் புகழுடன் தோன்றுக" அப்புகழ் இதுவென்று எண்ணுகிறேன்.

நாம் நமது நாட்டைவிட்டு வந்து மிகவும் நீண்ட காலத்தையும் நெடுந்தூரத்தையும் கொண்டுள்ளோம். காலத்தால், தூராத்தால் கனவுகளில் வாழ்ந்துகொண்டுள்ளோம். வெளிநாட்டு வாழ்வு அநேகமானவர்களின் கண்களைப் பணம் மறைத்துவிட்டது. கானல் நீரான வாழ்க்கையை நிலையானது என்று நினைக்கச் செய்துள்ளது. மண்ணே!...இந்நிலைகளை உடைத்தெறியவேண்டியது உனது பொறுப்பாகும். இந்த வடு ஆண்டுகள் எவ்வளவு தடைகள் வந்தபோதும் அதையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு நாட்டுப் பற்றையும், மொழிப்பற்றையும் வளர்த்துக்கொண்டு வருகின்றாய்.. இனியும் அதை அயராது செய்வாய் என்று நாம் எல்லாம் நம்புகிறோம்.

நாம் வேறு நாடுகளுக்குப் போன சூழல் வேறு. நாம் வாழ்ந்த வாழ்க்கையும் வேறு..ஆனால் இன்று வாழ்ந்துகொண்டுள்ள இளம் சமுதாயம் வாழ்கின்ற வாழ்க்கை வேறு. சூழல் வேறு. நாமே சிறு குட்டையில் மூழ்காமல் இருந்தோம். ஆனால் இன்றைய இளம் சமூகம் பெரிய சமுத்திரத்தில் தமது வாழ்க்கைப் படகைச் செலுத்திக் கொண்டிருக்கிறது. அவ்விளம் சமுதாயம் சமுத்திரத்தில் மூழ்கிப்போகாமல் இருப்பதற்கு உனது பணியாக எமது மொழி, நாடு (மண்) கலை, கலாச்சாரம், பண்பாடு, மண் வாசனையை எப்போதும் வளர்த்துவர வேண்டும் என்பதோடு அதைச் செம்மையாகச் செய்வாய் என்ற நம்பிக்கையுடன் என்றும் வாழ்க வளர்க என்று மனமார வாழ்த்துகிறேன்!..

எங்கள் மண்ணும் எங்கள் மொழியும் மங்காத புகழ் என்றும்

மண்ணே முழங்கு!... மண்ணே முழங்கு!...



# வாழ்த்து...

உடுவை எஸ்.தில்லைநடராசா (ஓய்வு நிலை)
இலங்கை கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்
லண்டன்



பொதுவாக எல்லோருக்கும் குறிப்பாக மாணவருக்கும் பல விடயங்களைத் தரும் "மண்" சஞ்சிகை பிறந்த நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு புலம் பெயர்ந்த வாழ்விலும் "தமிழால் ஒன்றிணைந்து தமிழுக்குப் பணி செய்வோம்" என்னும் தாரக மந்திரத்துடன் இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியாகும் சஞ்சிகையை இருபத்தைந்து வருடங்களாகத் தொடர்ந்து வெளியிட்டு வருவதுடன், இப்போது- வெள்ளிவிழாச் சிறப்பு மலருடன்- சிறுவர்களுக்கான விசேட நூல் ஒன்றையும் வெளியிடுவது பெருமைக்குரிய சாதனை. அட்டைப்பட அமைப்பு- அச்சிடும் கடதாசி- பயன்படுத்தும் எழுத்துரு- பொருத்தமாக இணைத்துக் கொள்ளும் படங்கள்- படிப்போருக்கு பயன்தரத்தக்க படைப்புகள் என ஒவ்வொரு விடயங்களிலும் அதிக அக்கறை செலுத்தி உயர்ந்த தரம் பேணிக் கொண்டு ஒழுங்காக ஒரு சஞ்சிகை வெளியிடுவது சிரமம். இலங்கையில் நிரந்தரமான அரசாங்க உத்தியோகத்தைத் துறந்து ஜேர்மனிக்கு புலம் பெயர்ந்த வி.சிவராஜா சிரமமான காரியத்தைச் சாதித்துக் கொண்டிருக்கிறார்.

ஆம்! 1990 ஆம் ஆண்டில் ஜேர்மனியில் வி.சிவராஜாவால் ஆரம்பிக்கப்பட்டு..தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகளாக, இரு மாதங்களுக்கொரு முறை வெளிவரும் சஞ்சிகை, "மண்"

கல்வி, சமூகம், ,கலை ,இலக்கியம் எனப் பொதுவாகக் குறிப்பிட்டாலும்- ஒவ்வொரு துறையையும் விரிவாக்கி அவற்றின் பல்வேறு அருமையான அம்சங்களை அழகாகத் தொகுத்தளிப்பதும்- விளம்பரங்களுக்கா கப் பக்கங்களை வீணடிக்காமையும் "மண்" சஞ்சிகையின் தனிச்சிறப்பு. எதிச் சஞ்சிகைக்கு உலகின் பல் வேறு பகுதிகளிலிருந்து பலர் தொடர்ச்சியாக விடயதானம் செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்களில் சிலர்:- கவிஞர் காசி ஆனந்தன், டென்மார்க் வி.ஜீவகு மாரன், ஜேர்மனி சிவா,அம்பலவன்-புவனேந்திரன், சகோதரி- கிளாடிஸ்.ஜெயரட்னம்-கிளிநொச்சி, மேழிக்குமரன்- வவுனியா, மட்டுவில் ஞானகுமரன், திருமதி.ஜெயா நடேசன், ஏ.ஜே.ஞானேந்திரன் சுவிற்சலாந்து, முல்லை அமுதன்-பிரித்தானியா, கலைவாணி ஏகானந்தராஜா. இவர்கள் மட்டுமல்ல!...அவ்வப் போது கவிஞர் கண்ணதாசனின் அனுபவ மொழிகளையும், அது போல காலம் காவு கொண்ட படைப்பாளிகளின் பயன்நிறை ஆக்கங்களையும் சேர்த்துக்கொள்கிறார். மேலும் பலரது அனுபவ-அறிவுப்பகிர்வுகளையும் பார்க்க முடிந்தது. வவுனியா அரசாங்க அதிபர்-மாகாண அமைச்சு செயலாளர் உட்பட பல பதவிகளை வகித்த உயர் உத்தியோகத்தர் சி.த. மார்க்கண்டு எமது கிராமப்புறங்களில் காணப்படும் கற்றாளை வகைகளின் மருத்துவப் பயன்பாட்டை ஓரிதழில் சிறப்பாக எழுதியுள்ளார்.வெறும் அனுபசாலிகள்போஷாக்குச் சத்து நிறைந்த வீட்டுத் தோட்டக்கீரை வகை, நந்தியாவட்டைப்பூவை நீரிழிவுக்குப் பயன்படுத்தும் முறை பற்றி குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு இதழிலும் "குறளும் பொருளும்" என்னும் தலைப்பில் உலகப் பொதுமறை எனப்போற்றப்படும் திருக்குறளிலிருந்து பத்து குறளையும் அவற்றின் கருத்தையும் தெரிவிக்க இரு பக்கங்கள் ஒதுக்கப் படுகின்றன. ஆத்திசூடி போன்ற நீதி நூல்களிலிருந்து விடயங்களை சிறுவர்கள் எளிதாக விளங்கக்கூடியதாக தெளிவுரை சேர்க்கப்படுகிறது. உதாரணத்துக்கு "மன்று பறித்து உண்ணேல்" "இயல்பு அல்லாதன செய்யேல்""ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களைக் குறிப்பிடலாம்.

மற்றும் கவிச் சோலை-இலக்கியச்சாரல்-சிறுகதை- கட்டுரை- விடுகதைகளும் விடைகளும் ஆகிய அம்சங்களும் கணிசமான அளவில் உண்டு. "சுவரின்றி சித்திரம்" வரைய முடியாதென்பதால் -சுகாதாரக்குறிப்பு- நாளும் பொழுதும் நடப்பவற்றை அறிந்து கொள்ள செய்திக் கண்ணோட்டம்-விஞ்ஞானம்-தொழில் நுட்பம் போன்ற வற்றுடன், பொது அறிவுத்தகவல் அடங்கிய வினாவிடைப் பகுதி- மாணவர்களை "விரைவாகவும் சரியாகவும்" செயற்பட தயாராக்கும் பகுதி குறுக்கெழுத்துப்போட்டி -இலக்கங்களைத் தொடர்பு படுத்தி வரைந்தனுப்பும் படத்துக்கு பரிசு உட்பட சிறுவர்களுக்கான போட்டிகள்-என சிறுவர்களை

ஊக்குவித்து உற்சாகப் படுத்தும் அம்சங்கள் பல வெளிவருகின்றன. பல்வேறு நாடுகளில் வாழும் சிறுவர்கள் இன மத தேச வேறுபாடின்றி, "மண்" இதழ்களை அக்கறையுடன் படித்து போட்டிகளில் பங்கு பற்றி பரிசில் பெறுவதைக் காண முடிகிறது. தொடர்ந்து படிப்பதன் மூலம், ஒத்த கருத்து எதிர்க்கருத்து சேர்த்தெழுதல்- பிரித்தெழுதல் உட்பட தமிழ் மொழியின் ஆழ அகலங்களை அறியக்கூடியதாக இருக்கும்.

இன்னும் ஒரு வினாவுக்கு பல விடைகளைத் தந்து பொருத்தமானதை எழுத வைப்பது, ஆங்கில எழுத்துகள் சுட்டும் சுருக்கத்தைத் தந்து, அதற்கான விரிவான கருத்தை தமிழில் தருவது பலராலும் வரவேற்கப்படும் பகுதியாகும்.

அகிலம் போற்றும் அன்னை அன்னை திரேசா, தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா என ஒவ்வொருவரையும் பெரிய அளவிலான படங்களோடு, அவர்களைப் பற்றிய ஆக்கங்களுடன் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் அம்சமும் வரவேற்கத்தக்கதே.

"வாழ்க்கை என்பது கடவுளின் அன்பளிப்பு அதை ஏற்றுக்கொள்" என சிறு வயதிலேயே மனதைப் பக்குவப் படுத்தி, "மனம் திறந்து பேசுங்கள்-ஆனால் மனதில் பட்டதெல்லாம் பேசாதீர்கள்".சிலர் புரிந்து கொள்வார்கள்.,சிலர் பிரிந்து செல்வார்கள்" என்று "மண்" புத்திமதிகளையும் புகட்டுகின்றது சுனாமி, சுறாவளி, வெள்ளம், நிலநடுக்கம் மற்றும் இயற்கை அழிவுகள் தொடர்பான புள்ளி விபரம் அதற்கேற்ப நிழற்படங்கள் வரை படங்கள்- ஆகியவற்றையும் காண முடிந்தது. யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக பிரிவுகள், பிரதான நகரங்கள், பரப்பளவு கிராம சேவகர் எண்ணிக்கை ஆகியவற்றையும் தரும் இச்சஞ்சிகை -உலகின் பாதுகாப்பான நகரங்கள்- பாதுகாப் பற்ற நகரங்கள்- களவு கொள்ளை அதிகமாகப் போகும் இடங்கள்-உலகில் கார்கள் அதிகமாகக் களவு போகுமிடங்கள் ஆகியவற்றையும் தெரிவிக்கிறது.

இலங்கையின் கல்வித்துறையில் முக்கியமான காலப் பகுதிகளை ,1945-இலவசக் கல்வித் திட்டம் ஆரம்பம், 1952-புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பம், 1962-பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றமை, 1980- இலவச பாடநூல் வழங்கல் ஆரம்பம், 1986-மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம், 1987-தேசிய பாடசாலைகள் உருவாக்கம், 1989-இலவச மதிய உணவுத்திட்டம் அறிமுகம், 1993 இலவச சீருடை விநியோகம் ஆரம்பம் என சுட்டிக்காட்டுகின்றது.

இடையிடையே பொதுவாக அறிந்து கொள்ள சுவையான பகுதிகளும் உண்டு. ஒன்றிரண்டு:-

ஒரு மொழி செம் மொழி எனச் சிறப்பு பெறுவதற்கு அம்மொழி பன்னிரு அம்சங்களில் தகுதியுடையதாக இருக்க வேண்டும். அவையாவன:- தொன்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்பு, நடு நிலைமை, தாய்மைத்தன்மை, கலை, பண்பாடு, பட்டறிவு, பிறமொழித்தாக்கமின்மை, இலக்கிய வளம், உயர் சிந்தனை, மொழியியல் கோட்பாடுகள். இத்தனை சிறப்புகளும் தமிழ்மொழிக்குண்டு.

"பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு" வாழ்க என வாழ்த்துவது- தமிழர்களால் மிகவும் உயர்ந்த போற்றப் படுகின்ற பின்வரும் பதினாறு பெறுபேறுகளைக் குறிக்கின்றது:-அறிவு, அழகு, ஆற்றல், ஒழுக்கம், பண்பு, இளமை, துணிவு, வெற்றி, புகழ், பொன், நெல், நல்வினை, நுகர்ச்சி, நன்மைகள், நோயின்மை, நீண்ட ஆயுள். தமிழர்களின் தனிப்பெருங்கலையான பரத நாட்டியம் தொடர்பான கட்டுரையில் "நிற்றல், "அரை மண்டி", "முழுமண்டி" ஆகிய தோற்றங்களை படங்களுன் விளக்கும் முறையை ரசிக்கலாம்

"வெளிநாட்டில் தமிழருக்கு தினம் தினம் கொண்டாட்டம் ஊரில் உள்ள தமிழனுக்கோ நித்தம் ஒரு திண்டாட்டம்" என வரும் கவிதையில் அவர்களின் உள்ளத்தைக் காணலாம்.நான்கு ஆண்டுகளுக்கு முன் தீட்டிய தலையங்கத்தில் வரும் வரிகள் இன்றைக்கும் பொருத்தமாக இருப்பது போல ஓர் உணர்வு:-

"தற்போது உலகெங்கும் இயற்கை அனர்த்தங்களின் தாக்கம் அதிகரித்து வருவதால்" சில நாடுகளில் சர்வாதிகார ஆட்சி புரியும் தலைவர்கள்--- மக்கள் புரட்சி வெடித்துள்ளபடியால் தலைவர்கள் நாட்டை விட்டு, ஆட்சி அதிகாரத்தை விட்டு ஓட வேண்டிய நிலை, ஆட்சி மாற்றத்துக்கான போராட்டங்கள்,

ஒரு நாட்டின் ஆட்சி நல்லதாக மக்களின் வாழ்த்தை மனதாரப் பெற வேண்டுமானால்,. அரசியல் தலைவர்களும் மதவாதிகளும் மக்களை மக்களாக மதிக்க வேண்டும். ஆயுத அடக்குமுறை களைக்கைவிட்டு பல்லின மக்களின் சுய உரிமை, சுயாட்சி, சுதந்திரம் தேசியம் வலியுறுத்தப்படல் வேண்டும். தேர்தல் திருவிழாக்களில் காலத்தை வீணடிக்காமல் சகல தரப்பினரும் இதயசுத்தியோடு பிரச்சினைகளை அணுகித் தீர்வு காண்பதே சிறப்பான விடயமாகும் என்கிறார், ஆசிரியர் வி.சிவராஜா.

சிறுவயது முதலே வாராந்த மாதாந்த சஞ்சிகைகளில் துணுக்குகளைப் படித்து சிரித்து மகிழ்வது வழக்கம். இந்த சஞ்சிகையிலும் ஒவ்வொரு பக்கம் சிரிப்பு தரும் துணுக்குகளால் நிறைந்திருக்கும். ஆண்டுகள் பல கடந்தாலும் அந்த துணுக்குகள் நினைவில் நிலைத்திருக்கின்றன. உதாரணத்துக்கு:-

என்ன நரியாரே! காட்டில் எல்லா மிருகங்களும் ஏன் கூட்டம் கூடி நிக்கிறாங்கள்? என ஒரு சிங்கம் கேட்ட கேள்விக்கு-நரியின் பதில்:- தலைவரே! இந்தக் காட்டுக்கு றொம்ப வருசமாக நீங்கள் தலைவரா இருக்கிறீங்களாம் அதனாலே உங்களை மாத்திட்டுப் புதுத்தலைவரைத் தேர்ந்தெடுக்கப் போறாங்களாம்.

இன்னொன்று :-அதோ அந்தப் பையன் ஒரு நடமாடும் நூல் நிலையம் என்று சொல்லும் ஒருவர், தான்சொல்வதை, - தினமும் பாடசாலைக்குப் போகும்போது சுமக்கமுடியாத புத்தகங்களைச் சுமந்து கொண்டு போகிறான் எனக் காரணம் சொல்லி நியாயப்படுத்துகின்றார்

மண் இதழ்களைப் படிக்கும் போது---எனது கல்லூ ரி நாட்களில் ஆசிரியர் அறிமுகப்படுத்தி வற்புறுத்தி வாசிக்க வைத்த Readers Digest சஞ்சிகை, பின்னர் இந்தியாவிலிருந்து பார்வைக்கு கிடைத்த "மஞ்சரி" சஞ்சிகை நினைவுக்கு வருகிறது.

இச் சஞ்சிகையின் இன்னொரு முக்கிய பணியைக் குறிப்பிட்டேயாக வேண்டும். "மனிதநேயப்பணி" என்னும் கருத்திட்டத்தின் கீழ் உதவிகளைப்பெற்று உதவுவோர் விபரத்தைப் பகிரங்கப் படுத்துவதோடு, உதவி பெறுவோரிடமிருந்து உரிய முறையில் பற்றுச்சீட்டுகள் பெற்று அவற்றின் புகைப்பட ப்பிரதிகளைகளையும் பிரசரிக்கின்றது.

.மட்டக்களப்பு சந்திவெளி மாணிக்கவாசகர் சிறுவர் பராமரிப்பு இல்லம், கிளிநொச்சி ஊனமுற் றோர் புனர்வாழ்வுச் சங்கம், வவுனியா அருளகம், கிளிநொச்சி ரூத் பெண்கள் இல்லம், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம், ஜெயபுரம் ரூத் மிஷன், கிளிநொச்சி, களுதாவளை திருஞான சம்பந்தர் குருகுலம், வவுனியா.இந்து அன்பகம் சிறுவர் இல்லம்-வேப்பங்குளம்-, ஸ்ரீ சண்முகா பெண்கள் இல்லம் ஆகியன அனுப்பி வைத்த பற்றுச்சீட்டுகள் நன்றிக்கடிதங்கள் ஆகியவற்றின் புகைப்படப்பிரதிகளும் சஞ்சிகையில் அடங்கியுள்ளன.

படித்து முடித்து விட்டோமே என்ற எண்ணத்துடன் வீசி எறிந்து விட முடியாது. பின்பு எமக்கு மட்டுமல்ல- அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் அவசியமாகத் தேவைப்படலாம் என்ற எண்ணத்துடன் சேகரித்து வைக்கக்கூடிய பயன் நிறைந்த பல விடயங்களின் தொகுப்பு

எனவே, வெள்ளி விழா காணும் "மண்" சஞ்சிகை மேலும் பல விழாக்களைக்காண நெஞ்சார வாழ்த்தி மகிழ்கின்றேன்.

# 'மண்' சாதனைகளைப்புரிய வாழ்த்துகிறேன்...

பல்கலைச்சுடர் தமிழ்மணி கே.கே. அருந்தவராசா
(மேழிக்குமரன்)
வவுனியா



இருபத்தைந்து வருடங்களைக் கடந்து வெள்ளிவிழாக்காணும் "மண்" சஞ்சிகைக்கு எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள். 1984, 85, 86ம் ஆண்டுகள் ஜேர்மனியின் தமிழ் இலக்கியக் களத்தின் முக்கியமான காலகட்டம் என்று சொல்லமுடியும். இக்கால கட்டங்களில்தான் தாயகத்திலிருந்து வருகை தந்த முதலாவது சந்ததியினர் இலக்கியக் களத்தில் பெருவீச்சுடன் செயற்பட்டனர்.

இக்காலகட்டங்களில் ஜேர்மனியில் மட்டும் சுமார் 35 சஞ்சிகைகள் வெளிவந்தன. இதனைத் தொடர்ந்து இலக்கிய சந்திப்பு உருவானது. பலவகையான இலக்கியக் களங்களும் உருவாயின. பல ஆரோக்கியமான சஞ்சிகைகளும், பல குழப்பகரமான சஞ்சிகைகளும் உருவாகின. இந்நாட்களில்தான்

நண்பர் சிவராஜா "மண்"சஞ்சிகையை தொடங்கினார். பல இலக்கிய சந்திப்புகளில் சந்தித்திருக்கிறோம். தொடர்ந்து ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை, ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ்ப் போட்டிகள், திருக்குறள் போட்டிகளுக்கான நடுவர்கள் என பல தளங்களில் நானும் நண்பர் சிவராஜாவும் இணைந்து பணியாற்றியிருக்கிறோம். இதன் தொடர்ச்சி நாம் குடும்ப நண்பர்களாக பரிணமித்து இன்றுவரை தொடர்கிறது.மண்ணின் ஐந்தாவது, பத்தாவது, பதினைந்தாவது, இருபதாவது ஆண்டு விழாக்களில் நான் கலந்து கொண்டமை இன்னும் பசுமையாக என் நிகழ்வுகளில் இருபதாவது ஆண்டு விழாவில் நானும் நண்பர் புத்திசிகாமணியும் "மண்" சஞ்சிகையின் இருபதாண்டுகளை ஆய்வுசெய்து நிகழ்ச்சி ஒன்றை தயாரித்து அளித்திருந்தோம்.

இந்த இருபதாவது ஆண்டுவிழாவில், தொடர்ச்சியாக மண் சஞ்சிகையில் எழுதி வந்தவன் என என்னை மண் சஞ்சிகை பரிசு வழங்கிக் கௌரவித்தது.அன்று வலம் வந்த 35 சஞ்சிகைகளில் இன்று இயங்கிக் கொண்டிருப்பதும், வெள்ளிவிழாக் காண்பதும் மண்சஞ்சிகை மட்டும்தான் என்பது இனிப்பான, மகிழ்ச்சியான, பெருமிதம் கொள்ளவைக்கும் செய்தியாகும் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். மண் சஞ்சிகை என்பது தனது இருபத்தைந்து ஆண்டுகாலத்தில் மூன்று முக்கிய பணிகளை மேற்கொண்டுள்ளது. அவற்றில் வெற்றி கண்டிருக்கிறது என்பதனை நான் இங்கு பதிவு செய்வதில் மகிழ்வு கொள்கிறேன்.ஜேர்மனியில் உள்ள பலதரப்பட்ட எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், கல்வியலாளர்கள் அனைவரையும் உள்வாங்கி அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. இதுதான் எனது கொள்கை இதற்கு உடன்படுபவர்களை மட்டும்தான் உள்வாங்குவேன், மற்றவர்களுக்கு இடம்தரமாட்டேன் என்னும் வரட்டுச் சித்தாந்தக்குள் அகப்பட்டுக் கொள்ளாது. அனைவரும் வாருங்கள் என்று வரவேற்று அவரவர் கருத்துக்களுக்கு அவரவரே பொறுப்பாளர்கள்.

நீங்கள் தாராளமாக உங்கள் கருத்துக்களை பதிவு செய்யுங்கள் என்று ஒரு திறந்த புத்தகமாகச் செயற்பட்டது. ஜேர்மனியில் நடைபெறும் தமிழர்கள் நிகழ்வுகளை குழுவாதநோக்கில் பார்க்காது அனைத்தையும் எழுதியது. ஜேர்மனியில் இடம்பெறும் செய்திகள், தாயகத்து செய்திகள், உலகச் செய்திகள் என ஒரு பார்வையில் அனைத்தையும் வாசிக்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தது. மண்மீதான அனைத்து விமர்சனங்களையும் இருகரம்கூப்பி வரவேற்றது. அன்னை திரேசா, நெல்சன்மண்டேலா, எலிசபெத் மகாராணி போன்ற தலைவர்கள், பெரியார்களின்

படங்கள், எஸ்.எம்.கோபாலரட்ணம் போன்ற ஈழத்தவர் படங்கள் போன்றவற்றை முன்மட்டையில் அச்சிட்டு பெருமைப்படுத்தியமை. வடக்கு கிழக்கில் உள்ள சிறுவர் இல்லங்களின் படங்களை உள்மட்டையில் போட்டு அறிமுகம் செய்து வைத்தமை போன்ற பலவிதமான நல்ல வேலைத்திட்டங்களை முதலாவது பணியாகமேற்கொண்டு வெற்றி கண்டிருக்கிறது. சிறுவர் அமுதம் போன்ற சிறுவர் சஞ்சிகைகள் வெளிவந்து நின்று போயின. ஆனால் மண் சஞ்சிகை சற்று வித்தியாசமாக பெரியவர்களுக்கான சஞ்சிகைக் களத்தினூடே சிறுவர்களையும் இணைத்துக் கொண்டு அவர்களுக்காக பக்கங்களை ஒதுக்கிச் செயற்பட்டு வருவது பாராட்டுக்குரியது. புலம்பெயர் தேசங்களில் மூன்றாவது சந்ததி உருவாகிவிட்ட இன்றைய நாட்களிலும் சிறுவர் பகுதியை மண் சிறப்பாக நடாத்தி வருவதோடு, சிறுவர்களும் ஆர்வமுடன் கலந்து கொள்வது மண்ணின் ஆச்சரியப்படத்தக்க வெற்றியும் சிறப்புமாகும்.

சிறுவர் வட்டம் ஒன்றை மண்சஞ்சிகை நடாத்தி வருகிறது. சிறுவர்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டியை மண் நீண்டகாலமாக வெற்றியுடன் நடாத்தி வருகிறது. இதுவரை 85 குறுக்கெழுத்துப் போட்டிகள் நடாத்தப்பட்டிருக்கின்றன. சிறுவர்களுக்கான வினாவிடைப் போட்டி என்னும் பொதுஅறிவுப் போட்டியை மண் நடாத்தி வருகிறது. இதுவரை 158 வினாவிடைப் போட்டிகள் நடாத்தப்பட்டிருக்கின்றன என்பது மண்ணின் சிறப்பு. ஒவ்வொரு இதழிலும் சிறுவர்கள் வர்ணம் தீட்டுவதற்கான ஓவியம் ஒன்றுக்கான தாள் சிறுவர்களுக்கு வந்து சேருகிறது.

நீண்டகாலமாக நடைபெற்றுவரும் இம்முயற்சியில் பல சிறுவர்கள் ஆர்வமுடன் கலந்து கொள்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சிறுவர்களுக்காக குறளும் பொருளும் என்னும் பகுதி ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒவ்வொரு அதிகாரம் இடம்பெறுவது மண்ணின் சிறப்பு. மண் தனது ஆண்டுவிழாக்களைக் கொண்டாடும் போதெல்லாம் சிறுவர்களுக்கான கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடாத்தி வந்திருக்கிறது. இது பெரியவர்களுக்கும் கட்டுரை, சிறுகதை, கவிதைப் போட்டிகள் என நடாத்தப்பட்டிருக்கிறது. இப்போட்டிகளுக்கும் மற்றும் ஒவ்வொரு இதழிலும் நடாத்தப்படும் குறுக்கெழுத்துப் போட்டி, வினாவிடைப் போட்டி போன்றவற்றுக்கும் பரிசுகளாக சிறந்த புத்தகங்கள் வழங்கப்படுவது மண்ணின் சிறப்பு. "வாசிப்பதனால் மனிதன் பூரணம் அடைகிறான்" என்பதற்கிணங்க மண்சஞ்சிகை செயற்பட்டு வருகிறது.

எல்லாச் சஞ்சிகைகளைப் போல இலக்கியக்களமாக மட்டும் இல்லாமல் ஏதாவது சமூகத்திற்கு பயன்படும் இன்னுமொரு வேலைத்திட்டத்தினையும் மண்சஞ்சிகையினூடே செய்ய வேண்டும் என மண் ஆசிரியர் சிவராஜா ஆழ்ந்து சிந்தித்தார். அதன் பயனாக வடக்கு கிழக்கில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கு மண்சஞ்சிகை வாசகர்களிடமிருந்து நிதி சேகரித்து அனுப்புவது என்ற வேலைத்திட்டத்தை தொடங்கினார். ஆரம்பத்தில் அது அவ்வளவு இலகுவானதாக இருக்கவில்லை. எதனையும் சந்தேகத்துடன் பார்ப்பது நமது சமூகத்தின் சிறந்த பண்பாடு. அது மண்ணையும் விட்டு வைக்கவில்லை. சிறுவர் இல்லங்களை காரணம் காட்டி சிவராஜா ஏதாவது பயனடையப் போகிறாரா என்று ஐயப்பட்டவர் பலருண்டு.

ஜேர்மனியில் நடைபெறும் பிறந்தநாள் விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், திருமணங்கள் மிகவும் ஆடம்பரமாக நடாத்தப்படும். ஆயிரக்கணக்கில் செலவிடப்படும். இப்படி நடாத்தும் தனக்கு தெரிந்தவர்களிடம் சிவராஜா போய், உங்களது செலவில் ஒரு நூறு யூரோ (EURO) தாருங்கள் நான் வடக்கு கிழக்கில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கு அனுப்புகிறேன். அவர்கள் வயிறார உண்டு உங்களை வாழ்த்துவார்கள் என்று வேண்டினார். சிவராஜாவை புரிந்து கொண்டவர்கள் உதவினார்கள்.

இவ்வேலைத் திட்டத்திற்கு சிவராஜா மேற்கொண்ட நடவடிக்கை பலரை திரும்பிப் பார்க்க வைத்தது. கிடைக்கும் உதவிகள், அவை அனுப்படும் சிறுவர் இல்லங்கள் போன்ற கணக்கு விபரங்களை திறந்த புத்தகமாக மண்ணில் வெளியிட்டார். சிறுவர் இல்லங்கள் அனுப்பும் நன்றிக்கடிகதங்களையும் மண்ணில் பிரசுரித்தார். இதனால் காலப்போக்கில் மண்மீது நம்பிக்கை வைத்து பலர் மண்ணின் குழந்தைகளுக்கு உதவ முன்வந்தனர்.

கிழக்கில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கு இதுவரை சுமார் 80ஆயிரம் யூரோ வரை சேர்த்து அனுப்பியிருப்பது இமாலய சாதனை. மண் ஆசிரியர் சிவராஜாவை புலம்பெயர் தமிழலகம் இனங்கண்டு கொள்ள வேண்டும்.புலம்பெயர்ந்த முதலாவது சந்ததியினஊடாக சிறுவர்களுக்காக உதவுவது என்று தொடங்கிய சிவராஜா இரண்டாவது சந்ததியினரையும் இணைத்துக் கொள்வது என்று முடிவெடுத்தார். அதனை எவ்வாறு செயற்படுத்தலாம் என்று யோசித்து முடிவெடுத்து செயற்படுத்தினார்.வடக்கு கிழக்கில் உள்ள சிறுவர் இல்லங்களுக்கு உதவுதல் ஒருபுறம் நடைபெற்றாலும். அந்த இல்லங்களிலுள்ள சிறுவர்களை தத்தெடுப்பது என்ற வேலைத்திட்டத்தினை மேற்கொண்டார். அதன் முதலாவது தத்தெடுப்பாளராக சிவராஜாவின் மகள் சிவதர்சினியே முன்வந்தார். அதனைத் தொடர்ந்து பல இளம் வயதினர் முன்வந்து சிறுவர்களை தத்தெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

அதன் விபரங்களை ஒவ்வொரு இதழிலும் சிவராஜா இடம்பெறச் செய்தார். தத்தெடுத்த பிள்ளைகள் சிறுவர் இல்லங்களிலேயே இருந்து வளருவர். தத்தெடுப்போர் அவர்களுக்கான செலவுகளை ஆண்டுதோறும் அனுப்பி வைப்பர். ஒரு பிள்ளையின் கல்வி, உணவு, உடை உட்பட அனைத்துச் செலவுகளுமாக ஆண்டொன்றுக்கு 480 யூரோ தத்தெடுப்பவர் கொடுத்துதவுவார். இது தவிர தனித்து கல்விக்கான செலவு, தனித்து உணவு, உடைக்கான செலவு என்றும் உதவமுடியும். செயற்கரிய செய்வார் பெரியர் என்பதற்கிணங்க சிவராஜா பாராட்டுதற்கும் போற்றுதற்குமுரிய பெரியரே.2004ம் ஆண்டு சுனாமி என்னும் பேரழிவு இலங்கையை தாக்கியபோது. மண் சஞ்சிகையினூடாக நிதி சேகரித்து பலஆயிரம் யூரோக்களை சிவராஜா தாயகத்தில் அல்லலுறுவோருக்கு அனுப்பி வைத்து கைகொடுத்து உதவினார்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்துவர சிவராஜா பட்டவை எல்லாம் வெற்றிகள் மட்டும் அல்ல பலதுன்பங்களை, இடர்களை தாண்டித்தான் இந்தச் சேவையை நடாத்தி வெற்றிகண்டிருக்கிறார் என்பது உண்மையாகும். இவரின் இந்த அரிய சேவைக்கு இவரின் துணைவியார் திருமதி.இராஜேஸ்வரி சிவராஜா, மூன்று பிள்ளைகள் என குடும்பமே பக்கபலமாய் இருந்திருக்கிறது. அதனால்தான் அவரால் இந்த வெற்றியை அடையமுடிந்தது என்பது மறுக்க முடியாத, மறக்க முடியாத உண்மை. இவர்கள் பலபேருக்கு முன்உதாரணமாக விளங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.மண் சஞ்சிகை தனது கடந்தகாலத் தடங்களில் பல சிறுகதை எழுத்தாளர்களை, பல பத்தி எழுத்தாளர்களை, பல கட்டுரையாளர்களை, பல கவிஞர்களை புலம்பெயர் தேசத்துக்கு இனங்காட்டியுள்ளது. மென்மேலும் தனது சேவைகளை ஆற்றிப் பலவெற்றிகளைக் குவிக்க வேண்டும். மண்சஞ்சிகை நமது சமூகத்துக்கு பயன்பெற வேண்டும். நமது சமூகம் மண் சஞ்சிகையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மண்சஞ்சிகை வெள்ளிவிழா மட்டுமல்லாது பொன்விழா, வைரவிழா, பவளவிழா எனக்கண்டு சாதனைகளைப் புரியவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.



# மாண்புற வாழ் மண்!.. வெள்ளிவிழா வாழ்த்து..

திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் BA
அதிபர் யாழ் - நாவற்குழி
மகாவித்தியாலயம்

மண் எனும் நங்கை
மகிழ்வுறும் உன் வரவு கண்டு
தமிழ் சால்புசார் பணி நன்று
மண் விட்டு மண் மாறி
மண்மணம் மாறா
மாண்புறு இலக்கிய பணிகண்டு
மனமகிழ்ந்து வாழ்த்த எண்ண
வயதோ உனக்கு இருபத்தைந்து
வாழ்ந்திட வேண்டும் - நீ பல்லாண்டு
பாரினில் பல்லாண்டு
எண்ணங்களாயிரம் கொண்டு
பொதுப்பணியாற்றும் சிந்தையின்
வண்ணங்கள் கண்டு மனம்
வாழ்த்த விளையுது நெஞ்சு
தன்னலம் மனதில் கொண்டு
தரணியில் மனிதர் வாழ
உன்னலம் தவிர்த்து உழைப்பினை விடுத்து
ஊக்கமாய் உதவிடும் குடும்ப உறவால்
ஊட்டம் பெற்றது எம்பள்ளி
ஆம் நாவற்குழிப் பள்ளி
நீரின் நீதத்தேவையறிந்து - நீவீர்
அளித்தீர் உதவி அன்று
பாரின் நீட்சி யுள்ளவரை - எம்பள்ளி
யாரும் மறந்திலர் பாரி கொடை
ஊரின் கலை கல்வி மொழி
உலகில் வளர்த்திட எண்ணி
தேரின் வடிவாய் "மண்" சஞ்சிகை
தேட்டமாய் ஆக்கியளித்து
ஊரினுறவும் உலகினுறவும்
ஒன்றிக்க உழைத்தாய் வாழி! வாழி!!
வெள்ளி விழா ஆண்டு வேகமாய் - நீ கண்டாய்
சொல்ல வார்த்தையில்லை
அள்ளி யள்ளி யளித்திடும்
இலக்கியச் சுவை விளம்ப
தெள்ளிய இப்பணி தீர்க்கமாய்
என்றும் செய்து
நல்லிதழாய் நயமுறத் தொடர்ந்து
பொன்விழா மணிவிழாவென
உள்ள விழாவெல்லாம் ஒன்றொன்றாய் பெற்று
உயர வேண்டும் நூற்றாண்டு நூற்றாண்டு
வாழி நீ பல்லாண்டு!...





# வாழ்த்துக்கவிதை

திருமதி ஜெயா நடேசன்
ஜேர்மனி

வானம் சிந்துவதால் மண்ணுக்கு மகிமை
தாவரங்கள் பூக்கள் சிந்துவதும்
கனி கொடுப்பதும் விதையாவதும்
தாவரத்தின் ஆணிவேர் கொண்ட பலமே.

மண்ணே நீ ஒரு ஆலவிருட்சம்
அதில் ஆணிவேராக நின்றுழைக்கும்
ஆசிரியர் உதவியாளர்களுக்கும் என் ஆசிகள் பல.

விருட்சம் பெரிது, ஆனால் அது தரும்
பழமோ மிகச்சிறிது, கீச்சிட்டு
'ளையாடும் வருங்கால சமுதாயதாயத்திற்கும்,

அல்லலுறும் தாயக மக்களுக்கும், சிறார்களுக்கும்
உதவிக்கரம் கொடுக்க வழி செய்தாய்.

பல உறவுகளை கவிதை , கட்டுரை, செய்திகள்
போன்ற பலவகையான சிறப்பு அம்சங்களை எமது
தாய்மொழியாம் தமிழ்மொழியை
வளர்த்தெடுப்பதற்கும் உதவியாய் உள்ளாய்.

சிறுவர்களுக்கான போட்டிக்கும் ,ஆக்கங்களுக்கும்
பாலகர்களுக்கும் ஒரு பக்கம் கொடுத்தாய்.
புலம்பெயர்ந்து வாழும் மக்களின் கரங்களில்
தவழ்ந்து 'மண்' என்ற பெயரைத் தாங்கி


இருபத்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிடினும்
தொடர்ந்து செல் உன் பணியை போற்றி உன்னை
என்றும் நான் ஆதரிப்பேன்
நீடுழீ வாழ்கவே உன் சேவை வளர்க
இறை அருளால்

# வாழ்த்துக்கவிதை

காந்தி சனசமூக நிலையம்
நாவற்குழி - கிழக்கு
இரட்ணசிங்கம் இரட்ணகரன் தலைவர்

மண் என்ற பெயரில்
கண் திறக்கவைத்து
பொன் எழுத்துக்களால்
விண் வரை உயர்ந்த உம் பணி
பின் நோக்கிப் பாராது
முன் நோக்கி நகர
வெள்ளி விழா காணும் 'மண்' ணுக்கு
என்னாளும் எனது
பொன்னான வாழ்த்துக்கள்.
கலை நயம் கொண்ட கருத்துக் களங்களும்
விலை கூறமுடியா இலக்கியத்தேடல்களும்
மலை போன்ற நிலையான சமூகச் சாரல்களும்
சிலை வடிவாகச் செதுக்கிய 'மண' ணுக்கு
கடல் கடந்த எம் மண்ணில் நின்று
உடல் பொருள் ஆவி சோத்து
மடல் ஒன்று அனுப்புகிறேன்-என்
தடல் புடலான வாழ்த்துக்களுடன்.





# வரப்புயர...வாழ்த்துரை...

வி.ஜீவகுமாரன்
எழுத்தாளர்
டென்மார்க்



"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயர கோன் உயர்வான்"

மண் சஞ்சிகை தனது 25வது வருட வெள்ளிவிழா மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை எழுத முற்படும் பொழுது "வரப்புயர" என்ற இந்த வரிகள்தான் என் ஞாபகத்திற்கு வருகின்றது.

ஒருவனுக்கு அளிக்கப்படும் உணவு அவனது அந்த நேரப்பசியை மட்டும் போக்கும்! போரினால் சிதையுண்ட அவனுக்கு ஒரு வீட்டைக் கட்டிக் கொடுக்கும் பொழுது அவனின் குடும்பத்தையே நிம்மதியாக வாழவைக்கும்!! ஆனால் அவனுக்கு கொடுக்கப்படும் நல்ல ஒரு நூலால் அல்லது கல்வியால் அவனது சமூகம், ஊர், மேலாக அவனது நாடே வளப்படும்!!! அவ்வாறான ஒரு வரப்பை உயர்த்திக் கட்டும் முயற்சிதான் ஜேர்மனிய மண் சஞ்சிகையினர் 25 ஆண்டுகளாக செய்து வரும் இந்த முயற்சி.

அணைந்து போய்விட்டதோ என எண்ணிய ஒரு அடுப்பின் ஆறாத சாம்பல் சூட்டை மட்டும் வைத்து அதனுள் நெருப்பு உள்ளது என்ற உறுதியுடன் கண்ணினுள் பறக்கும் சாம்பலையும் கண் எரிவையும் பொருட்படுத்தாது அதனை ஊதி ஊதி மீண்டும் நெருப்பூட்டி ஊருக்கெல்லாம் உணவு படைக்கும் முயற்சிதான் நாட்டை விட்டு புலம் பெயர்ந்த பின்பு மீண்டும் நதி மூலம் ரிஷி மூலம் தேடிய இந்த 25 வருடப் பயணம்.

இதில் எத்தனையோ சிரமங்கள் ஊடாக இவர்கள் பயணித்திருந்தாலும் தங்கள் பிள்ளைகளையும் இணைத்து அவர்களுக்கு அவர்களின் அடையாளங்களை காட்டியதுதான் இதன் சமூகக் கனதியான தொண்டு என நான் பார்க்கின்றேன்.

களைகளைப் பிடுங்கி இந்த வயலில் மீண்டும் வரப்புயர பாத்தி கட்டவும், அணைந்து விடாத எங்கள் அடுப்பினை மீண்டும் சாம்பலினூடு மூட்டவும், ஜேர்மனிய மற்றும் புலர் பெயர்ந்த நாட்டு மக்களும் இணைந்திருப்பது மனதிற்கு மிக்க மகிழ்வாக இருக்கின்றது. இந்த தமிழ் மற்றும் நாட்டுப்பற்றையும் நன்றிமறவாத தன்மையையும் எண்ணிப் பார்க்கும் பொழுது இந்த உலகத்தில் இன்னமும் மனித நேயம் வாழகிறது என எண்ணிக் கொள்வதில் பெருமைப்படுகின்றேன். ஆம்! எங்கள் மண்ணின் ஈரம் இன்னும் காயவில்லை என பனிப்பாறையில் நின்று கொண்டிருக்கும் எனது மனம் குதாகலிக்கின்றது.

வேலை செய்யும் ஒவ்வொரு வினாடிக்கும் டொலர்களினாலும், யூரோக்களினாலும், குறோன்களினாலும், பிராங்குகளினாலும் கணக்குப் பார்க்கும் இந்த புலம் பெயர் உலகத்தில்,இந்தப் பொதுப்பணியில் எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராது தம்மை முற்று முழுதாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் எனது நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.

மீண்டும் "வரப்புயர" வாழ்த்தும்!..

# மனம் கவர்ந்த மண்!...

சி.த.மார்க்கண்டு BA (பிரித்தானியா)
முன்னாள் அரசாங்க அதிபர்
வவுனியா



எனது மனம் கவர்ந்த"மண்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும், எழுத்தாளரும் ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவருமான உயர்திரு.வ.சிவராசா அவர்களுக்கும் அவருடன் இணைந்த மலர்க்குழவினர்க்கும், தமிழ்ச் சமூகத்தினருக்கும் சஞ்சிகையின் 25ஆம் ஆண்டுப் பூர்த்தி நினைவாக வெளியிடும் வெள்ளிவிழா மலருக்கு எனக்கும் மதிப்பு, கௌரவம் அளித்து வாழ்த்துச் செய்தி அனுப்புமாறு வேண்டியமைக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"மண்" ணின் வாசகனாகவும் முத்தமிழ் இலக்கிய ஆவலராகவும் சஞ்சிகையின் அபிமானியாகவும் இருந்து பயன்பெற்று வருகின்றேன். தாய்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனிக்குவந்து வாழும் தமிழர்களின் நலனிலும், தாய்நாட்டிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற பிள்ளைகள், பள்ளிச் சிறார்கள், கணவனை இழந்த பெண்கள் ஆகியோரின் புனர்வாழ்விலும் அக்கறைகொண்டும் தம் பங்களிப்பைச் செய்ய அமைப்புக்கள் உலகளாவியரீதியில் தேவைப்பட்டமை உண்மையில் காலத்தின் தேவை என உணரப்பட்டது.

நல்ல..நல்ல குணங்களாலும், சிந்தனைகளாலும், உயரிய அறிவாலும் மனிதநேயம்கொண்ட உள்ளத்தினர் பல..பல வழிகளில் சேவை செய்ய முன் வந்தனர். இவை எல்லாம் ஔவையாரின்"அறம் செய்ய விரும்பு" என்பதின்பாற்பட்டது. இவற்றை முன்னெடுக்கத் துணிவு வேண்டும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்

திண்ணியர் ஆகப் பெறின்"

என்ற திருவள்ளுவர் பெருமானின் வாக்கின்படியும், "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" "முடியும் என்றால் எதுதான் முடியாது" என்ற முன்னோர் வாக்கிற்கு அமையவும்,"மண்ணின் நல்ல வண்ணம் வாழலாம். "வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை" என்ற திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப்பாடல் வரிகளின்படியும், புலம்பெயர்ந்து வந்து சொந்த நாட்டில் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற நினைப்புடன் அவர்களுடன் இணைந்து மதிப்புடன் வாழமிடத்து எல்லாம் சாதகமாகும் என்று கருதிவந்தவற்றுள் ஒன்றே "மண்" சஞ்சிகை என்றால் அது மிகையாகாது. மக்களின் மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்று, எதுவித விளம்பரங்களும் தாங்கிவராது கடந்த இருபத்தைந்து வருடங்களாக சஞ்சிகை உலாவருவது ஒரு பெரும் சாதனையாகும்.

சஞ்சிகை கொண்டிருக்கும் பொருளடக்கம் யாவும் இதன் தரத்தை நிலைநிறுத்துகின்றது. இது ஒரு பல்கலைக் களஞ்சியம் எனலாம். இச்சஞ்சிகையின் இன்னோர் சிறப்பு அம்சம் தாய் நாட்டுக்கு அனுப்பும் உதவி நிதியின் வரவும்-செலவு விபரங்கள் காலம் தவறாது வெளியிடப்பட்டு மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பதுடன் மற்றவர்க்கும் முன்மாதிரியாக இருப்பதாகும்தமிழர்கள் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளில் பல அமைப்புக்கள் தமிழ்மொழி வகுப்புக்களை நடாத்துகின்றனர். பிள்ளைகள் மத்தியில் அறிவு வளர்ச்சிக்கான ஏற்பாடுகள்

அதிகமாக உண்டு. போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. ஒரு ஜேர்மனிய வெள்ளைக்கார மாது அண்மையில் தமிழ்த்தொலைக்காட்சி ஒன்றில் தோன்றி யாழ்ப்பாணத்துத் தமிழில் மிக..மிகச்சரளமாக, தங்குதடையின்றி உரையாடியது எமக்கெல்லாம் ஆச்சரியத்தைத் தந்தது. எங்கள் பிள்ளைகளுக்கு ஏன் தமிழ்!.. மேற்கத்தய நாடுகளில் தம் பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்பிக்காது இருக்கும் பெற்றோர்கட்கும், வீடுகளிலே தமிழைக் கதைக்கவைக்காதவர்கட்கும் இது ஓர் அவமதிக்பைக் கொடுத்திருக்கலாம். இந்த நிகழ்ச்சியைப் பார்த்த பின்னராவது, அறிந்த பின்னராவது சிந்தனையில் நல்ல மாற்றம் வரும் என நம்பலாம்.நல்ல தமிழ்ச்சஞ்சிகைகள், புத்தகங்களை வாசிக்கும் வாசிப்புப் பழக்கம் அதிகரிக்க வேண்டும்.. இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவர நிதியம் ஒன்றை ஏற்படுத்துவது அவசியம். இதற்கு மக்களின் ஆதரவு தேவை.

"மண்" சஞ்சிகை எதிர்காலத்தில் தொடர்ந்து பிரகாசித்துக்கொண்டெ இருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. தமது வேலைப்பளுவின் மத்தியிலும் ஓய்வு பற்றாமை இடையிலும் மிக மிக அர்ப்பணிப்புடன் வெள்ளிவிழாக்குழுவின் தலைவர் திரு சிவராசா அவர்களும் ஏனைய அங்கத்தவர்களும், தமிழ்ச்சமூகத்தவர்களும் விழா நடாத்துவதையும் அவர்களின் விடாமுயற்சி, பொதுசன நல்லுறவு ஆகியவற்றுடன் வெள்ளிவிழாவின் ஞாபகார்த்த "மண்" சிறப்பு மலரை அதன் மணம் மாறாது வெளியிடுவதனையும் மெச்சுகின்றேன்...போற்றுகின்றேன். இவர்கள் அனைவரையும் ஆதரவாளர்களையும் வாழ்த்துகின்றேன். மேலும் "மண்" சஞ்சிகை பல்லாண்டுகாலம் தொடர்ந்து வெளிவந்து பயன்கொடுக்க, இவர்களின் சேவையும் உதவியும் கிடைத்துவர, இவர்கள் சந்ததியினர் உய்ய எல்லாம்வல்ல இறைவனின் அருளும் துணையும் கிடைக்க வேண்டித் துதிக்கின்றேன்..

## பல மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த மார்க்சிச மூலவர்கள்!

மார்க்சிச தத்துவத்தை உலகிற்கு வழங்கிய மூலவர்களான கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் ஏங்கெல்ஸ் ஆகியோர் தமது கருத்தை நிறுவுவதில் கடுமையாக உழைத்தவர்கள். அவர்கள் தமது கருத்தை நிறுவுவதற்காக தமது காலத்தில் வெளியான சமூகவியல் மற்றும் இயற்பியல் நூல்களையும், அறிக்கைகளையும் ஆயிரக்கணக்கில் ஆராய்ந்திருக்கிறார்கள். அதற்கு வசதியாக இருவரும் பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். குறிப்பாக ஏங்கெல்ஸ்1 12 மொழிகளில் சரளமாக எழுதவும் பேசவும் கூடியவராக இருந்தார். 20 மொழிகளில் அவரால் வாசித்து விளங்கக்கூடியதாக இருந்தது. மார்க்ஸ் தனது பிரசித்தமான மூலதனம் நூலை எழுதி முடிக்க 40 ஆண்டுகள் பிடித்தது. அதன் மூலப்பிரதி 35 தொகுதிகள் வரை எழுதப்பட்டது.

# வாழ்த்துரை!...

என் செல்வராசா
நூலகவியலாளர்
லண்டன்



ஜேர்மனியிலிருந்து வெளிவரும் மண் சஞ்சிகை தனது வெள்ளிவிழா இதழை வெளியிடுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். 1841இல் இலங்கையில் உதயதாரகை தொடங்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை ஈழத்தில் ஐநூறுக்கும் அதிகமான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் மலர்ந்து மணம்பரப்பி வந்துள்ளன. அதன் அடியொற்றி புகலிடத்திலும் ஈழத்தமிழரின் அந்தப் பாரம்பரியம் தொடரலாயிற்று.

ஒரு சஞ்சிகையின் காலப்பகுதியின் அடிப்படையில் இலக்கிய வளர்ச்சியைப் பார்ப்பது எமது பாரம்பரியமாகும். தமிழகத்தில் மணிக்கொடி காலம், சரஸ்வதி காலம் என்று கூறப்படுவதைப்போல ஈழத்திலும் தமக்கென ஒவ்வொரு காலகட்டங்களை ஏற்படுத்தி மிகச் சிறிய காலமென்றாலும் அக்காலகட்டத்தில் பல புதுமைகளை-புரட்சிகளைச் செய்து பல இலக்கியகர்த்தாக்களையும் உருவாக்கிவிட்ட பெருமை ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைச்செல்வி, மல்லிகை போன்ற இதழ்களுக்கு உள்ளது.

புகலிடத்தில் மண் சஞ்சிகையும் தனக்கென ஒரு பாதையை வகுத்து அதன்வழி நின்று இன்று 1வெள்ளிவிழா இதழ் தடத்தைப் பதித்த பெருமிதத்துடன் நிமிர்ந்து நிற்கின்றது. மண் சஞ்சிகையுடனான எனது தொடர்பு ஏற்பட்டுச் சிறிய காலமேயானாலும், அதன் வித்தியாசமான இயங்குதளம் என்னை இந்தப் புகலிடச் சிற்றிதழின்பால் அதிக கவனத்தை செலுத்தத் தூண்டிவிட்டது. சமூகசேவையை ஒரு சஞ்சிகையின் வாயிலாகவும் முன்னெடுத்துச் செல்லலாம் என்பதை ஜேர்மனியிலிருந்து வெளியாகும் மண் சஞ்சிகை வெற்றிகரமாகச் செய்து காட்டியுள்ளது.

தன் வளர்ச்சிப்பாதையில் பல புகலிடத்து எழுத்தாளர்களை வளர்த்தெடுக்கவும் அது தவறவில்லை. இன்று புகலிடத்தில் வெளிவரும் பல நூல்களில் மண் சஞ்சிகை பற்றியோ அதன் ஆசிரியர் பற்றியோ குறிப்பொன்று வருவது தவிர்க்கமுடியாததாகி வருகின்றது.

நூலின் வடிவமைப்பு பற்றிய கருத்து வேறுபாடு பலருக்கும் இல்லாமலில்லை. மண் சஞ்சிகையில் அழகியல் அம்சங்கள் குறிப்பிடத்தகுந்ததாகக் காணப்படாதது ஒரு குறையாகத் தோன்றலாம். மண் சஞ்சிகையின் மூலம் கிடைக்கும் வருவாயை தாயகத்தின் அவசியத் தேவைகளுக்கான நிதியாக அனுப்புவதா அல்லது சஞ்சிகையின் வடிவமைப்பை மெருகூட்டுவதற்குப் பயன்படுத்துவதா என்ற நிலையில், அதற்கான தீர்வை எடுக்க நேரிடும் போது ஆசிரியர் முன்னையதற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குத் துணிந்தமையே இந்த அழகியல் நிலைப்பாட்டுக்குக் காரணம் என்று கருதவேண்டியுள்ளது.

எமது தாயக மண்ணின் மணம் புகலிடத்தில் தொடர்ந்தும் எம் நெஞ்சங்களில் கமழ்ந்திருக்க இந்த மண் சஞ்சிகை தொடர்ந்தும் தன் வெற்றிப் பயணத்தைத் தொடர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

# மண் மலர்ந்த வெள்ளி விழாவில்!...

தியாகராசா சௌந்தரராசா
பல்கலாச்சார மையம்
கனடா



ஒரு இனம் தான் புலம்பெயர்ந்து வாழும் மண்ணில் தன் இன அடையாளங்களைப் பேணவேண்டுமானால் தனது மொழியையும் கலை, பண்பாட்டு விழுமியங்களையும் கட்டிக்காக்க வேண்டும். இந்தப் பொறுப்புணர்வு தனியே ஊடகங்களுக்கும், அமைப்புக்களுக்கும், சமூகநல நிறுவனங்களுக்கும் மட்டுமல்ல ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரியதொன்று. இதற்காகப் புலம்பெயர் தேசங்களிலுள்ள நாம் அனைவருமே நமது இளம் சமுதாயத்திற்கு நமது மொழி, கலை, பண்பாடுகளை கற்றுக்கொடுப்பதற்கு மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றோம். இந்த வகையில் ஒருசில சமூகநல விரும்பிகள் தமது நேரத்தையும் பொருளையும் செலவளித்து இவற்றை வளர்க்கப் பாடுபடுகிறார்கள். இவர்களில் ஒருவராக ஜேர்மனி மண் சஞ்சிகையின் ஆசிரியர் அவர்களை அடையாளம் காண்கிறேன்.

ஆசிரியர் அவர்கள் ஜேர்மனி நாட்டுக்குக் குடிபெயர்ந்தபின் மண் சஞ்சிகையை ஆரம்பித்து நம் இனத்தவரின் தாய்மொழியாம் தமிழை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டு வருகின்றார். அனைத்து வயதினரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் பலவகையான ஆக்கங்களைப் படைத்து வாசகர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்று வருகின்றார். வாசகர்களின் நன்மதிப்பைப் பெற்றபடியால் இன்று இச்சஞ்சிகை இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவுகண்டிருப்பதை நாம் மனமார வாழ்த்துகின்றோம். புலம் பெயர் தேசம் ஒன்றில் இப்படியாகத் தொடர்ந்து 25 ஆண்டுகள் ஒரு சஞ்சிகையை வெளியிடுவது என்றால் இது இலகுவான காரியமல்ல. ஆசிரியர் அவர்கள் தாய் மண்ணிலும் மொழியிலும் கொண்ட பற்றின் காரணமாகவே"மண்"என்ற பெயரைச்சூட்டி மண் சார்ந்த மக்கள் நலனையும் பேணிவருகின்றார். நம் நாட்டில் பல ஆண்டுகளாக நீடித்த போரின் வடுக்களால் பாதிக்கப்பட்டுவரும் மக்களுக்கு இச்சஞ்சிகைமூலமாக சுமார் இரண்டுகோடிவரை பண உதவிகள் புரிந்திருப்பது ஒரு சாதனையாகவே கொள்ளலாம்.

ஜேர்மனியின் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் ஆசிரியருமான இவர் எனது சிறியதகப்பனார் என்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். தூரதேசத்திலிருந்து இந்த வெள்ளிவிழாவிற்கு வருகைதரமுடியாவிட்டாலும் வாழ்த்துவதில் நானும் உங்களில் ஒருவனாக மகிழ்வு கொள்கிறேன். பொதுச்சேவை என்பது எங்கள் குடும்பத்தின் தாரகமந்திரம் என்பதை நீங்கள் ஊட்டினீர்கள். நாங்கள் அதை ஏற்றுக்கொண்டுள்ளோம்.."மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற சிறந்த நல்வழியில் அனைவரின் நன்மதிப்பைப் பெற்றுவாழும் தாங்கள் எனது சிறிய வயதில் கல்வி வளர்ச்சிக்கும் சமூகப்பண்பாடு வளர்ச்சிக்கும் நீங்கள் காட்டிய வழிதான் நான் இன்று கனடா நாட்டில் பல்கலாச்சார சமூகக்கட்டமைப்பில் சிறப்போடு பணியாற்ற வழிவகுத்தது என்பது உண்மையே.

மென்மையாகவும் நல்ல பண்பாகவும் எல்லோருடனும் பழகிவரும் தங்களிடம் ஒரு சமூகசேவையாளனுக்குரிய தகுதிகள் நிறையவே காணப்படுகின்றன. இந்த இருபத்தைந்து ஆண்டுகள் உழைப்புக்குக் கிடைத்த வெற்றியை உங்களோடு பகிர்ந்துகொள்வது என் இதயம் நிறைந்த பணியாகவும் என் கடமையாகவும் நினைக்கின்றேன். மண் சஞ்சிகை நூறாண்டுகள்தாண்டி மலர்ந்து ஒளிவீசவேண்டுமென எனது இதயம் நிறைந்து வாழ்த்துகின்றேன்!....

# கால் ஊன்றி கால் நூற்றாண்டாம் மண்!...

ஜெயம் தங்கராசா
எழுத்தாளர்
நெதர்லாந்து

களைப்பில்லா உழைப்பாலே உருவான மண்
புலத்தினிலே தளம் கொண்டு தமிழ் பேசும் மண்
நம்மவரை சிருஸ்டித்தே வெளியாகும் மண்
இருமாதத் தொரு தடவை எமைத் தரிசிக்கும் மண்
தேயாத தொடர் பணியால் இனத்தவரை அணைத்திட்ட மண்
ஓயாத படைத்தலிலே இழப்பினையும் பொறுத்திட்ட மண்
தனித்தாலும் துணிந்துநின்று இன்றுவரை சாதித்த மண்
தமிழினைக் கோர்த்து திக்கெட்டும் ஊர்ந்து திகழ்ந்திடும் மண்
உண்மையின் சொட்டினால் வடிவுற்றமண்
நேர்மையின் சகவாச சுவாசமாய் மண்
புலத்துக்கும் நிலத்துக்கும் பாலமாய் மண்
பரதேசத்தில் நம் தேசமாய் மண்
தமிழுக்காய் தமிழர்க்காய் தட்சனையே மண்
மதம் கொள்ளா ஏற்றத்தாழ்வில்லா நடு நாயகம் மண்
சொன்னாலும் சொல்லாவிட்டாலும் வரப்பிரசாதம் மண்
அகதிகளாயினும் அன்னை மொழியை நுகர்ந்திட மண்
சிவராஜா என்பவராய் எம் மண்ணின் திலகம்
எம்மவரின் ஆக்கங்களை ஊக்குவிக்கும் உலகம்
தாங்காத விழிகள் கொண்டும் பவுத்திரமாய் திகழும்
தடுமாற்றம் போதையின்றி பக்குவமாய் பழகும்
வெள்ளி விழா மண்ணக்கு ஒரு கோடி வாழ்த்துக்கள்
அள்ளி நன்றி சொரிகின்றோம் தமிழோடு வாழ்வுக்குள்
உள்ளங்கள் மிதக்கின்றன சந்தோசப் பொழிவுக்குள்
எம்மவருள் சேர்கின்றன மண்ணோட சேவைகள்



# வாழ்த்துக்கவி!...

மட்டுவில் ஞானக்குமரன்
கவிஞர்
கனடா




நான் இவனோடு கொண்ட
நேசம் என்பது
வான் விரிந்த நீலம் போல்
மாறிக்கிடக்கிறது.
தமிழ் அவனோடு கொண்ட
நேசம் என்பது
மண் விழுந்த மழை போல
ஊறிக்கிடக்கிறது!..

ஆண்டுகள் இருபத்தைந்தென்பது
அவன் தனித்துச் செய்த
யாகத்தின் நீளம்.
அவன் வெட்டியிருக்கிறான்
மண் சஞ்சிகை எனும்
பெரிய ஆறு
ஒன்றா இரண்டா
அதை தடுக்க வந்த இடையூறு..?
அரித்துக் கொள்வதற்கு மட்டுமே
பழக்கப்பட்ட கறையான்கள்
ஒன்று கூடி
விரித்துக்கொண்டன

உன் மேல்
பல் வேறு கருத்துக்களை
உனை வெல்லப் போவதாக
விடுத்தன தினமொரு அறை கூவலை
அந்த அறை கூவல் கூட வெறும்
குறை கூறலோடு மட்டும்
நின்று கொண்டன. .

பிறர் துயர்
துடைப்பதில் நீயோ
இமயமலைக்கு ஒப்பானவன்

இங்கே சில கண்ணாடித்துண்டுகள்
வைரக்கல் வேடம் போட்டுத்
இங்கே சில தப்பானவர்
உனைப்பார்த்து கருத்துச்சொல்வதென்பது
சூரியனைப்பார்த்து
சிட்டிவிளக்குகள் சீழ்க்கை அடிப்பதற்கு
சமனானது.
ஆளை வீழ்த்தும்
பள்ளங்கள்
மனக்காயம் பொறிக்கும் அவமானம் என
எது வந்தாலும்
எடுத்த பணியை விட்டதில்லை நீ

நீ நல்லவன்
நினைத்ததைச்சாதிக்கும் வல்லவன்
போற்றுவார் போற்றட்டும்
புழுதி வாரித் தூற்றுவார் தூற்றட்டும்
போகட்டும் விட்டுவிடு
எல்லாம் கண்ணனுக்கே என
என் போல் நினை.

இவன் மென்மையானவன்
தன் மேல் அம்பு எய்தவரையும்
மன்னிக்கும்
பெருந் தன்மையானவன்.
முற்றத்தில் இடமில்லாதவன்
வீட்டுக்குள் செடி நாட்டி வளர்ப்பது போல்
இவன் தாய் நாட்டு நினைவாக

தன் இலக்கிய இதழுக்கு மண்
எனப் பெயர் சூட்டினான்.

ஆகையால்
நீ தான் மண்ணின் மைந்தன்
ஊள்ளூர்க் கலைஞரையும்
நம் தாய் தேசத்து
திறன் நிறை பலரையும்
அழைத்து கௌரவிப்பவன்.
இங்கு சிலர் விளம்பரம் வேண்டி

(தொடர்ச்சி)
சிலுக்குவையும் கூப்பிடுவர்
தமிழக்கு
வஞ்சகம் செய்யும்
அழக்குகளையும் கூப்பிடுவர்.

நானோ உனை
அண்ணனாகத்தான் நினைத்திருந்தேன்
நீயோ கண்ணனாகவல்லவா
மாறிவிட்டாய் அவனோ
வெண்ணையை மட்டும் தான் திருடினான்
நீயோ
என்னையே திருடிவிட்டாயே?

இவன் இலக்கியம் மட்டும்
புனைந்திருந்தால்
சில ஏடுகள்
இவனைப் புகழ்ந்திருக்கும்

சில மேடைகள்
இவன் கழுத்துக்கு
மாலைகளை சூட்டியிருக்கும்.
ஆனால் இவனோ
இலக்கியம் படைத்த கையாலேதான்
எண்ணற்ற ஏழைகளுக்கு
இலைக்கஞ்சியும் படைத்தான்.

ஆதனால் தான் இவனுக்கு
ஏட்டிலே மட்டுமல்ல
ஏழைகளின் வீட்டிலும்
கிடைத்திருக்கிறது மகுடம்.

நீ மண் சஞ்சிகையின் சாரதி
எல்லோருக்கும் வளம்தரப் பாயும்
பெரு நதி
மனைவி மக்கள்
நண்பர் பலமுடன்
வாழ்க வளமுடன் பல்லாண்டு!..

(மட்டுவில் ஞானக்குமரன் - கனடா)

# வவுனியா அருளகம் இல்லத்திலிருந்து ஒரு குரல்......

செல்வி பூ விழி மாயழகு
அருளகம் - வவுனியா

காலதேவனின் விதியால் பெற்றவர்கள்
முகம் காணத் தவறியதே என் விழிகள்
சிறு வயது முதலாய் செஞ்சோலை இல்லத்தில்
சின்னவள் என் வாழ்வும் மலர்ந்ததுவே
செவிலித்தாயவள் மடியில் அன்று
என்னைப்போன்ற யாருமற்ற குழந்தைகளுடனே
துன்பம் காணா சிறுபிள்ளையாய் தவழ்ந்தேன்
கூடிவாழ்ந்து பள்ளிப்பருவமதில் துள்ளியாடி
சின்னஞ்சிறு ரோஜாக்களாய் அன்புத் தேன்பருகி
சிறகடித்துப் பறந்தேன் - வாழ்வில்
அதுவே ஒரு அழகிய காலம் -அங்கே
குரங்கு ஒன்று கூட்டைப் பிரிக்க
குருவிக் குடும்பம் சிதைந்தது போல
போர் எனும் கொடிய தாக்கத்தினால் -எமது
சோலைக் குடும்பமும் சிதைந்து போனதுவே
உறவுகளாய் வாழ்ந்த சோலை உறவுகளின்
உயிர்களும் பறிபோயினவே
மடியில் தவழ்ந்த தாயவளின் உயிருடன்
மண்ணுக்கே இரையாகினர் என் இரத்த உறவுகளும்
துன்பங்களை மறந்து வாழ்ந்த வாழ்வில் -அன்று
வீசிய புயலினால் அடிபட்டு சிக்குண்டு தவித்தேன்
திக்கறியா நிலையில் நிர்க்கதியாய் நிர்க்கின்ற
வேளை
என் வாழ்விலும் வீசியதே வசந்தம்
வாழ்வையே தொலைத்து நான்நின்ற வேளை
தெய்வமனம் ஒன்று என்னை கையேற்றதுவே
மீளமுடியா வடுக்களை சுமந்த என் இதயத்துக்கு
சுகம் தந்து தாலாட்டியது அத்தெய்வமனம்
என்னை மட்டுமல்ல என்னைப் போன்ற
அனாதரவான பல சிறுவர் சிறுமிகளுக்கு
தாயும் தந்தையும் ஆனது அத் தெய்வமனம்
அன்பை தொலைத்து அலைந்து தேடிய வேளையிலே
அன்பெனும் உயிர்ப்பிச்சையை தந்தது அத்
தெய்வமனம் என்ன பாவம் செய்தோம்
யாமென எண்ணிய வேளையிலே
என் பிள்ளைகள் நீரே ஆவீர் என்று
அன்புடன் அரவணைத்தது அத் தெய்வமனம்
விடைகாணா என் கேள்விகளுக்கு பதிலானவர்-
என் தாயைவிட மேலான அன்புத் தெய்வம்-
என்னை வளர்க்கும் அருளக தந்தை அருள்மிகு
நவரத்தினமே!

IRANGUM ILLAM (SYMPATHETIC HOME) 12 Largewood Avenue, Surbiton, Surrey
KT67NY United Kingdom (UK)
Date: 20.03.2015



1978 இல் ஜேர்மனியில் நிறுவப்பட்ட
இரங்கும் இல்லம் ஸ்தாபகனும்,
நடத்துனனுமான
திரு. ஸ்ரீபதி சிவனடியானின்
வாழ்த்துச் செய்தி

நம் நாட்டில் பல வருடங்களுக்கு மேலாக கலை, இலக்கிய, மனிதநேய சமூகசேவையைச் செய்து வரும் மண் சஞ்சிகையின் 25 வருட நிறைவு வெள்ளி விழாச் சிறப்பு மலரை அலங்கரிக்க வாழ்த்துச் செய்தி எழுதுவதையிட்டு அடியேனாகிய நான், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மனிதநேயம் என்பது இனம், மதம், மொழி, சாதி, சமயம் பாராதது. மண் சஞ்சிகையின் தலைமையாசிரியர் திரு. சிவராஜா அவர்களை 30 வருடங்களுக்கு மேலாக நன்கு அறிவேன். ஊரில் நம் இனம் நிம்மதியாக வாழ வழி வகுத்த நல்ல இளகிய இனிய இதயம். இவரின் விடாமுயற்சியையும் கடினஉழைப்பையும் உலகத்தமிழாகள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

அன்று தொட்டு இன்று வரை ஊர்மக்களுக்கு உதவும் முயற்ச்சியில் கண்ணும் கருத்துமாகக் கணக்குவளக்குகளில் மிகக் கண்டிப்பாக இருந்து தனது மண் சஞ்சிகையில் பிரசுரம்செய்து வருவதை உலகம் அறியும்.

எம்மில் பலர் பிறந்தோம் வாழ்ந்தோம் என்றிருக்கும் போது நண்பன் சிவராஜாவின் சமூகசேவை அளப்பரியது. இவரின் அயராத சேவையால் ஊரில் பலநூறு மக்கள் பலன் பெறுகின்றார்கள்.

ஜேர்மனியின் பல நகரங்களில் நான் சமூகசேவை செய்த காலத்தில், இவர் இல்லத்தில் தங்கிய நாட்களில், இவர் மனைவி, பிள்ளைகள் என்னை நன்கு உபசரித்து உணவு அளித்து, உறங்க வைத்த நாட்கள் இன்னும் பசுமையாக ஊஞ்சல் ஆடுகின்றன.

தொடர்ந்தும் இவரின் நற்சேவை வளரவும், பல்வேறு சௌபாக்கியங்களும் பெற்று, உலகத்தமிழர்கள் போற்றக்கூடிய சமூகசேவகனாகவும், எதிர்கால இளைஞர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்க வேண்டும் என்று மனமார வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்மைசெய்து, நன்றிகூறி, நட்பைவளர்க்கும்
என்றும் அன்புடன், ஸ்ரீபதி சிவனடியான்.
லண்டன், 20.03.2015

UK Charity Registered No. 1142179

# மனிதத்தை நேசிக்கும் 'மண்' சஞ்சிகை

திருமதி. நவஜோதி. யோகரட்ணம்
ஊடகவியலாளர்
லண்டன்

1990 ஆம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட "மண்"சஞ்சிகை தனது வெள்ளி விழாவை இவ்வாண்டு எதிர்நோக்கியிருப்பது மிகச் சிறப்பான விடயம். புலம்பெயர் நாடுகள் பற்றிய விடயங்கள் மட்டுமன்றி, பல்வேறு தகவல்கள், நமது நாட்டுப் பிரச்சனைகளை மனிதநேயத்தோடு உற்று நோக்கும் பார்வைகளைத் தாங்கி வருவதென்பது மண்சஞ்சிகைக்கு பெருமை சேர்க்கின்ற விடயமாகும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் சஞ்சிகைகளை தொடர்ந்து நடாத்துவது என்பது மிகப் பெரும் சவாலாகும். யாவருக்கும் இன்முகம் காட்டி, எளிமையான முறையில் புதிய தலைமுறையினருக்கு ஊக்கம் காட்டிவரும் "மண்" சஞ்சிகை ஆசிரியர் சிவராஜா அவர்கள் மிகப் பெரும் பாராட்டுக்குரியவர். அவரது பெருமுயற்சியே இச்சஞ்சிகையின் வெள்ளிவிழா வெற்றிக்கு அடித்தளமாகும். அவருடன் உறுதுணையாகச் செயற்படும் அனைவருக்கும் இவ்வேளை சிறப்பான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்!

சிறுவர்கள், இளையவர்கள், வயது வந்தவர்கள் என்ற அடிப்படையில் ஓவியம், கட்டுரை, கவிதை போட்டிகளை நடாத்துவது மற்றும் இலக்கிய ஆர்வலர்களுக்கு சிறுகதை, கட்டுரைப் போட்டிகளை நடாத்துவது, அவர்களுக்கு பரிசில்களை வழங்கி ஊக்குவிப்பது என்பது "மண்" சஞ்சிகை கனியும் இனிய தமிழ் அறிவை முடக்காமல் முயலும் முழு முயற்சியாகும். இனம், மொழி, மதம், நாடு, இயக்கம் என எந்த வித வேறுபாடுமின்றி மண் சஞ்சிகை இத்தகைய ஊக்குவிப்புக்களை நடாத்திவருவது இன்னும் வரவேற்கப்படவேண்டிய மிகப்பெரிய பண்பாகும்.

இலக்கிய ஆளுமைகளை இனங்கண்டு தமிழ் முழக்கம் போட்டு விழாக்கள் எடுப்பது, இலக்கிய ஆர்வலர்களைப் பராட்டுவது போன்றன இச்சஞ்சிகையின் மற்றுமொரு சிறப்பு அம்சமாகும். இத்தகைய பண்புகளை மண் சஞ்சிகை மனதிருத்தி தமிழை வளர்த்துச் செல்லும்பாங்கு புலம்பெயர் புதிய சந்ததியினருக்கும், இலக்கியவாதிகளுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது. புதிய நோக்குடனும், புதுப்பொலிவுடனும் மண் சஞ்சிகை இருபத்தைந்து ஆண்டுகள் பவனி வந்திருக்கின்றது. மண் சஞ்சிகை தொடர்ந்தும்

உண்மையை நிலை நிறுத்தி

வாக்கினிலே இனிமையையும்

மனதினிலே உறுதியையும்

மக்கள் பயன்பெறவென

திக்கெல்லாம் கதிர் விரித்து

திரண்டு வளர்ந்து

மனிதத்தை வரவழைத்து

தரணியில் பெருமை கொள்ள வேண்டும்.

என மனதார வாழ்த்தி நிற்கின்றேன்!



(அகஸ்தியர் குடும்பத்தினர்)

# மண்ணில் மழைத்துளியாய் மண் சஞ்சிகை...

க. அருந்தவராஜா M.ED, எழுத்தாளர்
தலைவர் கலை இலக்கியப் பேரவை - ஜெனிவா
சுவீஸ்லாந்து




நில "மண்" எப்போதும் தன் தாய்ப்பாறையின் இயல்பைக்கொண்டிருக்கும்.எந்த இடம் சென்றாலும் அது தன் இயல்பை இழப்பதில்லை. அது போலத்தான்ஈழத்தமிழர்களும் கடல் கடந்து புலம்பெயர்ந்து உலகின் எந்த நாட்டுக்குச்சென்றாலும் தம் மண்ணின் வாழ்வியல் பண்பாட்டு விழுமியங்களை இலகுவில் இழந்து விடுவதில்லை. இருந்தாலும் காலங்கள் எவருக்காகவும் எப்போதும் காத்திருப்பதில்லை. வீசும் காற்றானது நிமிர்ந்து நிற்கும் வன் பாறையைக்கூட அடியறுத்து கீழ் விழத்தி அரைத்துத்தேய்த்து மணலாக்கி உருமாற்றி விடுவது போல புலம்பெயர்ந்த தமிழர்களின் பிள்ளைகள் புதிய கலாசார சூழலுக்குள் சிக்கித் தங்கள் அடையாளங்களை இழந்து விடும் அபாயத்துள் சிக்கித்தவிப்பதுதெளிவாகத்தெரிகிறது. THE RUIN OF A NATION BEGINS IN THE HOMES OF IT'S PEOPLE.

ஒரு நாட்டின் அழிவு அதன் குடிமக்களின் வீடுகளில் இருந்தே ஆரம்பமாகின்றது. ஒரு இனம் தன் மொழி அடையாளங்களை இழந்து விடுமாயின், அந்த இனத்தின் இருப்பு நிலைகுலைந்து திரிபடைந்து காலப்போக்கில் தன்னை வேறோர் இனமாக உருமாற்றிக்கொள்ளும். நிலைமாற்று கலாசார சூழலில் சிக்கியுள்ள புலம்பெயர் தமிழர்களின் வாழ்வியலில் ஓர் தடம் போட்டு தமிழ் வளர்க்கும் உன்னத பணியை ஜெர்மனியில் இருந்து வெளிவரும் "மண்" சஞ்சிகை செய்துவருகிறது. புலம்பெயர்ந்த தேசத்தில் தொடர்ச்சியாக இருபத்தைந்து ஆண்டுகள் வெளிவந்துகொண்டிருக்கின்ற முதலாவது சஞ்சிகை என்ற பெருமையையும் அது பெற்றுக்கொள்கிறது. ஆயுதங்கள் அற்ற இன அழிவு இடம்பெற்றுவருகின்ற புலம்பெயர் தேசங்களில்,வெறும் காகிதங்கள் மூலம் அவற்றைத்தடுத்து நிறுத்தி தமிழ் காக்கும் போராளியாகவும் விடுதலைப் பேரொளியாகவும் மண் தன்னை நிலைநிறுத்திக்கொள்கிறது.

புகலிடக் குழந்தைகள் தமிழில் எழுதவும் வாசிக்கவும் அதன் வழி யோசிக்கவும் மண் சஞ்சிகை தூண்டுதலாக அமைவதால்,எதிர்காலங்களில் தமிழ்ப்படைப்பாளிகள் அந்தந்த நிலங்களில் முளைவிட்டு கிளை பரப்ப ஜெர்மனியின் "மண்" சஞ்சிகை முளை நிலமாகவும் விளை நிலமாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை. மேலும் புலம்பெயர்ந்து சேர்த்துக்கொண்ட பணபலத்தை தாயக நிலம் சேர்ந்த உறவுகளுக்கு வழங்கும் மனித நேயப்பணிகளில் மண் சஞ்சிகைக்குழமம் ஈடுபட்டு வருவது பாரட்டப்படவேண்டியதாகும்.வெள்ளி விழாக்காணும் இச்சஞ்சிகையின் ஆக்கத்திலும் ஊக்கத்திலும் முன்னின்று உழைத்து வரும் கௌரவத்துக்குரிய திரு வ.சிவராஜா அவர்கள் தமிழ் இலக்கிய உலகத்தினராலும் தமிழர் நலன் விரும்பிகளாலும் பாராட்டப்பட வேண்டியவராகின்றார். இயந்திர வேகமான வாழ்க்கைச்சூழலிலும் தமிழுக்காக தமிழ் மக்களுக்காக தன் நேரத்தை ஒதுக்கி, தமிழ்ப்பணியாற்றிவரும் இச்சஞ்சிகையின் ஆசிரியர் புலம்பெயர் தமிழ் இலக்கிய வரலாற்றில் தவிர்க்கப்பட முடியாத தனி இடத்தைப்பெற்றுக்கொள்கின்றார்.தொடர்ந்தும் "மண்" சஞ்சிகை வெளிவந்து தமிழருக்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க தம் பணி!!

# வெள்ளிவிழா ஆண்டில் கால்பதிக்கும் மண் சஞ்சிகைக்கு வாழ்த்துக்கள்!...

என்.கே.துரைசிங்கம்
ஊடகவியலாளர் - பிரான்ஸ்


2015 தைமாதம் 25அகவையில் கால் பதிக்கும் மண் சஞ்சிகையைபாராட்டி, வாழ்த்துகின்றேன் கலை இலக்கிய சமூக தளத்தில் கால் நூற்றாண்டாக நின்று செயற்படுவது என்பது ஒரு சாதனைதான். அதுவும் ஒரு இலக்கிய சஞ்சிகையை புலம்பெயர்ந்த மண்ணில் நடத்துவதுஇயலாத காரியம்.இந்நிலையில் 1990 தையில் இதற்கு பிள்ளையார் சுழிபோட்டு இன்றுவரையும் அதனை வெளியிட்டுக்கொண்டிருக்கும் ஆசிரியர் சிவராஜாவின் உழைப்பை பாராட்டமலிருக்க முடியாது. சமூகநலனுடன், பொறுப்புணர்வுடன் தான்ஏற்றுக்கொண்டபணியிலிருந்து இம்மியளவும் விலகாது அவர் செயற்பட்டு கொண்டிருக்கிறார் என்பதை நான் அறிவேன்

கவிதை,கட்டுரை,சிறுகதை,துணுக்குகள் என பலவற்றை வெளியிடும் மண் சஞ்சிகைஅவ்வப்போது சிறுவர் இளையோர் உட்பட போட்டிகள் நடத்தி ஊக்கிவித்து வந்துள்ளதுபுலம்பெயர்மண்ணிலுள்ள தமிழ் சிறுவர்களிடம் தமிழார்வத்தை தூண்டி விடவும்,எழுத்தாற்றலை வளர்க்கவும் இயன்றவரை அயராது உழைத்திருக்கிறதுஇன்று கூட வெள்ளிவிழா போட்டி நிகழ்வில் சிறுவர்களுக்கான பல போட்டிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

எழுத்துபணிக்கு மேலாக தாயகத்தில் நிர்க்கதியானவர்களுக்கு மண் சஞ்சிகைசார்பில் பல உதவிகள் செய்யப்பட்டு வருவதையும் நாமறிவோம் எந்தவித விளம்பரமின்றியும்ஆர்ப்பாட்டமில்லாமலு ம் சிவராஜா அமைதியாக இந்த பணிகளை செய்து வருகின்றார்இரண்டு மாதத்துக்கு ஒரு சஞ்சிகையை அவர் கால்நூற்றாண்டாக வெளியிட்டு வருகிறார்பல பிரைச்சனைகள்,கஸ்டங்கள் வந்த போதும் எதற்கும் வளைந்து கொடுக்காதுஅஞ்சாது துணிந்து பற்றுறுதியுடன் சஞ்சிகையை பிரசவித்து வருகின்றார்

நண்பர் சிவராஜா அவர்கள் தாயகத்தில் கணக்காளராக துணுக்காய் பிரதேசத்தில்கடமையாற்றியவர். அத்துடன் ஈழநாடு பத்திரிகையின் துணுக்காய் செய்தியாளராகஇருந்தவர்.சிறுவயது தொடக்கம் இலக்கியதுறையில் ஆர்வம் உள்ளவர் ,ஈடுபாடுகாட்டி வருபவர்.இதனால்தான் புலம்பெயர்ந்த போதும் இலக்கியப்பணியைகைவிடவில்லை தமிழ்சமுதாயத்தில் புத்தகம் வெளியிடுவது என்பது இலாபத்தைஎதிர்பார்க்க முடியாது ஆத்ம திருப்திக்கு மட்டுமே வெளியீடு செய்ய முடியும்

மண் சஞ்சிகையுடன் சில நூல்களையும் அவர் வெளியிட்டிருக்கிறார் 1980களில் யாழ்பாணம் ஈழநாடு பத்திரிகையில் ஆசிரியர்பீடத்தில் நான்கடமையில் இருந்த வேளையில் முதலில் அவரைச்சந்தித்தேன் பின்னர் பலஆண்டுகளாக தொடர்புகளில்லை.அவர் ஜெர்மனிக்கு வந்த பின்னர்அவரால் வெளியிடப்பட்ட மண் சஞ்சிகை கிடைக்கப்பெற்றேன்வாசித்தேன்.நீண்ட காலத்துக்கு பின்னர் பிரான்ஸில் அவரை நேரில் சந்தித்து இலக்கிய விவகாரங்கள் உரையாடினேன். தொலைபேசி உரையாடல்கள் தொடர்ந்தன.வேலைப்பளு மற்றும்பிறகாரணங்களினால் உரையாடலை தொடரமுடியவில்லைமண் சஞ்சிகை வெள்ளிவிழா செய்தி அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன் மீண்டும் மீண்டும் வாழ்த்துக்கள்



# மண்ணின் வாழ்வு மலையென உயரட்டும் இன்னும் தொடரட்டும்!...

வண்ணைத்தெய்வம்
எழுத்தாளர் - பிரான்ஸ



'மண்!.. தாய்மண்!.. தாய்நிலம்!.. தாய்நாடு!...
பெயர்கள்தான் வேறு வேறு இவையெல்லாம் நாம் பிறந்த மண்ணின் பெயர்கள்தான்! ஒரு தாய் பத்து பிள்ளைகள் பெற்றாள் பத்துப் பிள்ளைகளுக்கும் பத்துப் பெயர்கள். அடுத்தவர்கள் அழைப்பதற்குத்தான் அந்தப் பெயர்கள்!
அந்தத் தாய்க்கோ பத்தும் பிள்ளைகள்தான்! அந்த தாய் என்னும் பெயரையே தொலைத்தவர்கள் நாங்கள்! பெற்ற தாயைப்பிரிந்துவந்த நாம் பெற்றவைகள்தான்என்ன? வசதியானவாழ்வும் மாற்றவே முடியாதநோய்களும்மட்டும்தான்! இழந்தவைகளோ ஏராளம்.. ஏராளம்.. தாய் வழி வந்த உறவுகளை இழந்து வருகின்றோம்! தாய் மொழியின் வாசத்தை இழந்து வருகின்றோம்! தாய்மண் கற்றுத்தந்த பண்பாடுகளை இழந்துவருகின்றோம்! போற்றிவளர்த்த கலாச்சாரங்களை இழந்துவருகின்றோம்! எங்கள் பிள்ளைகள் வேற்று மொழிகளைச் சுவாசிப்பதால் அம்மா என்ற அமுதமான அந்த தமிழ்ச்சொல் எங்கள் இல்லங்களில் அன்னியமொழிகளில் ஒலிக்கின்றது! நாம் இழந்தவைகளில் ஈடு செய்ய முடியாததுவை தாயும்!.. தாய் மண்ணும்!.. மொழி மட்டுமல்ல! எங்கள் கலாச்சாரங்களும்தான் எங்களை இனம் காட்டி நிற்கின்றன!

மொழி மட்டுமல்ல! எங்கள் கலாச்சாரங்களும்தான் எங்களை இனம் காட்டி நிற்கின்றன! எங்கள் மொழியைக் காக்க எங்கள் பண்பாடுகளைக் காக்க.. எங்கள் கலாச்சாரங்களைக் காக்க.. எம் தாய் மண்ணைவிட்டு நாம் புலம் பெயர்ந்த பின்னர் எங்களுக்காய் புலம் பெயர்ந்தவைகளும் சில உண்டு! இடியப்ப உரல், பிட்டுக்குழல், தோசைச்சட்டி,யோடு யானைச்சோடா, மென்டீஸ் ஸ்பெசலும்.. கூட.. சுண்டங்காய், பாவற்காய், காத்தவெட்டிக்காய்.. மாவிலை, வாழையிலை, வேப்பமிலை.. இவைகளையெல்லாம் இங்கு நான் சொல்லவில்லை!? ஆளில்லா ஊருக்கு அழகு பாழ்! நீறில்லா நெற்றி பாழ்! என்றெல்லாம் சொல்லப்பட்ட நம் கலாச்சாரங்களைக் காக்கவென.. கடவுள் சிலைகளும், அவர்கள் உலாவர வாகனங்களும் கடவுளுக்கு வேடிக்கைகாட்ட காவடி வகைகளோடு.. திருவிழாக்களும், கலைவிழாக்களும்.. கூடவே பத்திரிகைகள், சஞ்சிகைகளோடு வானொலி, தொலைக்காட்சிகளும் புலம் பெயர்ந்தன. இவையெல்லாம் எதற்காக? எங்கள் கலாச்சாரங்களைக் காப்பதற்குத்தான். ஆனால் சொல்லாமல் வந்த சுனாமியால் தொலைந்துபோன பல்லாயிரம் நம் சொந்தங்களைப்போல.. இவற்றில் நிலைத்து நில்லாமல் போனவையே அதிகம்

உருவாகிவரும் அடுத்த தலைமுறையினர்க்கு - எங்கள் தாய் மண்ணின் வாசனையை தாய்பால்போல ஊட்டி.. தாய்மொழியின் தேவையதை தேனைப்போல் பருகவைத்து பல தடைகளையெல்லாம் தாண்டி இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்யும் மண் சஞ்சிகையின் வீரியம் மிக்க பணி மகத்தானது! புலம்பெயர் தமிழர்கள் வாழ்கின்ற நாடொன்றில் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவோடு நிலைத்திருக்கும் 'மண்சஞ்சிகையைப்போல் இன்னொரு பெயரைத்தேடுகின்றேன் என் நினைவிற்கு இன்னமும் எட்டவில்லை! என் தாய் மண்ணின் அழகைப்போல் என்றும் நறுமணம் வீசும் எம் மண் மாருதம்போல் ஐரோப்பிய மண்ணிலும் வாழ்கின்ற நம் சந்ததிக்காய் வாழ்ந்து கொண்டிருக்கின்ற 'மண்' என்னும் மலரே தமிழ் மனங்களில் கண்ணாக நீ, இருந்து பொன் விழாவும் காணவேண்டும்.

சொந்தமான மண்ணைவிட்டு, சொந்தங்கள் தனைத்துறந்து நொந்த இதயங்களோடு புலம்பெயர்ந்த நம்சொந்தங்கள்- வழிவந்த சந்ததிகள் யாவும் நம் மண்ணின் பண்பாடு காக்கவென தாய் மண்ணின் கலாச்சார விழுமியங்களை கற்றுக்கொடுக்கும் மண்' என்னும் இள மங்கையே!.. இன்னும்!.. இன்னும்!.. உனது சேவை, எமது சந்ததிக்குத் தேவை. மண்ணிற்கு வயதில்லை!.. மரணமும் இல்லை!..- இந்த மண்'ணின் வாழ்வு மலையென உயரட்டும், இன்னும் தொடரட்டும்.

# சேவைக்காக வளர்ச்சி....சேவையில் வளர்ச்சி.....

சாமஸ்ரீ சமூகத்திலகம் நாவற்குழியூ ர்
வைரமுத்து நடராசா - லண்டன்
அகில இலங்கைக்குமான சமாதான நீதவான் (JP)



## மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா வாழ்த்து

மண் சஞ்சிகையின் மனிதநேயப்பணிகள் போற்றுதலுக்குரிய விடையமாகும். எனது இறுதிக்கால மனிதநேயப்பணிகளில் லண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் அறக்கட்டளைமூலம் 2001ல் ஆரம்பிக்கப்பட்ட மனிதநேயப் பணிகளுக்குப் பொறுப்பதிகாரியாகக் கடமை ஏற்று இலங்கையில் 15 இல்லங்களில் சுமார் எண்ணூறு சிறார்களைப் பராமரித்து வருகின்றோம். இல்லங்களில் சிறார்களை நல்லமுறையில் பராமரிக்கிறார்களா.. என்பதை நேரடியாகத் தெரிந்துகொள்ள விரும்பி 2005ல் எந்தவித அறிவித்தலும் கொடுக்காமல் திடீரென வவுனியாவிலுள்ள அகிலாண்டேஸ்வரி அருளகத்திற்குப் போயிருந்தேன். இவ்வில்லத்தில் 50 ஆண் பிள்ளைகளும் 45 பெண்பிள்ளைகளும் எமது பராமரிப்பில் வாழ்கிறார்கள். அங்கு என்ன நோக்கத்திற்காகப் போனேனோ அவற்றை எல்லாம் விபரமாகப் பார்த்துக் கேட்டு அறிந்துகொண்டு புறப்படும் சமயம் இல்ல முகாமையாளர் ஒரு கடிதத்தைக் காட்டி ஜேர்மனியிலிருந்து ஓர் அன்பான மண் சஞ்சிகை ஆசிரியர் மனிதநேயப் பணிகளில் ஈடுபடுவதைச் சுட்டிக்காட்டினார். பாராட்டினார். அக்கடிதத்தைப் பார்த்தபின் அவர் வேறு யாருமல்ல என் உடன் பிறந்த தம்பி என்று கூறிவிட்டு வந்தேன்.

மனிதநேயம் என்பது கடையில் விலைக்கு வாங்குவதில்லை. தாய், தந்தையிலிருந்தும் சிறுவயதிலிருந்தும் ஆரம்பிக்க வேண்டும் குறிப்பாக மண் சஞ்சிகை ஆசிரியர் மிக வறுமையான குடும்பத்தில் பிறந்தவர் சிறுவயதில் பல கஸ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்தவர். உயர்கல்வி பயில பண வசதியில்லாமல் இளம் வயதிலேயே தொழில் புரிய ஆரம்பித்தவர். உன்னை நீ உயர்த்திக்கொள்ள வேண்டுமானால் சான்றோருடன் பழகு, அவர்களின் வழிநட, நீதி தவறாமல் ஒழுக்கத்தைப் பின்பற்று, உறுதியாக நீயே உயர்ந்துவிட முடியுமென்பதை மண் ஆசிரியர் ஆரம்பத்தில் கணக்கு லிகிதராகப் பொறுப்பேற்று பின் கணக்காளராகப் பதவி வகித்து பெற்றோரையும் சகோதரங்களையும் மேல் நிலைக்குக் கொண்டுவர அயராமல் உழைத்தவர்.

மண் சஞ்சிகை ஆசிரியர் ஒரு சிறிய கிராமத்தில் வறிய குடும்பத்தில் பிறந்தாலும் அவரின் தாய்-தந்தையர்-சகோதரர்கள் வழிகாட்டலில் மனிதநேயப் பணிகளை முன்னெடுத்துவருகிறார். இவற்றை ஆசிரியரின் சகோதரர்கள் இன்றும் ஊரில் செய்து வருகிறார்கள். வெள்ளிவிழாக்காணும் மண் சஞ்சிகைக்கும் அதன் வாசகர்களுக்கும் எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் மேலும் பல பணிகளைச் சிறப்பாகத் தொடர்வதற்கு

திருவருள் துணை நிற்கவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். வாழ்க!...வளர்க!...

# வாழ்த்துச்செய்தி

திருமதி பவானி மூர்த்தி
எழுத்தாளர்
சுவீஸ்லாந்து



திருவருளும் குருவருளும் துணை நிற்க மண் சஞ்சிகை என்கின்ற இந்த நாலுக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

திரு சிவராசா அவர்கள் கடல் கடந்து வந்திருந்தாலும் பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனிசிறந்ததுவே என்ற வாசகத்தை நேசிக்கின்ற ஒரு சுதேச பற்றாளராகத் திகழகின்றார். தன் அறிவை விரிவு செய்து அகண்ட பார்வையால் இந்த உலகையும் மக்கள் உள்ளங்களையும் அளந்திருக்கின்றார்.

கால நீரோட்டத்தில் புலம்பெயர்ந்து அந்நிய நாட்டில் குடியேறி இருக்கும் நாம் இன்று வேறு பட்ட கலாச்சாரம் அன்னிய மதத்தினரின் ஊடுருவல் அசுர வளர்ச்சி கொண்டு இருக்கும் கணணியுகம் போன்ற பல்வேறு வடிவில் வருகின்ற பிரச்சனைகளை எதிர் கொண்டுள்ளோம். புத்தகம் வாங்கி வாசிக்கும் வழமை அருகி வருகின்ற இந்த வேளையில் மண் சஞ்சிகை என்கின்ற இந்த நூல் வெளிவருவதென்புதும். 25வது வருட வெள்ளி விழாவைச் சிறப்பாக கொண்டாடவுள்ளதென்பதும் பாராட்டவேண்டியதொன்றாக அமைகின்றது.வாழ்த்துக்கள்.

இது போன்று மேலும் பல நூல்கள் வெளி வர வேண்டும்.உங்கள் பணி தொடர வேண்டும்.சகல மக்களும் சாந்தியும் சமாதானமும் மிக்க பெரு வாழ்வு வாழ வேண்டும்.

வாழ்க தமிழ். வளர்க அவர் பணி. வாழ்த்துக்கள்
வாழ்க வளமுடன்!.. நன்றி!...

# சிசு.நாகேந்திரன்

அவுஸ்திரேலியா
மூத்த எழுத்தாளர்

நான் 90 வயதைத்தாண்டி வாழ்ந்துகொண்டிருக்கிறேன். பல புத்தகங்களையும் வெளியிட்டிருக்கிறேன். நூற்றுக்கணக்கான கட்டுரைகளை எழுதியிருக்கிறேன். மண் சஞ்சிகையின் நீண்டகால வாசகன். என் பிறந்த நாளுக்கு மண் சஞ்சிகை என்னை அட்டைப் படத்தில் இருதடவைகள் பிரசுரித்தி அழகுபடுத்தி எனக்குப் பாராட்டைத் தெரிவித்தமையை என்றும் நான் மறக்கமாட்டேன். ஜனரஞ்சகமான சமகாலத்தைப் பிரபலித்து வாசகர்களைக் கவர்ந்துவரும் இச்சஞ்சிகையின் அனைத்துப் பணிகளுக்கும் எனது நன்றிகள்மண் சஞ்சிகையின் வெள்ளிவிழாவிற்கு எனது வாழ்த்துக்கள். தூர தேசத்திலிருந்து மண்ணின் வாசத்தைச் சுவாசிக்கும் நான் மண்ணின் நீண்டகால வாசகர் என்பது மட்டுமல்ல மண் சஞ்சிகையிலும் பல தடவைகள் உலா வந்திருக்கிறேன். எனது வயதைப்போல் நூறாண்டுகள் மலரட்டும் மண். வாழ்த்துகிறேன்!...போற்றுகிறேன்!...



# வாழ்த்து!....

மணிக்குரல் முல்லை மோகன்
வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர்.
நிகழ்ச்சித்தொகுப்பாளர் - ஜேர்மனி

மண் சஞ்சிகை பிறந்து
வளர்ந்து தவழ்ந்து நடந்து நிமிர்ந்து
மலர்ந்து தேச நினைவுடன் தலையங்கம்
கொண்டு நிற்கும் சஞ்சிகை மண
இது என்றும் நிலையானதாய்
எம்மவர்கரங்களில் தவழ்ந்து
கண்ணுக்குபார்த்திட அழகாய்
கருத்துள்ள விடையங்கள்
தருகின்ற இதளாய் நின்று
ஆண்டு இருபத்தைதில்
அழகாய் கால்பதித்து நிற்கிறது.
பொறுப்புள்ள பணிசெய்தாய்
புகழாரம் நீ கண்டாய்
புலம்பெயர் வாழ்வில்
நீ தனித்துவம் நீ கொண்டாய்
புதுமையாய் சாதனை
பல படைத்தாய் தலை நிமிர்ந்து
ஆதனால் ஆண்டு இருப்பத்தைத்தில்
அயராத உழைப்பால் நீண்டு நிமிரிந்து நின்று
நெடுந்து வளந்து நிலையாக நின்றாய்
அதனால்ஆண்டு இருபத்தைந்தில் கால்பதித்து
இன்புற்று நிற்பதனால் நன்று வாழத்தி நிற்கிறோம்
நாம் உந்தன் வளர்ச்சி கண்டு
நல் ஆசியுடன் வாழ்த்துக்கள் வளமுடன் நலமுடன்
நன்று தொடரட்டும் உன்பணிகள்!...



# வெள்ளிவிழா வாழ்த்து!..

வேலணையூ ர் பொன்னண்ணா
கவிஞர் - டென்மார்க்

மண்ணில் பலநிறமுண்டு வகையுண்டு பெயருமுண்டு
மண்சஞ்சிகைகோர் புகழுண்டு தனித் திறனுமுண்டு..!
ஆண்டுகள் இருபத்தைந்தாய் அன்னைதமிழை
வளர்க்க..
அதற்கு தொண்டாற்றும் அரும்பெரும்
பெருமையுண்டு..!
அதை வாழ்த்துவதில் எங்களுக்கோர் கடமையுண்டு
அதில்லொரு பெரும் மகிழ்வும் உண்டு..!
பணியிலே பெரும்பணி மக்கள் பணி-அப்பணி
மக்களின் அறிவினை பெருக்கிட செய்யும்பணி..!
அப்பணி தானே இந்தமண் செய்யும்பணி
இப்பணி விடத்தான் எப்பணி உயருமோ!?
எண்ணித் துணிந்து செயல்படும் தம்பிசிவராஜாபணி..
வாழிய வாழிய நீடூழி பல்லாண்டு வாழியவே!
பிறந்த தாய்மண்விட்டு புலம்பெயர்ந்து வந்தாலும்
தாயின் தொப்புள் கொடி உறவகலாமல்
தாய்நாடு, தமிழரினம், ஏழைமக்கள் என்று
பேதமில்லா துயர்துடைக்கும் எண்ணம்மிக
கொண்டு..தொண்டாற்றும் தொண்டன் தம்பி
சிவராஜாபணிவான்முட்டும் வரைவளர்ந்து
புகழ்கொள்ள வேண்டுமென
மனதார தமிழ்தாயின் பெயரால் வாழ்துகின்றேன்
அன்புடன்...



# ரூத் மிஷன் (பெண்கள் இல்லம்)

அருட்சகோதரி கிளாடிஸ்
ஜெயரட்ணம் நிர்வாகி
ஜெயபுரம் - கிளிநொச்சி

காலத்தால் அழியாத மண் சஞ்சிகையே
காலமெல்லாம் உம்மை யாவரும் மறவோம்
வாசகர்களுக்கு நீ சுமந்து வரும்-சிறுவர்
வட்டம் முதல் செய்திக்கண்ணோட்டம் வரை
மிகவும் சுவையாய் அமைந்ததுவே

மண் சஞ்சிகையே 25 ம் அகவையில்
கால்கோளிடும் வெள்ளி விழா நன்நாளில்
வருசமெல்லாம் வசந்தமாக அமைவதற்கு
வளமுடன் வாழ்க வாழ்க வென வாழ்த்துகின்றேன்.

சிறுவர்களை வியக்க வைக்கும் உன்
கதைகளும் குறுக்கெழுத்துப் போட்டிகளும்
சுகமாக வாழ்வதற்கான உன்
சுகாதாரக் குறிப்புக்களும்
எண்ணில் அடங்காதவை
என்னவென்று சொல்வதென்று எனக்கே புரியவில்லை

மண் என்ற சொல்லை அழகு படுத்தி ஆசீர் வதித்து
மண் வாசனையாய் நீ உருவாக வழிகாட்டிய
ஆசிரியராம் அந்த உத்தமனையும் - இன்நாளில்
ஆயிரம் கோடி மலர்தூவி வாழ்த்துகின்றேன்.



# வானவில்லாய் நீயிருக்க!...

செல்வன் கி.பிரியங்கன்
ஜெயபுரம் - கிளிநொச்சி

மழை மேகம் வானவில்லாய் நீயிருக்க
மழை மேகம் இலைகள் எல்லாம் உதிர்ந்தாலும்
வெயில் வந்து தொடர்ந்தாலும்
மழைத்துளி வராதா?
மரம் துளி விடாதா? என்பது போல்

தமிழர் புகழ் ஓங்க வேண்டும்
தமிழ் மணம் தரணியெங்கும் ஒளிரவேண்டும்
தமிழ் கலாசாரம் நிலைக்க வேண்டும் என்ற
எண்ணங்களுடன் நீ சுமந்து வரும்
அத்தனை நிகழ்ச்சிகளும்

அரும் சுவையை ஊட்டுகின்றது.
உன் வயது 25 என்னும் போது
உலகே வியப்பாய் பார்க்குதையா.
மென் மேலும் உன் பணி சிறக்க
மனதார வாழ்த்துகின்றேன்.!..

# வெள்ளிவிழா வாழ்த்து.....

செல்வி ம தர்சிகா
ஜெயபுரம்-கிளிநொச்சி

மணம் வீசும் மல்லிகையாய்
சனம் பார்க்கும் சஞ்சிகையாய் - தமிழர்
பண்பாட்டின் வழிகாட்டியாய்
கண்களுக்கு சுவைவிருந்தாய்

25 ம் ஆண்டு நிறைவு பெறும்
இன்னாளில் இன்பமுடன்
வளர்க வளர்க வென வாழ்த்துகின்றேன்.

தமிழ் மணம் வீசிடும் மண் சஞ்சிகையை
தமிழ் இலக்கிய சாரல் துளிகளாய்
உலகெங்கும் உன்புகழ் வீசிடவே
பாரெங்கும் வீசுதையா உன் புகழை

வெள்ளி விழா இன்நாளில்
வெண்குன்றனாய் நீ ஒளிர
வெள்ளி கொலுசு மணி ஓசையுடன்
வளர்க வளர்கவென வாழ்த்துகின்றேன்.

# ஸ்ரீ சண்முகா மகளிர் இல்லம்

செல்வி விமலா நடராசா
நிர்வாக முகாமையாளர்
ஸ்ரீசண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை



"மலை சாய்ந்த போதும் தமிழர் தலை சாய்வதில்லை" என்ற கருத்தைப் பறைசாற்றுமாப்போல் ஈழநாட்டில் மட்டுமன்றித், தமிழர் தடம்பதிக்கும் தேசங்களிலெல்லாம் தமிழ் மணம் பரப்புகின்ற"மண்" சஞ்சிகையானது 1990ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 25வது ஆண்டுகள் நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காணுகின்ற இந்தத் தருணத்தில் வாழ்த்துச் செய்தி கூறுவதையிட்டு எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழர்கள் திசைதொலைத்து நின்றவேளையிலும் எம்மொழியும், எம் கலையும் தொலைந்துவிடக்கூடாதென்ற நோக்கோடு செயற்பட்டு வேற்றுத் தேசத்திலும் மங்காத மொழியாய் எம்மொழி செழிக்க "மண்" வழிவகுத்தது என்றால் மிகையாகாது. அதுமட்டுமல்ல"மண்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திருவாளர் வ சிவராசா அவர்கள், சஞ்சிகை மட்டுமன்றி எமது நாட்டில் நிலவிய யுத்த சூழலினால்பாதிக்கப்பட்ட சிறார்களுக்கும், வசதியற்ற சிறுவர் இல்லங்களுக்கும் அன்றுதொட்டு இன்றுவரை நிதியுதவி வழங்கி வருகின்றார். பிறருக்கு உதவவேண்டும் என்ற நற்சிந்தனையுடன் செயற்பட்டு" மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு அவர்கள் செய்த சேவைகள் போற்றுதற்குரியதாகும்.

மேலும் எமது ஸ்ரீ சண்முகா பெண்பிள்ளைகள் இல்ல மாணவியர்களுக்கு நிதிஉதவி வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதும், பாராட்டத்தக்கதுமாகும். அத்தோடு சிறார்களின் அறிவை விருத்தி செய்யும் பொருட்டு வினாவிடைப்போட்டி, குறுக்கெழுத்துப்போட்டி போன்றவறஇறையும், கற்பனைத் திறனை விருத்தி செய்ய கவிச்சோலை, சிறுகதை, கட்டுரை போன்றவற்றையும் நல்வழிப்படுத்தும் நற்சிந்தனைகளையும் தாங்கிவரும்" மண்"சஞ்சிகையானது எம் மொழியின் வளர்ச்சிக்கு பாரிய பங்காற்றுகின்றது என்பதில் ஐயமில்லை.

இன்று நேற்றல்ல இருபத்தைந்து வருடங்களாக தொடர்கின்ற இந்த"மண்"ணின் பணியானது மேலும், வளரவும், திரும்புகின்ற திக்கெங்கும்"மண்" மணம் வீசவேண்டும் எனவும் மனமார்ந்த எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்!..

"தமிழின் இறுதிச் சுவாசம் வரை

மண் சுவாசித்துக்கொண்டே இருக்கும்"

# இந்து அன்பகம் சிறுவர் இல்லம்
# හින්දු අන්පහම ළමා නිවාසය
# Hindu Anpakam Children Home

2ம் கட்டை, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா

Regd No :NEP/DS/V/SS/111
: HA/04/V/24

2nd Mile Post, Mannar Rd,
Vepankulam, Vavuniya

President
Miss.K.Jeyarany

Vice President
Mr.N.Tharmarasah

Secretary
Mrs.S.Nirmala

Treasurer
Mr.K.Sabanathan

Asst. Secretary
Mr.J.Jegvan

Asst Treasurer
S.Subramaniyam

Auditer
Mr.T.Kurukulasingam

Legal Adviser
Mr.K.Thayaparan LL.B (Col)

Board of Members
Mr.K.Kirupagaran
Mr.R.Tharmapalan
Mr.K.Nadarasasingam
Mrs.K.Leelawathy
Mr.V.Karthikesu
Mr. .Vijayaratnam
Mr.K.Tharmalingam
Mrs.K.Chandraleela
Mrs.J.Thadsajini

Patron
Mr.S.AThijakarajah
Mr.P.Sathiyanathan
Mr.V.Nadarajah

Account
032020254291
Hatton National Bank
Vavuniya

Conduct
024 222 3683
077 6143628
E.Mail
hinduanpakam@gmail.com

## நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகின்றோம்

'செயற்கரிய செய்வார் பெரியார்' என்ற வள்ளுவன் வாக்குக்கு இணங்க பணியாற்றிவரும் மண்ணுக்கு வெள்ளிவிழா என்பது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தாய் மண்ணை மறவாது "மண்"வழங்கும் உதவிகளுக்காய் சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

மண் நீயோ தாயகத்தை நினைப்பதோடு நின்று விடாது இங்கு வாழும் சிறுவர் இல்லங்களின் செல்லக்குழந்தைகளுக்காய் ஆற்றி வரும் பெரும் பணியை மண் இதழ் மூலம் கண்டு பிரமிப்புக் கொள்கின்றோம். உங்கள் சேவையை வாழ்த்த வார்த்தைகள் இல்லை.

எங்கள் இல்லக் குழந்தைகளுக்கு நீங்கள் செய்யும் பணிகளே மிகப் பெரியன இதுபோல் நீங்கள் ஏனைய இல்லக் குழந்தைகளுக்கும் செய்கிறீர்கள் என்பது மிகப்பெரிய பணி. "அன்னசத்திரம் ஆயிரம் நாட்டலை விட ஆங்கோர் ஏழைக்கு கல்வி புகட்டல் பெரும்பணி" என்ற முதியோர் வாக்கிற்கு இணங்க தங்களது பணி தாயகம் எங்கும் பரவி நிற்கின்றது.

மண்ணே நீங்கள் வெள்ளிவிழா மட்டுமல்ல பொன்விழா வைரவிழா,பவளவிழா நூற்றாண்டு விழா எனக்கண்டு தரணி எங்கும் பொங்கி பிரகாசிக்க வேண்டும் என்று நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

மண் ஆசிரியர் கௌரவ வ.சிவராஜா அவர்களும் எல்லச் செல்வங்களும் பெற்று நீண்ட ஆயுளுடன் குடும்ப சமேதரராய் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அறநெறிச்செல்வி கு.ஜெயராணி
(சாமிஅம்மா) தலைவர்

இந்து அன்பகம் சிறுவர் இல்லம்

# VANNI REHABILITATION ORGANIZATION FOR THE DIFFERENTLY ABLED

VAROD
ENABLING BETTER WAYS FOR LIVING

Vavuniya - Killinochchi - Mullaithivu
4th Mile Post, Mannar Rd, Pampaimadhu, Vavuniya 43000, Sri Lanka.

Telephone : +94(0)24 4925635
E-mail : varodserve@gmail.com
web site : www.disablesvanni.org


"மண்" சஞ்சிகையின் வெள்ளி மலருக்கு
நிறைவேற்று இயக்குனர்,
வரோட், இலங்கை
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

"மண்" என்னும் கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையானது கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக ஐரோப்பிய தேசத்தில் வலம் வந்து, இவ்வாண்டில் வெள்ளி விழா காண்பது நிச்சயமாக அகம் மகிழத்தக்கதொன்றாகும்.

தாயக மண்ணில் கூட பல்வேறு காரணிகளால் தமிழும் அதன் தனித்துவங்களும் இழக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வரும் இச் சமகாலத்தில், புலம்பெயர் தேசமொன்றில் மேலைநாட்டுக் கலாச்சாரத்தில் மட்டுமல்லாது, சொந்த வீட்டு மண் மணம் மறவாமலும், தமிழ் வளர்க்க இச் சஞ்சிகை ஊடாக அரும்பணி புரியும் உள்ளங்கள் உண்மையில் பாராட்டுதற்குரியதே.

அவ்வாறே, இச் சஞ்சிகையானது புலம்பெயர் வாழ் இளம் தமிழ் உள்ளங்களை ஊடுருவி அவர்களை தமிழ் பேசும் நல்லுலகம் நோக்கி சங்கமிக்க வைக்கும் ஒரு கருவியாகவும் செயற்படுகின்றது என்பது கண்கூடு.

ஆகவே, இப் பணி வழி, பிரதம ஆசிரியராகத் தன்னை அர்ப்பணித்திருக்கும் மதிப்புக்கும் அன்புக்குமுரிய திருவாளர் சி சிவராசா அவர்களின் இந் நன் முயற்சி இங்கு குறிப்பிட்டுப் பாராட்டப்படவேண்டியதொன்றே. அவ்வண்ணமே அவரோடு உடன்பயணிக்கும் அனைத்துத் தமிழ் அன்னையின் அன்பு மைந்தர்களையும் இத்தருணத்தில் எமது மனக்கண்ணில் கொணர்ந்து வாழ்த்தி நிற்கின்றேன்.

அத்தோடு, எமது வரோட் அமையத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கான மனிதாபிமான வலுவூட்டற் பணிக்கு 'மண்' குழுமம் செய்துவரும் பங்களிப்பையும், எம் இலக்குக்குழுவினர் சார்பாக நினைந்து மனமார்ந்த நன்றியையும் பாரட்டுதலையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அமுதென அழைக்கப்பெறும் எம் தமிழ்மொழியைப் பேணிக்காத்து வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பை சுமந்திருக்கும் எம் இளம் சமூகம் உள்ளிட்ட அனைத்து உள்ளங்களும் இறையருளால் ஆட்கொள்ளப்பட்டு, வாழ்வாங்கு வாழ ஆசித்து நிற்கின்றேன்.

*எல்லாப் புகழும் இறைவனுக்கே!*

VANNI REHABILITATION ORGANIZATION FOR THE DIFFERENTLY ABLED
EXECUTIVE DIRECTOR

அருட்தந்தை அல்பேட் ஜோ அருள்ராஜா CMF
நிறைவேற்று இயக்குனர், வரோட், இலங்கை.

2015.02.20

## Good samaritan Orphanage And Rehabilitation Center Cecilton

Srikaran Kandasamy - Founder & Director
Balangoda - Srilanka
Karl - Speidel Str. 9
88239 Wangen
Tel 07522 912869

எமது தேசத்தை குறித்ததான தரிசனம் திக்கற்றவர்கள் அனாதைகள் கைவிடப்பட்டவர்கள் விதவைகள் படும் உபத்திரவத்தில் அவர்களைப் பராமரிப்பது மாசில்லாத அன்பு எமது தேசத்துக்காக நாம் என்னத்தை செய்தோம் நாம் எமது சொந்தம் பந்தம் எல்லாவற்றையும் விட்டு வந்து இந்தத் தேசத்தில் சுகபோகமாக வாழ்கின்றோம் எமது தேசத்தில் எமது உடன் பிறப்புக்கள் அனாதை ஆக்கப்பட்டு இருக்கின்றார்கள்

இவர்கள் மேல் யார் அன்பு காட்டுவது? நீங்களும் நானும் தான்

2000 ஆண்டு நான் வவுனியாவிற்குச் சென்றிருந்த போது அங்கு எதிர்பாராத விதமாக ஒரு சம்பவம் நடந்தது அதை நானும் எனது மனைவியும் பிள்ளைகளும் பார்த்துக்கொண்டு நின்றோம் .

பஸ்தரிப்பு நிலையம் மக்கள் கூட்டமாக நிற்கின்றார்கள் அவரவர் தங்கள் அலுவல்களில் சுறுசுறுப்பாக நிற்கின்ற ஒரு சூழ்நிலை அந்த இடத்தில் பார்க்கின்றேன் .இதன் மத்தியில் ஒரு சிறுபையன் 6 வயது இருக்கும் இரண்டு காதிலும் பூ வைத்தபடி நெற்றியில் பெரிய சந்தணப்பொட்டு அரை காற்சட்டை இரண்டு கைகளையும் ஏந்திய படி ஒவ்வொருவரிடமும் ஏதோ கேட்டுக்கொண்டு அவசரம் அவசரமாக அங்கும் இங்குமாக ஓடுகின்றான் .அப்போது ஒரு நபர் எம்மிடம் சொல்லுகின்றார் 6 மணிக்கு ஊரடங்குச்சட்டம் கெதியாக சாமன்களை வாங்குங்கோ என்று சொல்ல அந்தப் பையன் எம்மிடம் வந்து விட்டான் என்ன கேட்கின்றான் என்று விளங்கவில்லை.

இரண்டாம் தரம் நான் கேட்க்கின்றேன் என்னவென்று அப்போது அந்தத் சிறு பையன் கண்களில் கண்ணீர் வர சொன்னது எனது அம்மாவுக்கு சாப்பாடு வாங்க காசு தாங்கோ என்றான். எனது மொழியில் தமிழ் மொழியில் கேட்டது என் இருதயத்தை இரண்டாக உடைத்து விட்டது உடனே நாங்கள் சிறு பையனை எமது வாகனத்துக்குக் கூட்டிப்போய் விபரத்தை கேட்டோம் அப்போது அந்தப் பையன் உருக்கமாக பயத்தோடு சொன்ன காரியம் .

தனது அப்பா குண்டு வெடித்து கிளிநொச்சியில் செத்துபோட்டார் நானும் அம்மாவும் முகாமில் இருக்கின்றோம் அம்மாவுக்கு காலில் கட்டி நடக்க மாட்டா என்னைப் போய் ரவுணில ஆக்களிட்டை காசு வாங்கி கொண்டு எனக்கு சோரு கட்டிக்கொண்டு வர சொன்னவா என்று தன்னை அனுப்பி விட்டவா என்றான் உடனே நாங்கள் அவனுக்கு தேவையான பணத்தைக் கொடுத்து கால்ச்சட்டை பொக்கற்றுக்குள் வைத்து கவனமாக போகும் படி அனுப்பிவிட்டு நாங்கள் அடுத்த நாள் சிறுபையன் சொன்ன சிதம்பரபுர முகாமுக்கு சென்று பார்த்தால் அங்கே எமது மக்கள் 1000 கணக்கில் அகதிகளாக வந்து இருக்கின்றார்கள் மிகவும் கஸ்டமான சூழலைக்கண்டோம் என்ன செய்வது என்று யோசித்து எப்படி இவர்களுக்கு உதவி செய்வது எங்களால் முடியாததுதான் ஆனால் சிறு பிள்ளைகளுக்கு ஏதாவது செய்ய எம்மிடம் இப்போ என்ன இருக்கின்றது கொஞ்சக் காசுதான் வைத்து இருந்தோம.

ஒன்றும் செய்ய முடியாது என்று நான் யோசிக்கும் போது எனது மனைவி சொன்னா அப்பா நான் எனது பவுண் நகைகளை இவர்களுக்கு வித்து கொடுக்க போகிறேன் என்று நானும் எனது பிள்ளைகளும் சரி ரவுணுக்கு போய் கணேசா ஜுவலரியில் 110 பவுண் நகையை விற்று முளுபணத்தையும் கொண்டு போய் முகாமில் கொடுத்து ஒரு சின்ன ஆதரவு எமது மக்களுக்கு சிறு பிள்ளைகளுக்குச் செய்து கொடுத்தோம்

அன்றில் இருந்து அந்த சிறு பையனின் குரல் எப்போதும் என் காதில் கேட்கும் நாமும் இந்த உலகத்தில் வாழ்ந்து ஒரு நாள் மரிக்கப்போகின்றோம் எமது மக்களுக்காக எமது பிள்ளைகளுக்காக என்னத்தைச் செய்தோம் என்ற ஏக்கம்...


அப்போது எமக்கு மட்டக்களப்பில் சிறுவர் இல்லத்தை ஆரம்பிக்க வழி கிடைத்தி நடாத்தி வந்தோம் 2004 ல் சுனாமி அடித்ததினால் எமது சிறுவர் இல்லம் உடைந்து விட்டது அதன் பின்பு நாங்கள் 2005 ல் இருந்து மிகவும் ஏழ்மையான மக்கள் வாழும் மலையகமக்கள் மத்தியில் சுனாமிபயால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுடன் வந்து சிறுவர் இல்லம் ஆரம்பித்து இப்போது எமது இல்லத்தில் 34 பிள்ளைகள் இருக்கின்றார்கள் எல்லோரும் அனாதை ஆக்கப்பட்டவரகள் நமது இல்லத்துக்கு இன்றுவரை 100 பிள்ளைகளுக்கு மேல் வந்து புனர்வாழ்வு மறுவாழ்வு பெற்று இன்று எமது சமுதாயத்தில் அவர்களும் எம்மைப் போல வாழ்கின்றார்கள்.

நன்றி

சிறீகரன் குடும்பம்

ஜேர்மனி





# மண் சஞ்சிகையின் போட்டி முடிவுகள்

மண் சஞ்சிகையின் இருபத்தைந்தாவது ஆண்டுநிறைவையொட்டி வாசகர்களிடையே நடாத்தப்பட்ட சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள்..

சிறுகதைப்போட்டி:-

1வது பரிசு :- "காயங்கள் மாறும்" திருமதி கீதா பரமானந்தன் - Kevelaer

2வது பரிசு:- "கண்ணாடி வாழ்க்கை" திருமதி மீரா குகன் - Meerbusch

3வது பரிசு:- "தங்கத்தாயகம்" திருமதி கலைவாணி ஏகானந்தராசா - Weeze

:- "சுதந்திரப்பறவைகள்" திருமதி வசந்தா ஜெகதீசன் - Geilenkirchen

(பங்குபற்றிய போட்டியாளர்கள் - 25 பேர்)

கவிதைப்போட்டி:-

1வது பரிசு :- "வறுமையைப்புதை..வாழ்வை விதை" திருமதி.வசந்தா ஜெகதீசன் - Geilenkirichen

2வது பரிசு:- "மதமில்லா இறைவன்" திரு.ஜெயம் தங்கராசா - Netherland

:- "ஏழைகள்" திருமதி கெங்கா ஸ்ரான்லி - Elfstadt

3வது பரிசு:- "மலாலா என்னும் மருந்து" திரு ப.பசுபதிராசா - Wuppertal

(பங்குபற்றிய போட்டியாளர்கள் - 32 பேர்)

கட்டுரைப்போட்டி:-

1வது பரிசு :- "கணனி உலகம்" ஏ.ஜே ஞானேந்திரன் - Swissland

2வது பரிசு:- "தமிழ்ப்பெண்களின் இன்றையநிலை" - திருமதி சிவகாமசுந்தரி கணேசநாதன் - Goslar

:- "தவத்திரு தனிநாயகம் அடிகளார்" - திருமதி ஜெயா நடேசன்- Havixberg

3வது பரிசு:- "புலம்பெயர் வாழ்வியல்" - திருமதி மீனா சிவலிங்கம் - Hennef

:- "தவத்திரு தனிநாயகம் அடிகளார்"- திரு கதிர்பரமலிங்கம் - Weeze

(பங்குபற்றிய போட்டியாளர்கள் - 23 பேர்)

# வறுமைபுதை... வாழ்வைவிதை... (போட்டிக்கவிதை)

திருமதி. வசந்தா ஜெகதீசன்
எழுத்தாளர் - ஜேர்மனி

(மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா வாசகர் கவிதைப்போட்டியில் முதலாவது பரிசுபெற்றது)

சுட்டெரிக்கும் வெய்யில் போல தத்தளிக்கும் வறுமை
வரண்டநிலப் பாலைபோல வரட்சிதரும் கொடுமை
காலமென்னும் காத்திருப்பை கத்தரித்து தறிக்கும்
கோடரின் காம்பு போல கூடநின்றே கொல்லும்

வித்தகத்தின் அறிவுதன்னை விளக்கின்றி இருட்டும்
கற்றிடவே பலம்குன்றும் பாலகரே பிறக்கும்
சத்துணவு சாப்பாடு வழியின்றி மனித இனம் துடிக்கும்
சந்ததிகள் வாழ்வரணை வரட்சி நிதம் வாட்டும்

அன்றாட உணவே தான் அத்திவாரம் அமைக்கும்
அதுவின்றிப் போனாலே எது வாழ்வில் ஜெயிக்கும்
தேய்ந்து போன உடலோடு தேகமெங்கும் நடுங்கும்
ஓய்ந்து போன பம்பரமாய் சாய்ந்துபோக நேரும்

தேவைகொண்ட எவற்றிலுமே ஆர்வமது குன்றும்
தூரமற்ற பார்வை வலம் துன்பங்களை விதைக்கும்
காலமற்றுக் கரைகின்ற நேரமது கனக்கும்
தள்ளாடும் கோலத்தில் தளர்வுகளே பேசும்

தன்வயிற்றுப் பசிபோக்க எண்ணங்களைக் கருக்கும்
உடல்பலத்தின் ஊனங்களால் உண்மைகளும் மாறும்
பசி வந்தால் பத்தும் தான் பறந்து போக நேரும்
உலகமன்றில் உணவின்றி வாடி நிற்போர் கோடி

விழாவொன்றில் விதவிதமாய் உணவளிப்போர் தேடி
உண்மையினை ஒப்புவித்து ஓர்மாற்றம் நாடி
பசியின்றி பகிர்வோரின் விருந்தோம்பல் மூடி
பசிக்குணவை தேடுகின்ற பாலகரை நினைப்போம்

பலமான சமுதாயம் உருவாக்க உழைப்போம்
எதிர்காலம் இருளாமல் விளக்கேற்றும் எண்ணெய்
இதுவாக நாமானால் வெளிச்சமே உண்மை
பசிகொண்டு பலவற்றை இழந்திருக்கும் உலகை

பற்றிப் படராமல் வேரறுக்க விரைவீரோ நாளை
விடியலிட்ட விதைநிலமே விருட்சத்தின் வெற்றி
வறுமையது வரட்சிகொள்ள வலுப்பெறுமே வாழ்க்கை.



# கணனி உலகம்

ஏ.ஜே.ஞானேந்திரன்
எழுத்தாளர்
சுவீஸ்லாந்து

(மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா வாசகர் கட்டுரைப்போட்டியில் முதலாவது பரிசுபெற்ற கட்டுரை)

உலகம் இன்றைய நாட்களில் மிதமிஞ்சிய வேகத்தில் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வருகின்றது. உடைநடை பாவனைகள், உணவுப் பழக்கவழக்கங்கள், பயண முறைகள், பிள்ளைகளின் கல்வித் திட்டங்கள் என்று எதையெடுத்தாலும், ஆண்டுக்கு ஆண்டு பாரிய மாற்றம் நிகழ்ந்து வருவதை எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது. பலவற்றை விரும்பி வரவேற்றாலும், சிலவற்றை முகம் சுளித்தபடி ஏற்றுக் கொள்ளும் பக்குவமும் நம்மிடம் தொற்றியிருக்கின்றது. ரோமாபுரியில் வாழும்போது ரோமனைப் போல் வாழக்கற்றுக் கொள் என்பதுபோல, மண்விட்டு மண்பெயர்ந்த நம் வாழ்வில் விரும்பியோ விரும்பாமலோ பல பழக்கவழக்கங்கள் நம்முள் சேர்ந்துள்ளன.

அண்மைய காலங்களில் நம் வாழ்வில் அசுர மாற்றங்களை ஏற்படுத்தி இருப்பவைதான் கணனிகள். எப்படியோ இருந்த உலகத்தை உருத்தெரியாமல் இன்று வேறொரு வடிவிற்கு மாற்றியிருக்கின்றன இந்தக் கணனிகள்! கடவுள் படைத்த உலகத்திற்குள் மனிதன் படைத்த இன்னொரு உலகந்தான் கணனி உலகம். இன்னொரு உலகத்தைப் படைக்கும் அளவிற்கு மனிதன் கடவுளாகி விட்டானா என்ற தர்க்கம் இங்கே எழலாம். எனவே நாம் இந்தப் புதிய வரவை இப்படிச் சொல்வோம். அதாவது இறைவன் படைத்த மனித மூளைகள் ஒருங்கிணைந்து, கணனி உலகத்தைப் படைத்திருக்கின்றன.

*பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை உடைய செயல்*

என்கிறார் கடுகைத் துளைத்து, எழுகடல் புகுத்தப்பட்ட குறள்களை நமக்குத் தந்த வள்ளுவர் பெருமான். எல்லோராலும் செய்தற்கரிய செயல்களை ஆற்றும் வல்லமை பெருமை காக்கும் சான்றோர்களுக்கே உரியது என்கிறார் இவர். கணனி உலகத்தை நமக்குத் தந்த சான்றோர்கள், செய்தற்கரிய ஓர் ஆற்றலையே செய்துள்ளார்கள் என்பதில் எள்ளளவேனும் சந்தேகம் இல்லை.

எதற்கெடுத்தாலும் கணனி என்ற இன்றைய நிலை சில பாதகங்களை மனித சமுதாயத்திற்கு கொண்டுவந்து சேர்த்திருந்தாலும், அதன் சாதகங்களே அதிகம் என்று சொல்லவேண்டும். கத்தி என்பது மனிதனின் கழுத்தை அறுக்கவும் பயன்படும் வேளை கத்தரிக்காய் நறுக்கவும் கைகொடுக்கும் என்பது போல, எதையெடுத்தாலும் அதற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது இயல்பே.

இந்தக் கணனி உலகத்தால் பதிவுகள் என்பவை கிடுகிடு வளர்ச்சியைச் சந்தித்திருப்பதை நாம் இங்கே சொல்லியாக வேண்டும். எழுத்தாணியால் ஓலைகளில் பதிந்து, பின்பு தட்டச்சு இயந்திரத்திற்குத் தாவி கோடானு கோடி கோப்புகளைத் தகவல்களாகத் திரட்டிச் சேமித்து வைத்த மனிதனுக்கு, இந்தக் கணனி உலகம் தகவல் திரட்டல்களை வெகு சுலபமாக்கி இருக்கின்றது.

விரல் நுனியில் அவசியப்படும் தகவல்களை உடனுக்குடன் கொண்டுவந்து சேர்க்க அவனால் இப்பொழுது முடிகின்றது. கட்டுக் கட்டாக கோப்புகளை அடுக்கி அவற்றில் புழுதிபடிய வைத்து, பின்பு ஏணி கொண்டேறி அவசியப்பட்டதை தேடுவது என்பது அவனுக்கு அளவுகடந்த சிரமத்தை, நேர விரயத்தை தந்தது. ஆனால் இன்றோ வங்கிகள், அலுவலகங்கள், கல்வி நிலையங்கள், சமூக அமைப்புகள் என்று எதுவாக இருப்பினும் அவசியப்படும் தகவல்கள் விரல்நுனி வித்தைகளாகி விட்டன.

இன்னொரு குறிப்பிடத்தக்க விடயம் கடிதத் தொடர்புகள். இந்தக் கணனி உலகின் அறிமுகத்தால் இன்று உலக மக்களிடையிலான தொடர்புகள் எப்படி மாறிவிட்டன என்று பார்த்தீர்களா? காடுகளில் முரசடித்து செய்திகளைக் காவிச் சென்ற காலம் ஒன்று இருந்தது என்பதை நாம் எவருமே மறந்து விடப்போவதில்லை.

தகவல்களின் பரிமாற்றத்திற்காக அரண்மனைப் புறாக்களையே பெரிதும் நம்பியிருந்த அரசர்களின்

ஆட்சிக் காலத்தையும் மறந்திருக்கமாட்டீர்கள். ஆமை வேகத்தில் செய்திகள் பரிமாற உதவிய தந்திகள் பாவனையில் இருந்த காலத்தையும் நாம் மறந்துவிடப் போவதில்லை. கப்பல், ரயில் என்று நகர்ந்து விமானங்கள் மூலம் நம்மை வந்தடையும் கடிதங்கள் கதையும் உங்களுக்குப் புதிதல்ல. இதையெல்லாம் மிஞ்சும் வகையில் இன்று வந்து சேர்ந்திருப்பதுதான் மின்னஞ்சல் என்று அழகிய தமிழில் சொல்லப்படும் கணனி மூலமாகச் சென்றடையும் கடிதங்கள்.

எழுதி முடித்த அடுத்த கணமே உலகின் எந்த நாட்டின் மூலையாக இருந்தாலென்ன, இணைய வசதியிருந்தால், கடிதம் உரியவரிடம் பத்திரமாகப் போய்ச் சேர்ந்துவிடுகின்றது. இந்த நவீன வசதி இன்று உலகையே ஒரு புரட்டுப் புரட்டியிருக்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

சில தனித்துவமான செய்திகளை, கையொப்பம் தேவைப்படும் பத்திரங்களை இந்த மின்னஞ்சல் மூலம் அனுப்ப முடியாத அசௌகரியங்கள் இருந்த போதிலும், இந்த மின்னஞ்சல் வசதி, பிரமாண்டமாதொரு மின்னியல் புரட்சியை உருவாக்கி இருக்கின்றது

பிள்ளையைப் பற்றி உயர்வாகப் பேசும்போது அந்தப் பிள்ளையின் தந்தை பற்றி சொல்வது மிக அவசியமானதாகின்றது.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கெட்ட தாய்.

என்கிறது இன்னொரு குறள். தன் மகன் அறிவாற் சிறந்தவன் என்று உலகத்தால் பேசப்படும்போது அதைக் கேட்டு பெரிதும் மனம் பூரிப்பவள் தாய். தான் பெற்ற மின்னஞ்சல் உலகத்திற்கு உன்னத சேவையாற்றுகிறதே என்று கேள்வியுற்று மனம் பூரிக்கும் இணையம் சாதாரணப்பட்டதொன்றல்ல! இன்று இந்த இணையம் நமக்குச் செய்துவரும் அளப்பரிய தொண்டால், நாம் பேச்சுமூச்சற்று வியந்து நிற்கின்றோம்.

ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல?

பெரும் தகவல் களஞ்சியமாகிவிட்ட இணையம் இன்று தோண்டத் தோண்ட வற்றாத ஒன்றாகி விட்டது. எந்தத் தகவலாக இருப்பினும் நமக்குத் தேவைப்படுவது நம் விரல்களும் கணனியை இயக்கும் அறிவுத் திறனுந்தான்! கூகிள், யாகூ என்ற தேடுபொறிகளின் வரவு, இணைய உலகத்தை மாயாஜால உலகமாக்கி விட்டிருக்கின்றது. அலிபாபாவும் 40 திருடர்களும் என்ற 50 வருடங்களுக்கு முன்னைய எம்.ஜி.ஆரின் திரைப்படம் உங்களில் எத்தனை பேருக்கு நினைவில் நிற்கின்றது?

இந்தத் திரைப்படத்தின் ஒரு கட்டத்தில், குகையை மூடியுள்ள கல்லைத் திறக்க, அண்டாசாகசமும், அபுகாசாசகமும் திறந்திடு சீசே என்ற மந்திரத்தைச் சொல்ல, அந்தப் பாரிய கற்பாறை நகர ஆரம்பிக்கும். இங்கேயும் ஏதோ பெரிய மந்திர தந்திரம்போல கணனியின் பொறிப்பலகையின் விரல்களை அழுத்த நமக்கு முன்னே திறந்து விரியும் உலகம் நம்மைப் பேராச்சிரியத்திற்கு உள்ளாக்கும்.

புதிதாக வந்துள்ள திரைப்படம் பற்றிய விமர்சனம் வேண்டுமா? சில நிமிடங்களுக்கு முன்ப சிரியாவில் நடந்த தாக்குதல்களின் விபரம் தேவையா? அல்லது அவுஸ்திரேலியாவில் நடந்து கொண்டிருக்கும் டென்னிஸ் மோதலில் என்னதான் நடக்கின்றது என்று அறிய வேண்டுமா? சுடச்சுடத் தகவல்களைத் தர தயாராக இருக்கின்றது இணையம்.இப்பொழுது பொருட்களைக் கொள்வனவு செய்பவர்களும் இணையத்தில் ஏராளமாகப் பெருகிவிட்டார்கள். நான்கு சுவருக்குள் இருந்தபடி, தமக்கு அவசியப்படும் வீட்டுப் பொருட்களுக்கான உத்தரவு ஆணையைப் பிறப்பித்து விட்டு, தங்கள் வீட்டு வேலைகளை இல்லத்தரசிகள் செய்துகொண்டிருக்க, சில மணி நேரங்களில் தேவைப்படும் பொருட்களுடன் வீட்டு வாசலில் வந்து நிற்கின்றது விநியோக வாகனம். நேரவிரயம், வாகனத்திற்கான எரிபொருட் செலவு என்று எல்லாமே தவிர்க்கப்பட்டு பொருட்களும் மலிவான விலையில் வீடு வந்து சேரும் வழி பிறந்திருக்கின்றது.

கதை இன்னும் முடியவில்லை. நமது பண வரவு செலவுகளை நாமே வீட்டுக்குள் இருந்தபடி வங்கியாளர்களாக மாறி கையாளுகின்ற வசதி, தேவைப்படும் இடத்திற்கு ஒரு தொகைப் பணத்தை அனுப்பும் வசதி என்று கணனி உலகம் பல நவீன

வசதிகளை இன்று தருகின்றது.

பணம் ரொக்கமாக எடுக்க மாத்திரமே தானியியங்கி வங்கிகளை நாடுகிறோமே ஒழிய, வங்கி ஊழியர்களின் சேவையை எதிர்பார்த்து நிற்பது என்பது காலத்திற்குக் காலம் அருகிக் கொண்டே செல்கின்றது.

பல சொற்களின் பொருள்தேட பெரிய பெரிய அகராதிகளின் பக்கங்களைப் புரட்டிய காலங்கள் எல்லாம் மலையேறி விட்டன. இலவச அகராதிகள் ஏராளமாக இணையவலம் வருகின்றன. ஒரு மொழித் தகவலை மொழிபெயர்க்க இணையப் பக்கங்கள் போட்டிபோட்டுக் கொண்டு உதவுகின்றன. பல அரிய நூல்களை வாசிக்கும் வசதியையும் பாரி மன்னன் போல கொடையாக, புத்தகப் பிரியர்களுக்கு வாரிவழங்குகின்றது இணையம்.

நாம் திட்டமிட்டு நமது உல்லாசப் பயண ஏற்பாடுகளை ஒழுங்கு செய்ய கணனி உலகம் நன்றாகவே வசதி படைத்திருக்கின்றது. இதற்கான பயண ஏற்பாட்டு முகவர்கள் இணையத்தில் ஏராளமாகக் காணப்படுகின்றார்கள்.

போட்டி நிறையவே இருப்பதால், நமக்கு வசதியான நாளில், மலிவான விலையில் பயணச் சீட்டுக்களை நம்மால் முன்கூட்டியே பதிவு செய்ய முடிகின்றது. காலநிலை மாற்றங்களை முன்கூட்டியே அறியும் வசதியையும் இணையம் தருவதால், பயணஞ் செய்யும் நாடுகளின் காலநிலைகளையும் அறிந்துவிடுகின்றோம்.

கல்வித் துறையில் கணனி உலகம் படைத்திருக்கும் புரட்சி அற்புதமானது. சிறுவயது மாணவர்கள் தொடக்கம், பல்கலைக்கழக மாணவர்கள் வரை, இணையம் மூலம் பல அரிய விடயங்களைப் பெற்றுப் பயனடைந்து வருகின்றார்கள். பாடசாலை வீட்டுப் பயிற்சிகளை இணையம் மூலம் பெற்று இணையம் மூலமே வகுப்பாசிரியருக்கு அனுப்பி வைக்குமளவிற்கு மாணவர்கள் வளர்ச்சி கண்டிருக்கின்றார்கள். தகவல் புரட்சியில் முன்னிற்கும் கணனி உலகம், இன்றைய காலகட்டத்தில் மாணவர்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதமாக இருந்து வருகின்றது.

சாதகங்களை வரிசையாகச் சொல்லச் சொல்ல அந்த வரிசை நீண்டுகொண்டே செல்கின்றது. கணனி உலகால் மனித சமுதாயத்திற்குச் சாதகங்கள் மாத்திரமல்ல பாதகங்களும் இருக்கவே செய்கின்றன என்று முன்பு சொல்லியிருந்தேன் அல்லவா? அப்படி என்னதான் சாதகங்கள் இருக்கின்றன என்று சற்றே அலசுவோம்.

குளத்தின் மேல் அழகிய தாமரை மலர்ந்தாலும், அடியில் சேறு இருப்பதுபோல, இணையத்தில் நல்ல விடயங்கள் தாராளமாக இருப்பதுபோல, குப்பைகளும் மலிந்து கிடக்கின்றன. மனமுதிர்ச்சி, அறிவு முதிர்ச்சி இல்லாத பல சிறுவர் சிறுமிகளைக் கவர்ந்து இழுத்து அவர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்லும் கைங்கரியத்தையும் இணையம் செய்து வருகின்றது.

இதைத் தடுக்கும் முகமாக இணைய வல்லுநர்கள் பல வழிமுறைகளை அறிமுகம் செய்திருப்பினும், இணையத்தால் இளம் பிராயத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறைந்தபாடாக இல்லை.இந்த இணைய வசதி வந்த பின்பு, பலர் கணனிக்குள் மணிக்கணக்காகத் தலையை நுழைத்துக் கொண்டிருக்கும் யுகம் பிறந்துள்ளது. கைத்தொலைபேசியோடு எப்படி மனம் ஒன்றித்துப் போகின்றார்களோ அதுபோல கணனியோடு தமது நேரத்தைக் கழிப்பவர்கள் ஆரோக்கியம் கெடுகின்றது என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

இப்படியானவர்கள் எதற்குமே கணனி தேவை என்ற அடிமை நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். கணனி இயக்கமின்றி சுயமாக எதையும் தன்னால் செய்ய முடியாது என்ற எண்ணமும் இவர்களுள் மேலோங்கி விடுகின்றது. இங்கேயுள்ளவர்கள் எந்தச் சிறிய கூட்டல் கழித்தலுக்கும் கணிப்பானைத் தேடுவது போல, கணனி இல்லையென்றால் தமது உலகம் இருண்டு விடும் என்ற மனப்போக்கில் வாழ்வது ஆபத்தானது.

கடன் அட்டை மூலம் பணம் செலுத்தும் வசதியை கணனி உலகம் தந்திருப்பது அற்புதமானது. ஆனால் இதற்காகப் பாவனையாளர்கள் ஒரு விலைகொடுக்க நேர்ந்திருக்கின்றது. தங்கள் அந்தரங்க விடயங்களை அதாவது வங்கி சம்பந்தமான தகவல்களை

இணையத்தில் பரிமாறிக் கொள்வதுண்டு.

இந்தத் தகவல்களைத் திருடுவதெற்கென்றே ஒரு கும்பல் இணைய உலா வருகின்றது. இவர்கள் இத் தகவல்களைத் திருடி, சம்பந்தப்படவரின் வங்கியிலுள்ள பணத்தைச் சுருட்டி விடுகின்றார்கள். அழகு இருக்கும் இடத்தில் ஆபத்தும் இருக்கும் என்பதுபோல நமக்கு அளவற்ற வசதிகளைத்தரும் இணையத்தில் இப்படியான ஆபத்துக்களும் காத்திருக்கின்றன.

முகநூல் போன்ற சமூகவலைத்தளங்களில் முகம் தெரியாதவர்களோடு தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுகின்றன. சில இளம் பெண்கள் எதிர்பாலாருடன் தொடர்பு கொண்டு அவர்களால் ஏமாற்றப்பட்ட சில நிகழ்வுகள் கடந்த காலங்களில் அரங்கேறி இருக்கின்றன.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் கணனி உலகம் மனித சமுதாயத்தை பல வழிகளிலும் மேப்படுத்தி வருவதே நிஜம். இன்று நோபல் பரிசாக ஒரு தொகைப் பணத்தை வருடா வருடம் வாரிவழங்கும் அல்பிரட் நோபல் டைனமைட்டைக் கண்டுபிடித்தமைக்காக கொலைகாரன் என்று திட்டப்பட்டவர். இன்று உயிரோடு இல்லாத சுவீடன் நாட்டவரை உலகம் இன்று ஒரு பெரிய மனிதராகப் போற்றுகின்றது. கணனி உலகின் ஒரு சில பிரதிகூலங்களுக்காக அதன் சேவையைக் குறைவாக நாம் மதிப்பிட முடியாது.

2000மாவது ஆண்டு பிறந்தபோது கணனிகள் ஸ்தம்பிக்கப் போகின்றன என்றொரு தகவல் கசிந்தது. அப்பொழுது நான் ஒரு ஐந்து நட்சத்திர ஹாட்டலில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். 1999ம் ஆண்டு டிசம்பர் 31ந் திகதி இரவிரவாக நாங்கள் அங்கு பணியாற்ற நேர்ந்தது. அங்கு தங்கியிருக்கும் விருந்தாளிகள் லிப்டில் வரும்போது நள்ளிரவ 12மணிக்கு லிப்ட் இடையில் நின்றுவிடுமோ, தண்ணீர் விநியோகம் தடைப்பட்டு விடுமோ என்றெல்லாம் பயந்தார்கள்.

பெரிய பெரிய பீப்பாய்களில் தண்ணீர் தாராளமாக நிரப்பி வைக்கும்படி நிர்வாகம் பணித்தது. எல்லோருமே நள்ளிரவு 12 பிறக்கும்வரை காத்திருந்தோம். ஆனால் எல்லோரது பயமும் புஸ்வாணமாகி விட்டது. எதுவும் நடக்கவில்லை. தப்பித்தோம் என நினைத்துக் கொண்டோம்.

இறுதியாக ஒரு கேள்வி. இணையத்தோடு சேர்ந்த கணனி இல்லாத உலகம் எப்படியிருக்கும்? கண்ணைக் கட்டி காட்டில் விட்டால் போல் இருக்குமா? ஏறத்தாழ எல்லாமே கணனிமயமாகி விட்ட இன்றைய யுகத்தில், அதன் சேவை இல்லாதவிடத்தில் எல்லாமே ஸ்தம்பித்து விடும் என்பதே யதார்த்தம்!

ஆனால் இனியொரு காலத்தில் கணனி உலகம் ஸ்தம்பித்தால், விளைவுகள் பாரதூரமானதாகவே இருக்கும்.



# காயங்கள் மாறும்!...(சிறுகதை)

திருமதி கீத்தா பரமானந்தன்
எழுத்தாளர்
ஜேர்மனி

**(மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா வாசகர் சிறுகதைப்போட்டியில் முதலாவது பரிசுபெற்றது)**

நர்மதா வீதியில் செல்லும் வேளைகளில் எப்போதுமேஅங்குநடப்பவற்றையும் தெரு ஓரங்களில் சடைத்து இருக்கும் மலர்களையும் ஆங்காங்கே ஓய்வாக அமர்ந்திருப்பவர்களையும் அழுது அடம் பண்ணும் குழந்தைகளையும் விரையும் மனிதக் கூட்டதையும் ரசித்து வேடிக்கை பார்த்து ஒவ்வொரு நிகழ்விற்கும் மனதில் ஒவ்வொரு படம் வரைந்து வேடிக்கை பண்ணியபடியே செல்வாள். அவளுடன் வருபவர்கள் விரைந்து இழுத்துச் செல்லும் அழவிற்கு மெதுவாக ரசித்து மகிழ்ந்தபடியே செல்வாள். ஆனால் இன்று வெறும் உணர்வுப் பொம்மையாக நடந்து செல்கிறாள். கால்கள் தூக்கி வைக்க முடியாதபடி கனத்தது. குளிரற்ற காலநிலை குறைந்த ஆடையில் இளையவர்களும் குழந்தைகளும் உலகின் அழகு இங்கதான் கொட்டிக்கிடக்கிறது என்பது போல் அழகழகாய் வலம்வந்தார்கள். சோடிகளாக இளையவர்கள் ' ஒருவரை ஒருவர் அணைத்தபடி உலகையே மறந்து நடைபோட்டார்கள் வயோதிபர்களோ உனக்கு நான் எனக்கு நீ என ஒருவருக்கொருவர் கைகளை இறுகப்பற்றியபடி சென்றார்கள். பூக்களில் இல்லாத வண்ணமில்லையென எல்லாவித மலர்களும்தெருக் கடைகளில் குவிந்து கிடந்தன.இவையெதுவும் நர்மதாவின் புலன்களில் ப தியவில்லை.

குரல் போனபோக்கில் மனம் போகவில்லை தனியே தன்னந்தனியே சென்றுகொண்டிருந்தாள். இந்தவார இறுதிநாட்கள் அவள் வாழ்வில் சாதனை ஏட்டில் பதியப்படப் போகும் நாட்கள்.அதற்காக அவளுடைய நண்பர் நண்பிகள் ஆடைத்தெரிவிலும் அதற்கேற்ற பாதணிகள் கைப்பைகள்தெரிவிலும் உறவுகளுடனோ நண்பர் நண்பிகளோடோ மிகச்சுறுசுறுப்பாக மகிழ்வாக உலாவருகிறார்கள். இவளிடமும் கேட்டார்கள் நர்மா நீ எங்கே தலை அலங்காரம்செய்யப் போகிறாய் எப்படி உடைஅணியப் போகிறாயென அவளிடமும் நிறைய கேள்வி கேட்டார்கள்.அவளுடன் கூடப்படிக்கும் வேற்றுமொழி நண்பிகளுக்கு அவளின் கூந்தல் மேலும் அவள்அணியும் அவளுடைய நாட்டு உடைகள் மீதும்தீராக்காதல் அவளது சில நண்பிகள் அவளது கலாசாரஆடைகளைப் போட்டு நிறையவே படங்கள் எடுப்பார்கள்.நர்மா எப்படி உனக்கு இப்படி அடர்த்தியான நீண்டகூந்தல். இதன் ரகசியம் என்ன? ஏன்று கேட்டு அவளது கூந்தலை முன்னும் பின்னும் வைத்து அழகுபார்ப்பார்கள்

இப்போதெல்லாம் நர்மதாவிற்குக் கூந்தல் அலங்காரத்திலோ ஆடைஅலங்காரத்திலோ மனம் லயிப்பதில்லை மாறாக வேதனையான ஒரு மன நிலையே அதனால் அவள் விசேசமான அணிகளையோ ஆடைகளையோ தெரிவு செய்யவில்லை.அவளை நன்கு புரிந்த தோளிகள் சிலர் .கவலைப்படாதே சந்தோசமாயிரு .இந்த நாள் வழ்வில் பொன்னான நாள் அதை சந்தோசமாக அநுபவிக்கவேண்டும்.பின் ஓர் நாளில் இதற்காய் வேதனைப்படுவாய்.போனது திரும்பவராது ' என்று கூறி தைரியமும் உற்சாகமும் ஊட்டி வந்தார்கள்-ஆனாலும் உணர்வுகள் யார் கூறியும் ஏற்படுவதில்லையே

..கிறீச்"என்ற காரின் பலத்தகோன் சத்தத்தில் திடுக்கிட்ட நர்மதா தான் வீதி விளக்கை கவனிக்காமல் தெருவை கடக்க முற்பட்டதை உணர்ந்து திடுக்கிட்டாள் ' அந்தச் சத்தத்தில் பாதையால் சென்ற ஓரிருவர் அவளை வித்தியாசமாகப் பார்த்தார்கள். அவளுக்கு வெட்கமாமப் போய்விட்டது. சிலர் தோளைக்குலுக்கினார்கள். ஆனால் யாரும் தெரிந்தவர்களில்லை அது மனதிற்கு சிறிது ஆறுதலாக இருந்தது. அவளை இங்கு யாருக்குத் தெரியப் போகிறது.அவள் கல்லூரி சம்பந்தப்பட்டவர்களைத் தவிர: இந்த ஊரில் அவளை அறிந்தவர்கள் யாரிருக்கப் போகிறார்கள். இங்கு அவள் படிப்பதற்காய் மட்டுமே வந்தாள். அவளை அறிந்தவர் ஒரு சிலரே. நர்மதா பல்கலைக்கழகத்தை தனது ஊரிலிருந்து வெகு தொலைவிலேயே தெரிவு செய்திருந்தாள். அது அவள் மனதிற்கு ஒருபுறம் அமைதியையும் மறு புறம் வேதனையையும் தந்தது. காரணம் ஏதிலியாய் தன்னந்தனியே இங்கு இருக்கிறாள்.அவளின் பழைய

வாழ்க்கையை அறிந்தவர் இங்கு யாருமிலர் அது ஒருவகை நிம்மதி. அவளின் ஊரிலிருந்த தமிழ் உறவுகள் பின் நாட்களில் அவளைக் கண்டால் முகத்தை திருப்பிக் கொண்டு தெரியாதவர்களைப் போல போவார்கள்.அவளுடன் நெருங்கிப் பழகி அன்ரி. அங்கிள் என்று அழைத்தவர்கள் கூட அப்படிச் செல்லும் போது நர்மதாவிற்கு உயிரையே விட்டு விடலாம் போல் இருக்கும்.அவளுடன் நெருங்கிப் பேசிப் பழகிய பிள்ளைகள் கூட விழுந்தடித்து அந்த இடத்தை விட்டு அகன்று விடுவார்கள். காரணம் அவர்களது பெற்றோர்கள் நர்மதாவுடன் பேச்சு வைக்க வேண்டாம் என்று கூறியிருப்பார்கள் என அவள் நினைத்துக்கொள்வாள். நர்மதாவும் நல்ல தமிழ்ப்பிள்ளையாக கலாசாரம் பண்பாடு. நடையுடை பாவனைகளுடன் தான் ஊரில்வளைய வந்தாள்.

அவள் படிப்பிலும்' வீட்டு வேலைகளைச் செய்வதிலும் வீட்டுக்கு வருபவர்களை உபசரித்து தமிழில் உரையாடுவதிலும் மிக்க நல்லபெண் என்று பெயர் எடுத்திருந்தாள்.உறவுப் பிள்ளைகள் எல்லாம் நர்மதா அக்கா என்று அவளைச் சுற்றிச் சுற்றி வருவார்கள். வீட்டுக்கு வருகிற உறவுகள் அவளைப் புகழாத நாளே கிடையாது எனலாம். அவர்களும் புகழ்ந்து தள்ளுவார்கள். பிள்ளைக்கு வீட்டு வேலைகளெல்லாம் பழக்கிப் போட்டீங்கள்.படிப்பிலயும் கெட்டிக்காரி எங்கட உடுப்புகள் சாப்பாடுகள் எல்லாத்தையும் பழக்கிப் போட்டீங்கள். சில தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்பேசுவதே வெட்கம் என்று நினைக்கிறார்கள். நீங்கள் நல்ல கெட்டிக்காரர் மகளை எங்கடை கலாசாரத்தோடை வளர்த்துப் போட்டீங்கள் என்னும் போது அம்மாவும் அப்பாவும் பெருமிதப் பட்டார்கள். உண்மையில் எங்களை பார்த்துப்பார்த்துத்தான் வளர்த்தார்கள் அப்பா சுரேசும் அம்மா ரதியும் சட்டம் திட்டம்போடாமல் எங்கள் வாழ்கை முறை பண்பாடு உறவுகள். நாட்டில் தாம் வாழ்ந்த முறை உறவுகளின் இணைவு கொண்டாட்டங்கள் போரினால் பட்ட துன்பங்கள். எங்கள் நினைவிலே வாழும் மூத்த உறவுகள் என எல்லாம் கேட்டுக்கேட்டு நாங்களும் மனதால் அவர்களோடு இணைந்தே வாழ்ந்தோம். அப்பா வேலைவேலையென நாள் முழுதும் வெளியே இருந்தாலும் அம்மா மிக்க அறிவுரைகளுடன் நாங்கள் தமிழர் என்பதை ஒரு நாளும் மறக்கக் கூடாது. எங்களுக்கென்று கலாசாரம் பண்பாடு இருக்கிறது என்பதையும் எங்கள் கொண்டாட்டங்களைவீட்டில் கொண்டாடுவதாலும் அம்மாவின் சுவையான சமையலாலும் எல்லாம் எங்களுக்குப் பிடித்துப் போய் விட்டது.

அம்மா எனக்கு அழகழகாய் பாவாடைதாவணிகள். சுடிதார்கள் என வாங்கித்தருவாள் இந்த அழகான கூந்தல் கூட அம்மாவின் விசேட கவனிப்பால் வந்ததே. எண்ணை காச்சிவைத்து வாரம் தவறாமல் தலை கழுவி அழகுபடுத்துவாள். பிறந்த நாட்கள் கொண்டாட்டங்கள் வரும் போது ஒருவருக்கொருவர் பரிசுகள் கொடுப்பதும் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவதும் வாழ்த்துக்கூறி வெளியே எங்காவது போய் வந்து அன்பாகநெருங்கி உறவாடி மகிழ்ந்தோம். எங்கள் குடும்பம் அழகான அன்பான குடும்பமாகவே மிளிர்ந்தது. அம்மாவேலைக்குப் போய் நாங்கள் பாடசாலையால் வரும் நேரத்திற்கு வந்துவிடுவார்:அப்பா இரண்டு வேலைகள் செய்து எங்கள் தேவைகளை நிறைவேற்றினார். எங்கள் குடும்பத்தில் குற்றங்குறை கிடையாது.

கேலியும் கிண்டலுமாக கலகலப்பாய் இருக்கும். நானும் தம்பியும் எங்கள் வேலைகளை நாங்களே கவனிக்கும் நிலைவந்தவுடன் அம்மா அதிக நேரம் வேலைபார்க்கத் தொடங்கினார் இதனால் வீடு வெறிச்சோடிப் போனதாய் உணர்ந்தோம்: ஆனாலும்தேவைகளும் கூடியதால் எல்லோரும் சேர்ந்து வீட்டு வேலைகளை சமையலை முதல் நாளே முடித்து அம்மாவிற்கு உதவியாய் செய்தோம். அதனாலும் விட்டுக் கொடுப்பும் புரிந்துணர்வும் நிறைந்திருந்தது. யார் கண் பட்டதோ வீட்டில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பிரச்சனைகள் தோன்றியது இப்படி ஆரம்பித்து. நுாங்கள் ஏதாவது பேசினாலும் அம்மா பொறுமையின்றிக் கத்தத் தொடங்கினாள். அப்பா தடுத்துப் பேச வீடே பிரளயமாகும்.இந்த நிலையால் அதிகமாக நானும் தம்பியும் எங்கள் அறைகளுக்குள் முடங்கத் தொடங்கினோம் வீட்டில் ஒருவருக்கொருவர் பேசுவது பார்ப்பது குறைந்தது.இரவு நேரங்களில் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் வாக்குவாதங்கள் பலத்து அடுத்த வீட்டுக்காரர் கதவைத்தட்டி நிறுத்தும் அழவிற்கு மோசமாகியது. ஒருநாள் நிலமை மோசமாகியதால்

வெளியே வந்த நாங்கள் பெற்றோரின் நிலையைப் பார்த்து அதிர்ந்து விட்டோம். இருவருமே நிற்கமுடியாமல் நிறை போதையில் தள்ளாடியபடி பலத்த குரலில் கத்தினார்கள். தம்பியும் நானுமாக இருவரையும் கட்டிலில் அமர்த்தி ஒருவாறு தாங்கப்பண்ணினோம். அப்பா மது குடிப்பதை அறிந்துணர்ந்தோம் அதுவும் பார்ட்டிகளில் கலந்துகொண்டு வீட்டுக்கு வந்தவுடன் உடனடியாகவே தூங்கிவிடுவார். ஆனால் அம்மாவை இந்த நிலையில் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அதிர்ந்துவிட்டோம் வேலைசெய்யுமிடத்தில் பழகினாளா? அப்பாதான் பழக்கினாரா? நிலமை எல்லை மீறிவிட்டது. பார்ட்டிகளிலிருந்து அம்மாவை தூக்கிவரவேண்டிய நிலமைகளும் எற்பட்டது.இதன்பின் எங்களுக்கும் அம்மாவுக்குமிடையில் ஓர் திரைவிழுந்துவிட்டது .பகல் வேளைகளில் அம்மா முன் போலிருந்தாலும் எங்களால் மனம்விட்டுப் பேச முடியவில்லை. இதை உணர்ந்து அம்மாவும் வேதனைப்பட்டாள் ஒரு விடுமுறை நாளில் போதை தலைக்கேறி அம்மா போட்ட கூச்சலில் அயலவர் பொலிசை அழைத்து விட்டார்கள். எனக்கும்தம்பிக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை இரு இளவயதுப் பிள்ளைகளை வைத்துக்கொண்டு அவர்கள் வீட்டில் ஒழுங்காயிருக்க இவர்கள் இப்படி நடப்பது முறையா?

தம்பியின் பாடசாலையில் இருந்து கடிதம் வந்தது. பேற்றோரை பேச வரும்படி. நானும் அம்மாவும் சென்றோம். தம்பிமுன் போல வகுப்பில் கவனமில்லை என்றும் பாடங்களில் குறைவான மதிப்பெண்களே எடுப்பதாகவும் இது தொடர்ந்து நடந்தால் இதே வகுப்பில் இருந்து படிக்க வேண்டி வருமென்றும் ஆசிரியர் கூறினார். நாங்கள் கவனமெடுப்பதாகக் கூறி வந்தோம். எனக்கு அவன் நிலை புரிந்தது. என் நிலையும் அப்படித்தானே இருக்கிறது பகலில் ஒழுங்காயிருக்கும் அம்மா இரவாகியதும் மாறிவிடுவாள். இரண்டாவது முறையாகவும் அடுத்த வீட்டார் பொலீசை வரவழைத்து விட்டார்கள். பொலீசார் எங்களையும் விசாரித்தார்கள். எங்கள் நிலையை அவர்கள் புரிந்துகொண்டார்கள். அயலவர்களைப் பார்க்க எங்களுக்கு அவமானமாக இருந்தது. நானும் தம்பியும் கலந்து பேசினோம். அம்மா அப்பாவுடனும் பேசினோம் பேற்றோர்கள் புரிந்து கொள்ளவில்லை. நான் இப்போது இறுதியாண்டிலும் தம்பி பத்தாம் வகுப்பு எங்கள் கல்வியை பாதுகாக்க வேண்டியவர்களாலேயே பாதிக்கப்படுவதை உணர்ந்து நாங்கள் இளையோர் பாதுகாப்பு விடுதிக்கு மாறினோம். முதலில் எங்கள் கல்வியைமுடித்து ஒரு தகுதியை பெறுவோம். பின்பு பெற்றாரை மாற்ற முயல்வோம். என முடிவுசெய்து அங்கு சரணடைந்தோம். இருவரும் மனமும் உடைந்தன. மானமிழந்ததாய் உணர்ந்தாலும் வேறுவழி தெரியவில்லை. தம்பியும் இப்போது பல்கலைக்கழகம் போய்விட்டான். அம்மாவும் அப்பாவும் அறிந்தவர் தெரிந்தவர்களிடமெல்லாம் எப்படி வளர்த்தோம் இப்ப கைவிட்டுவிட்டார்களே "பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு" என்று நிரூபித்தவிட்டார்கள் பிள்ளைகளை ஒருநாளும் நம்பக் கூடாது எப்பவும் எங்கடை கைகள்தான் எங்களுக்குத்துணை நன்றி மறந்து தாக்கி எறிந்துவிட்டார்கள் என்று தவறு முழுவதையும் எங்கள் மேலேயே போட்டு விட்டார்கள். சமுதாயமும் எங்களை பெற்றோருக்கு அடங்காதவர்களாய் ஒதுக்கிவிட்டது. நாங்களும் அதை ஏற்று வாழாதிருந்துவிட்டோம். எங்கள் பெற்றோரை நாங்களே காட்டிக் கொடுப்பதா?

எங்களைப் பெற்றவர்கள் ஒரு நிலையில் தவறு செய்தாலும். எங்களை சரியான முறையிலேயே வளர்த்தார்கள். அவர்கள் விரும்பியது எங்களின் உயர்வான வாழ்வையே! நாம் நல்ல நிலைக்கு வந்தால் சமூகம் எங்களைப் போற்றும். என்று நம் கடமையைச் செய்தோம். பலன் நான் மருத்துவப்படிப்பை முடித்துவிட்டேன் .தம்பியும் பல்கலைக்கழகம் புகுந்துவிட்டான். அம்மா அப்பா சொன்னது போல் தவமாய் எண்ணி நோக்கத்தை நிறைவேற்றி விட்டோம். இதோ இந்த வார இறுதியில் பட்டமளிப்பு விழாவும் முடிந்தவிடும். அந்த விழாவிற்கு ஆடைகளை வாங்கவே இப்போது செல்கிறேன். தம்பியும்தொலைவில் இருந்து படிப்பதால் அவனாலும் வரமுடியவில்லை. என் மகிழ்வைப் பரிமாற உறவுகளற்ற தனிமை இருந்தும் வெற்றிப்பூரிப்புடன் மீண்டும் பெற்றவரை அணுகி கொஞ்சங்கொஞ்சமாய் அவர்களை மாற்ற முயல்வேன். காலம் எல்லாக்காயங்களையும் மாற்றிவிடும். மீண்டும் எங்கள் குடும்பத்தில் ஒளி வீசும் என எண்ணியபடி நர்மதா ஓர் கடைக்குள் புகுந்தாள்.

# அனா பிராங்.. நாட்குறிப்பு!...

பொன்.புத்திசிகாமணி
எழுத்தாளர்
ஜேர்மனி



சென்ற கோடைவிடுமுறையில், அப்பா இந்த லீவுக்கு நாங்கள் கொலன்டுக்குப்போவோம் என்றாள் என்மகள். ஏனம்மா எத்தனை தடவைகள் கொலண்டிற்குப் போயிருப்பம்,இம்முறை வேறு எங்காவது நாட்டிற்குப் போய்வருவோம் என்றேன் நான். இல்லையப்பா கொலன்டில் பார்ப்பதற்கு எனக்கு முக்கிய இடம் ஒன்றிருக்கு என்றாள் மகள்.அப்படியென்ன முக்கிய இடம் எவ்வளவுகாலம் போய்வந்திருக்கிறாய் அப்போதெல்லாம் இதைப்பற்றியேன் யோசிக்கவில்லை. அந்தவயதில்,எனக்கு அதுதோன்றவில்லை இப்போது அதைப்பார்க்கவேண்டுமென்று ஆசையாக இருக்குது.அது என்ன எனக்குத்தெரியாதது முக்கியமானது என்று திரும்பவும் அவளிடம் இந்தக்கேள்வியைக்கேட்டேன. அநேகமாக உங்களுக்குத்தெரிந்திருக்கும்.நான் சின்னவயதில் படித்தபோதே இதைப்பற்றிப்படித்திருக்கிறேன். அண்மையிலும் இணையத்தில் அவளின் சரித்திரத்தைப் படித்தேன்.அதன்பிறகுதான் ஆவல் அதிகமாயிற்றுது. அந்த மியூசியம் கொலன்ட் அம்ஸ்ரடாமில இருக்கு நாளாந்தம் எவ்வளவு சனம் போய்ப் பார்க்கிறது தெரியுமா?

யாரந்த அவள் விபரமாகச்சொல்லன்.அனே வ்றாங் ஒரு யூதச் சிறுமி இரண்டாவது உலகச் சண்டையில யூதர்கள், யேர்மன் நாசிப்படைகளால் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பது உங்களுக்குத்தெரியுந்தானே எத்தனை மில்லியன்.அதில் ஒரு குடும்பம் ஒட்டோ வ்றாங் இவர்கள் யேர்மனியிலுள்ள வ்றாங்வோட் மையின்சில் வாழ்ந்து வந்தார்கள்.அவர்களுக்கு இரண்டு பெண்பிள்ளைகள் இரண்டாவது மகளின் பெயர்தான் அனே இவள் பிறந்த கொஞ்சக்காலத்தில் கொலண்டில் உள்ள அம்ஸ்ரடாமில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தார்கள்.தந்தை ஒட்டோ (யாம்) பழப்பாணி செய்யிற தொழில் செய்து வந்தார்.இவருடன்சேர்ந்து நாலைந்துபேர் உதவியாளாராக வேலைசெய்தார்கள்.

இந்தவேளையில்தான் இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமாகியது நாசிப்படைகளின் கொடுமைகள் வெளிநாட்டவர்களுக்கு எதிராக ஆரம்பமானது. கிட்லரின் நாசிப்படைகள் ஐரோப்பாவின் பல நாடுகளை தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தார்கள்.யேர்மனியில்,கடின உழைப்பால் முன்னேறி செல்வாக்கோடு வாழ்ந்தவர்கள் யூதர்கள்.கிட்லரின் பார்வை யூதரை அழிப்பதிலே குறியாக இருந்தது. காணுகின்ற இடமெல்லாம் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.வெட்டியும் கொத்தியும் மரங்களில் கட்டித்தூக்கியும்.தலையில்லாத முண்டங்களாக தெருக்களில் ஆங்காங்கே பிணக்குவியல்கள். தொகையாகக் கூட்டிச்சென்று அடைக்கப்பட்ட கட்டிடங்களுக்குள் விசவாயுவைச்செலுத்தி

கொலைசெய்தார்கள். அவர்களைக்கொண்டே கிடங்குகளை வெட்டி சுட்டு வீழ்த்தினார்கள்.மறைந்து வாழ்வதற்கு இடமில்லாமல் மடிந்தவர்களே அதிகம். கொலண்டை நாசிப்படைகள் கைப்பற்றியதும்.
அங்கேயும் யூதர்களைத்தேடி கொலை செய்தார்கள். அந்த வேளையில்தான் அனே குடும்பம் அந்த வீட்டிலேயே மறைந்து வாழ்ந்தது.முன்பக்கம் தொழிற்சாலையும்,பின்பக்கம் அவர்கள் மறைந்தும் நாட்களைப் பீதியுடன் நகர்த்தினார்கள்

அனே சிறுமியாக இருந்தபோதும் அந்த அனுபவக்குறிப்புகளை ஒவ்வொருநாளும் எழுதிவந்தாள்.இறுதிநேரத்தில் அவர்கள் சாப்பாட்டிற்கே மிகவும் கஸ்ரப்பட்டார்கள்.ஆனாலும் அவர்கள் நாசிப்படைகளால் பிடிக்கப்பட்டு விசவாயு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.அனேயின் தாயார் கொலண்டிலேயே மடிந்திருக்வேண்டும்.என்று சிலகுறிப்புகள் கூறுகின்றன.

அனேயும் அவள் சகோதரியும் பேர்க்கன் நகரில் விசவாயு முகாமில் படுகொலை செய்யப்பட்டார்கள் இறக்கும்போது அனாவுக்கு பதினைந்து வயது.அங்கு கொல்லப்பட்டவர்களின் பட்டியலில் அனேயினது பெயரும்,அவளது சகோதரியினது பெயரும் இருந்தது.பத்திரிகையில் இந்தச்செய்தி அப்போது வெளிவந்திருந்தது.

தகப்பன் ஒட்டோ எப்படியோ தப்பி சுவிசில் வாழ்ந்தார் போர் முடிவுக்கு வந்தபின்பு தாங்கள் வாழ்ந்த வீட்டைப்பார்க்க வந்தபோதுதான்.மகள் எழுதிவைத்திருந்த நாட்குறிப்பைக்கண்டு இதயம் விம்மி வெடிக்க வாசித்து முடித்தார்.இது உலகம் முழுவதும் அறியவேண்டும் என்பதற்காக பலமொழிகளில் மொழி பெயர்ப்புச்செய்தார்.

அவளின் நாட்குறிப்பு இன்று எழுபது மொழிகளில் மொழிபெயர்ப்புச்செய்யப்பட்டிருக்கிறது.அவர்கள் வாழ்ந்த வீடு அருங்காட்சியகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. எந்தப்புனர்த்தானமும் செய்யப்படாமல் அப்படியே பாதுகாத்து வருகிறார்கள்.வருடத்தில் ஒரு மில்லியன் மக்கள் இதனைப்பார்வையிடுகிறார்கள்.இதன்மூலம் பெறப்படும் பணம் மாணவர்களின் கல்விக்கு உதவுகின்றது. மொழிமாற்றம் செய்யப்பட்ட நூல்கள் விற்பனைக்காக அங்கே காத்திருக்கின்றன.

இவளின் வாழ்க்கை வரலாறு கொலிவூட்டில் படமாக எடுக்கப்பட்டு பல ஒஸ்கார் விருதுகளை வென்றிருக்கிறது.

இப்ப இதைப்பார்க்கவேண்டுமென்ற ஆசை உங்களுக்கும் வருகிறது இல்லையாப்பா என்று என்னைப்பார்த்து என்மகள் கேட்டாள்.அவள் சொன்ன கதையிலே நான் மூழ்கியிருந்தேன்.ஒருநாள் மடிந்தோம் என்பதுடன் எல்லாம் முடிந்துவிடும்.மடியப்போகிறோம் என்கிற பய பீதியுடன்,மண்ணுக்குள்ளும் மரங்களுக்குள்ளும், ஒளித்து இந்த உயிரைக்காப்பாற்ற எத்தனையோ பிராயத்தனங்கள் பட்டும் இல்லாத கொடுமைகளை அனுபவித்துச்செத்த என் மண்ணின் அனே, க்கள் எத்தனைபேர்.என்கற்பனையில் ஒப்பீடுசெய்த போது கண்ணீர்தான் வழிந்தது. இவள் எழுதுவதற்கேனும் காலம் இடவெளியை வழங்கியது. எம்மக்களுக்கு நாட்குறிப்பே இல்லாமல்போனது. கண்ணைத் துடைத்துக் கொண்டேன்.சரியம்மா நாளைக்கே புறப்படுவோம்

நானும் விடுமுறையில் நின்றதனால் பிரச்சனையில்லாமல் போனது.மகள் சொன்னவுடனே வெளிக்கிட்டிடுவார் மனைவி காலத்தைக்கருதி புறு புறுத்தாள்.மறுநாள் மதியம் நாங்கள் கொலண்டை நோக்கிப்பயணமானோம். அம்ஸ்ரடாமுக்குப்பக்கத்தில் எனது உறவினர் இருந்தபடியால் அங்கே போய் தங்கிவிட்டு மறுநாள் மதியம் புறப்பட்டோம்.அம்ஸ்ரடாம் மக்கள் செறிந்து வாழும் நகரம்.கடைவீதியென்றால் சொல்லிவேலையில்லை.

உலகத்தின் சுற்றுலா பயணிகள் பெருமளவில் குவியும் இடம்.இடதுபக்கம்மெழுகு மியூசியம் இதுவும் இங்கே புகழ்பெற்றது.மத்தியில் ஒரு அரசமாளிகை இருக்கிறது அதன்பின்பக்கம் வலதுபக்கத்தால் செல்லும் பாதையால் நடந்துபோக வரும், கத்தோலிக்க தேவாலயம்.

அதற்குப்பக்கத்திலேயே அந்த அருங்காட்சியகம் இருக்கின்றது. காரை ஒருபாக்கில் நிறுத்திவிட்டு கால் நடையாகவே சென்றோம்.பாம்பு நெளிந்த மாதிரி சனம் வரிசையாக,சிலபேர் சாப்பாடு கோப்பியென்று கொண்டு

வந்து காத்திருந்தார்கள்.ஒவ்வொரு மூலையிலும் .இதிலிருந்து அருங்காட்சியகத்திற்குச்செல்ல எவ்வளவு நேரம் செல்லும் என்பதைப் பதிவு செய்திருந்தார்கள்.கால் உழைவுதாங்காமல் பலர் நிலத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.ஏற்கனவே நடந்து கடைவீதிகளைக்கணக்கெடுத்ததால் கால்கள் அதிகநேரம் நிற்பதை விரும்பாமல் முரண்டு பிடித்தது.நேரமும் போய்க்கொண்டிருந்ததால் மனம் அலுத்துக்கொண்டது.இன்று போய் நாளை விடியவருவோம் என்ற ஒருமித்த குரலோடு வீட்டிற்கு நடையைக்கட்டினோம்.எவ்வளவு சனமப்பா எத்தனை தடவை வந்திருப்போம் இதுதெரியாமல் போச்சே

இல்லாவிட்டால் எப்பவோ பார்த்து முடித்திருப்போம். அப்ப பார்த்திருந்தால் பிள்ளைகளும் பெரிசா ரசித்திருக்காதுகள்.இப்ப பார்க்கவேண்டிய வயது. என்மனைவி சொன்னது நியாயமாகவே பட்டது.அப்ப நாளைக்கு நீங்களும் வாறியளோ?கொஞ்சநேரம் பதிலேதும் பேசாமல் ஒரு சிரிப்புச்சிரித்தாள் அந்தசிரிப்பின் அர்த்தம் எனக்குத்தான் புரிந்தது.அப்ப நீங்க நாளைக்கு வரேல்லை.நீங்கள் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போயிட்டு வாங்கப்பா என்றாள். கால்வேறை நடக்கேலாதாம்.

மறுநாள் விடிய நானும் மகளும்,மகனுமாய் புறப்பட்டோம். விடியவெள்ளென அவ்வளவு சனமிருக்காது என்றுதான் நினைத்தோம்.ஆனால் நிலமை அப்படி இருக்கவில்லை. நேற்றுப்பார்த்தது போல்தான் சாப்பாடு கோப்பி சகிதம் பிரசன்னமாகியிருந்தார்கள். மகன் கார்த் தரிப்பைத்தேடி அலைய நாங்கள் இருவரும் கியூவில் நின்றோம்.இரண்டு மணித்தியாலங்களுக்குமேல் சென்றிருக்கும் அந்தவாசலை அடைய. கார்தரிப்பைத்தேடி மகன் அலைந்து கடைசியில் எங்களுடன் உள்ளுக்குள் வராமலே போனான்.நானும் மகளும்தான் பார்த்தோம்.

அவர்கள் அங்கு ஒளித்திருந்த தடையங்கள் அப்படியே இருந்தன.அவர்கள் மறைந்திருந்த அலுமாரி.பாவித்த பொருட்கள்.அவள் கைப்பட எழுதிய நாட்குறிப்பு அத்தனையும் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள். அவர்களது குடும்பப் படங்கள் தகப்பன் வ்றாங்கின் ஒளிப்படம் அவரது வாக்கு மூலமாக திரையில் காண்பிக்கின்றார்கள்.அங்கு பயங்கர அமைதி இழவுவீட்டில் அமைதிகாப்பதற்குரிய மரியாதையோடு பார்ப்பவர்கள் நடந்து கொள்கிறார்கள்.இன்று எண்பது வயதை நெருங்கும் அன்னாவுக்கு இன்றுதான் இறந்ததுபோன்ற சோகம் அங்கே நிரந்தரமாகக் குடிகொண்டிருந்தது.வெளியேறும் வாசலில் பெரியதொரு புத்தக விற்பனை நிலையம் எழுபது மொழிகளில் எழுதப்பட்டிருந்த அவளின் நாட்குறிப்புகள். விற்பனைக்காக அடுக்கி வைத்திருந்தார்கள்.

உலகத்தில் பலபாகங்களில் இருந்து வந்தவர்கள் வாங்கிக்கொண்டு போனார்கள். நானும் எமது தமிழ்மொழியில் யாராவது எழுதியிருக்கிறார்களா?என்பதைத்தேடி அலுத்து விட்டேன்.விசாரித்தபோது இல்லையென்ற பதில்தான் கிடைத்தது.

இரண்டாம் உலகயுத்தத்தில் எத்தனை உயிர் இழப்புகளை யூத இனம் சந்தித்தது. எத்தனைகொடுமைகளை அவர்கள் சாகும்வரை அனுபவித்தார்கள்.எல்லோருக்கும் வரலாறு உண்டா?என்றகேள்வியுண்டு.ஒருநாள் நினைவுதினம் துக்கம் அனுஸ்டிப்பு முடிந்தது மடிந்தவர் வாழ்க்கை. அந்த சின்னவயதிலிருந்து தனது வாழ்க்கையைப் பதிவு செய்த அனே காலம் உள்ளவரை வாழ்வாள். அவளுடன் சேர்ந்து அவளுடன் வாழ்ந்தவர்களும் சேருகிறார்கள். அண்மையில் மண் சஞ்சிகை ஆசிரியர் திருவ.சிவராசா அவர்களும்,நானும் முன்சனுக்குப்போனபோதுவிசவாயு செலுத்தி யூதர்கள் படுகொலை செய்யப்பட்ட நினைவு இடத்தைப்பார்த்தோம். எங்கள் குருதியே உறைவதுபோல் உணர்ந்தோம். ஆனால் அனைத்தையும் மறந்தவர்களாக யூதர்கள் இன்று......

# வாழ்த்தி வணங்குகின்றோம்..

அம்பலவன் புவனேந்திரன்
கவிஞர்
ஜேர்மனி

எழுத்தாகி மொழியாகி இலக்கியமும் இலக்கணமுமாகி
எம்தாய்மொழி விரிந்துபரந்து இனிய தமிழ்மொழியாகி
செழித்தோங்கிப் பரந்துவிரிந்து செம்மொழியானதுபோல்
சீரோடு வளர்ந்து சிறப்புகள்கொண்ட மண்மலரே-நீயின்று
கொழுத்த இருபத்தைந்தகவையை கொண்டாடும் உனை
குளிர்ந்த வாழ்த்துக்களைக் கொட்டி வணங்குகிறோம்..!

பழுத்ததமிழ் ஒளவைப்பாட்டியின் பற்பல பாடல்வரிகளையும்
பாலர்களுக்கேற்ற பண்பான வினாக்களோடு விடைகளையும்
ஒழுக்கத்தோடு வாழ்வியலையும் உணர்த்துகின்ற வள்ளுவரின்
ஒவ்வொரு குறளையும் விளக்க உரைகளுடன் தருவதுடன்
வெழுத்த கருத்துக்களால் வீரியமாய் வேரூன்றிவிட்டதனால்-நாம்
வியப்புக்கள்மேலிட உனை விரும்பி நாமின்று வாழ்த்துகிறோம்..!

உழுத்துப்போன அரசியலை ஒதுக்கியே நீயும் நடக்கின்றாய்
உதவாத விடயங்களை உறுதியாகவே நீ எதிர்த்துவருகிறாய்
தழும்பிடாத நிறைகுடமாக தரணியிலே நீ நிலைத்துவிட்டாய்
தாய்மொழியின் வளர்ச்சிக்கு தடையுடைத்து மிளிர்ந்தாய்-வெந்து
புழுங்குகின்ற இதயங்களில் வண்ணப்பூக்களாய் நீ மலர்ந்தாய்
புவியினில் மனிதம் நிலைக்க போற்றிநாமுனை வாழ்த்துகிறோம்..!
செழுமையான சேவையாற்றி சிகரமாய் உயர்ந்த உன்னை-மிகச்
சிறப்பான வாழ்த்துக்களைக்கூறி சிரம்தாழ்த்தி வணங்குகின்றோம்..!

மழுங்கிவிடாத ஞானத்துடன் மக்களுக்காய் நீயுழைக்கின்றாய்
மனிதநேயப்பணிகள் பலசெய்து புவி மாற்றத்தை நாடுகின்றாய்
ஒழுங்கான கடமையிலென்றும் உன்னதமாய் அடிவைத்தாய்
ஊக்கத்துடன் கருத்துக்களை உரிமையோடு உரைத்தாய்-புவியை
உழுதுகின்ற உழவனாக பல உள்ளங்களைப் பண்படுத்தி
உயர்ந்திட்ட உன்னையெம் உள்ளங்கனிந்து வாழ்த்துகிறோம்..!

பழுதில்லாப் பணிகள்பலசெய்து பகலவனாய் உலவுகின்றாய்
பாரினில் மனிதம் தளைக்கப் பாடுபட்டு நீயும் உழைக்கின்றாய்
விழுதாக இறங்கியே மண்ணில் வேர்களையும் காக்கின்றாய்
வியத்தகு பணிகளையாற்றி வியாபித்து பெருவிருச்சமானாய்
செழுமையான சேவையாற்றி சிகரமாய் உயர்ந்த உன்னை-மிகச்
சிறப்பான வாழ்த்துக்களைக்கூறி சிரம்தாழ்த்தி வணங்குகின்றோம்..!



# மண் மலரை மனமார வாழ்த்துகிறேன்

கவிமாமணி தர்மலிங்கம் குகதாஸ்
முன்ஸ்ரர் - ஜேர்மனி

இச்சஞ்சிகை உண்மையில் வெளியீடு செய்வது என்பது மிகவும் சுலபமான விடயம் அல்ல. இருந்தாலும் பல கஸ்ரங்களுக்கு மத்தியில் அம்மண் சஞ்சிகை வாசனை பூர்த்த மலராக வருகின்றது. அருமையான ஒவ்வொருபக்கமும் என்னை மிகவும் கவர்கின்றது. அத்தோடு ஈழத்தில் வாழ்கின்ற பலருக்கும் பெரிய உதவிகள் புரிகின்ற ஒரு உன்னத மலராக வருகின்றது. ஆகவே இம்மலர் 25 ஆவது அகவை மட்டுமல்ல பொன்விழா, வைரவிழா,நூற்றண்டுவிழா, காணவேண்டும் என்று வாழ்த்தி எல்லாம் வல்ல அம்பாளின் அருளாசியோடு மண் சஞ்சிகையும் , ஆசிரியரையும் பல நூறு ஆண்டுகள் வாழ மனதார வாயார வாழ்த்துகின்றேன். வாழியவே !வாழியவே!..

மண் மலராக மலரவேண்டும்.
மாணிக்கக்கல் போல் மிளிரவேண்டும்.
மதிப்புமிக்க மலராக உலாவரவேண்டும்.
மன்மதன், ரதி போல் அழகாக நீ வர
மாய இருள் நீங்கி வலம் வர
மனதார வாழ்த்துகின்றேன் வாழியவே.

அருமையான மண் மலரே உன்னில்
அது தான் எனக்கு உன்னில் ஒரு சின்னக்காதல்
அடிமையாகிவிட்டேன் உன் ஒவ்வொரு பக்கமதில்
அருமை அண்ணன் சிவராஜா உன் ஆசானாக
அன்போடு வாழ்த்துகின்றேன் வாழியவே.

இலங்கைதனில் பலமலர்கள் வந்தாலும்
இந்நாட்டில் உனக்கு தனிப்பெருமை
இனிமையான செய்திகள் தான் அதற்குக் காரணமா?
இறைவன் அருளோடு நீ வலம் வரவேண்டும்.
இல்லை என்போருக்கு அள்ளிக்கொடுக்கும் மலரே
இனிமேலும் நீ அமுதசுரபியாக இருக்கவேண்டும்.
இன்றே வாழ்த்துகின்றேன் வாழியவே.



# விண்ணெட்டும் மண்ணின் மகிமைக்கு மனமுவந்தளிக்கும் வாழ்த்துமழை!...

திருமதி.கௌசி சிவபாலன் B.A.
இணையத்தள ஆசிரியர்
ஜேர்மனி



உயரப்பறக்கும் காற்றாடிக்கு உயர்வுச்சொல் தேவையா?
உயர்ந்து நிற்கும் ஆலமரத்தை மறைக்கத்தான் முடியுமா?
உரங்கொண்ட மண்ணை உதறித்தள்ள முடியுமா? - பலர்
உள்ளம் வாழ் மண்ணை மதிக்கத்தான் கூசுமா?
வீசும் காற்றும் வீழும் சுடரும் ஓய்வதில்லை
எழுதிய கையும் எழுத்தின் வீச்சும் அடங்குவதில்லை
மண்ணின் பணியும் மகத்தான பண்பும் குறைவதில்லை
மனங்கொண்ட பணியும் மனிதாபிமானமும் மறுப்பதில்லை
சஞ்சிகை பெயரிலோர் சமூகப்பணி நடக்கிறது
நெஞ்சுரமாய் நேர்மை வழி தொடர்கிறது
இஞ்சியளவும் இடையூறின்றி இனியவாழ்வு அளிக்கிறது
தஞ்சம் கொண்டோரை தளராது காக்கிறது
மண்ணின் பணி மகிழ்வுடனே தொடரட்டும்
மலரும் பொழுதுகள் மண்ணுக்காய் விடியட்டும்
மண்ணைக் காக்கும் சிவராஜா அண்ணன் புகழ்
மனங்கொண்ட திடத்துடனே பாரெங்கும் பரவட்டும்

செய்கைத் திறமும், செய்தொழிலில் நேர்மையும், அடங்காத ஆர்வமும், குறையாத அறிவுப் பசியும், அன்பின் தொடர்பும், நெஞ்சம் நிறைந்த மனிதாபிமானமும், சோம்பலில்லாத் தொடர் பணியும், கள்ளங்கபடமில்லாப் பண்பும், வாழும்போது பிறருக்காய் வாழும் மகத்தான பண்பும் கொண்ட வைரமுத்து சிவராஜா அவர்கள் தொடர்ந்து நடத்துகின்ற மண் சஞ்சிகையின் வெள்ளிவிழாவிலே அவரையும் அவர் நடத்தும் மண் சஞ்சிகையையும் மனமார வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றேன்.



# நிறைவாக நீ வாழியவே!...

திருமதி கெங்கா ஸ்ரான்லி
எழுத்தாளர்
ஜேர்மனி.

புலரும் பொழுதில் தோன்றி ,மறையும் பொழுதில் மறையும்,
மன்றங்கள, பத்திரிகை, சஞ்சிகை ,நடுவே மறையாது எதிர்த்து,
நின்று வெற்றிவாகை சூடி அகவை 25 காணும்,
மண் சஞ்சிகையே நீ வாழி ! தமிழ் மக்கள் மனம் கவர்ந்து,
தமிழில் பல பொருள் புனைந்து, தமிழ் ஈழம் வரை சென்று,
தக்க ஆக்கம் பல தரும் மண் சஞ்சிகையே நீ வாழி!

அழகு மண்ணிலே தோன்றிய மூத்தகுடியாம் முதல்குடி,
முதல் பேசிய தமிழ்மொழி, மண் சஞ்சிகையாக தமிழ்,
ஆரம்பம் கண்டது 1990 ல்,அது வளர்ந்து இன்று
அகவை 25 கண்டிருக்கும், மண் சஞ்சிகையே நீ வாழி!

நல்ல விதைகள் விதைத்தால், நல்ல மரங்கள் வளரும்,
அது போல இலக்கியபடைப்புகள், இளம் கவிஞர், பெரும் கவிஞர்,
எழுத்தாளர், படைப்பாளர் பலரை, உருவாக்கிய மண்ணே நீ வாழி!
சிறுவர் ஆக்கம், சிறுவர் வட்டம், குறளும் பொருளும்,
இலக்கிய சாரல், குறுக்கெழுத்துப்போட்டி, சிறுகதை, கட்டுரை
கோர்த்து நிற்பது மண் சஞ்சிகையிலே

சமூகப்பணி ஆதரவற்றோர் உதவிநிதி,
உள்ளன்புடன் உதவிடும் மண்சஞ்சிகையே நீ வாழி!
வெள்ளிவிழா மட்டுமல்ல, பொன் விழா, வைரவிழா,
பூவுலகில் கண்டு நீயும் பெருமையுடன் மண்சஞ்சிகையே நீ வாழி!

இரு மாதம் ஒரு இதழ், இதழில் எழுதும் ஒருத்தி நான்
எழுதி மகிழ களம் தந்தாய், மண்சஞ்சிகையே நீ வாழி!
நாம் வாழ்வோம், நாம் வாழ மண் தமிழ் வாழும்.
நீண்ட ஆயுளுடன் மண்சஞ்சிகையே ,நிறைவாக நீ வாழி!



# கனிந்து வாழ்த்துகிறேன்!..

திருமதி புனிதமலர் இராஜேஸ்வரன்
எழுத்தாளர் - ஜேர்மனி

**1990ல் வெளிவந்த தோழமைச் சஞ்சிகையான சிறுவர் அமுதம்" சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர்**

அன்றும் என்றும்நிலைக்கும் மண்ணே
இன்பத்தமிழில் குளித்த பெண்ணே
தாயக மக்களின் அவலம் கண்டு
தாங்காத் துயர நிலையைக்கண்டு
தாய்போல் அணைத்த மண்
எனும் பெண்ணே உந்தன் பெருமையைப்
புகழ்வது எப்படி!...
மண்ணின் மக்களின் அவலம்
துடைத்தமணிமேகலையின் வடிவம்
கொண்டாய்
அறிவுரை சிறுகதை கவிதை என்றே
அட்சய பாத்திரம் ஏந்தி நின்றாய்
உலகச் செய்திகள் பலவும் தந்தாய்
உந்தன் சேவையைப் புகழ்வது எப்படி!...

என்றும் உந்தன் இளமைகண்டு
எல்லைகாண மகிழ்ச்சி கொண்டேன்
அறிவுச்சுடரே அன்புடை மகளே
பாசம் மிகுந்த பலகதை சொன்னாய்
இருபத்தைந்து ஆண்டுகள் சேவை
கண்டு இன்புற்று வியந்து திகைத்தேன்
நானும்!..
என்றும் வாழ்க வாழ்க என்றே
என்னுள்ளம் கனிந்து வாழ்த்துகிறேன்!..



## மண்ணிதழின் வெள்ளிவிழா வாழ்த்து

பரம ஜெயரூபலிங்கம்
சமூகஆர்வலர்
பிறீமவோட - ஜேர்மனி

ஆயிரம் ஆயிரம் மொழியினுள்ளும்
அன்னை மொழியே பேரின்பம்
ஊற்றாய்ப் பாய்ந்து உணர்வாய் எழுந்து
புலத்திலும் பூக்கவைத்த தனித்துவம் பெரிது
தாங்கும் ஆண்டுகள் வளர்ந்து
தாயக உறவுகள் ஏங்கும் வாழ்வை
ஏற்றம் போற்றிட உதவும் பணியும் சிறப்பு
தங்குதடையின்றி பாயும் அருவிபோல்
வெள்ளிவிழா காணும் மண்ணிதழின் வரலாறு
போற்றுதற்குரிதே.
புலம்பெயர் தேசத்தில் மூக்கூட்டு தளமாகி
முத்தமிழின் வளர்ச்சி கொண்டு
எழுதும் துறை வளர்த்து
வாசிப்பின் சீர் பேணி
உதவும் கரம் நீட்டி
உயர்ந்தோங்கும் வளர்பினறயே
வருடாந்த போட்டி நடாத்தி
வாசகனர வளர்க்கின்ற நூலாக்கத் தேட்டமே
அழியாது சேவை அன்னைமொழியின் வாழ்வை
தேக்கி வைக்கும் பேட்டகமே
நீடுழி நீ ொழ்க
நின் பணிதனை செப்பனிட்டு செம்மையுற
சீராக்கும் அச்சுப் பதிப்பும்
மாதத்தில் இருமலராய் மலரவைக்கும்
மதிப்பு மிக்க பணியும் வளர்க வாழ்க
நிலமும் புலமும் நிறைந்து வளர்க
அழியாப்பதிவில் ஆணிவேர் நீ
வாழிய வாழிய பலாண்டு
வெள்ளி விழா நூற்றாண்டு விழாவாகி
அகிலத்தில் நிலைபெற்றுயர்க.!...

## தமிழர் விளையாட்டுக் கழகம்

டுயுஸ்பேர்க்
இ.ஸ்ரீஸ்கந்தராஜா
தலைவர் - நண்பர் யேர்மனி

மண்....சஞ்சிகைக் படைப்பின்
வெள்ளிவிழா காணும் இவ்வேளை
அள்ளி வழங்குகின்றோம் - எம்
அன்பான வாழ்த்துக்களை...


இருபத்தைந்து ஆண்டுகள் - தமிழ்
கலை, கல்வி, சமூகத் தொண்டுகள்
அத்தனையும் சாதனைகள் - இனி
இல்லை வாழ்த்த தமிழில் வார்த்தைகள்..

உங்கள் வாழ்வுவரை இப்பணி
கொண்டு செல்வீர்கள் - நம்பிக்கை
எமக்கும் திரு சிவராஜா
உங்களுக்கும் உண்டு..

உங்கள் பணிகள், படைப்புக்கள்
சொல்லிலும் எழுத்திலும் அடங்கா
சொல்லாமலும் பேசாமலும் - யாரும்
இருக்க முடியா!...

வாழ்த்தும்..

தமிழர் விளையாட்டுக் கழகம்



சோஸ்ற் தமிழ்க் கல்வி – கலாசார அமைப்பு
Tamilischer Schul- und Kulturverein Soest e.V.
Indu Raveentra Theivendram ( Vorsitzende )
Postfach 2226; 59482 Soest
02921 74 719
www.tsk-soest.com

## வாழ்த்துரை



தமிழ் எனும் மணி விளக்கு ஏற்றடா!

தமிழன் நெஞ்சமாம் அழகான வீட்டில்!

இன்று அனைவர் நெஞ்சமதிலும் மணிவிளக்காக விளங்கும் மண்சஞ்சிகையின் வெள்ளிவிழாவையொட்டி வாழ்த்துரைப்பதில் பெருமையடைகின்றேன். மண்சஞ்சிகையின் படைப்புகள் சிறுவர்முதல் பெரியோர்வரை அனைவருக்கும் பயன் உடையதாக உள்ளது. ``நல்லதோர் வீணை செய்தே அதை நலம் கெட புழுதியில் எறிவதுண்டோ!'' என பாரதியார் கூறியதுபோல் அனைவரும் இதன் பயனை உணர்ந்து பயனடைய வேண்டுமென விரும்புகின்றேன். மண் சஞ்சிகையினால் வெளியாகும் படைப்புக்கள் செய்திகளைப்பரிமாறி தான் எடுத்த இலக்கு நோக்கி வெற்றிநடை போடுமாயின் உயிர்த்துடிப்புடன் பல்லாண்டு காலம் வாழும் என்பதில் ஐயமில்லை. புலம் பெயர் மண்ணில் வாழும் சிறார்களிற்கு தமிழ்மொழியை ஊட்டுவதோடு, விட்டுவிடாமல் மனித நேயத்துடன் தாய் மண்ணில் வாழும் சிறார்களின் தேவைகளையும் அறிந்து செயல்படும் மண் சஞ்சிகையை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். பார்ப்போரினதும் விமர்சகர்களினதும் சாதக,பாதக எதிர்விளைவுகள் இதன் வளர்ச்சிக்கு, இன்னுமொரு படி விரல் பிடித்துக் கூட்டிச்செல்லும் என உறுதியாக நம்புகிறேன். மண் சஞ்சிகையின் படைப்பினூடாக நல்லொழுக்கம், பகுத்தறிவு, மனிதநேயம்,நற்பண்புகள்,அறிவுரைகள் உலகவிடயங்களென பல்வேறுபட்ட பூக்களை கொண்டு ஆக்கப்படும் பூமாலை போல், இளம்தலைமுறையை வழிநடத்துகின்ற வழிகாட்டியாக திகழ்கின்றது. மண்சஞ்சிகையின் பணி வளர மனதார வாழ்த்துன்கிறேன். இனிவரும் அனைத்து ஆக்கங்களும் காலத்தின் கண்ணாடியாக இருக்குமென நம்புகின்றேன். சகல ஆக்கங்கள் ஊடாக அனைவர் மனதில் அழியா இடம் பிடித்து கால்நூற்றாண்டு நிறைவைக்கொண்டுள்ள மண் சஞ்சகையின் பணியாவது வானளவில் உயர்ந்து பல சகாப்தங்களை காண வேண்டுமென வாழ்த்தி, இறைவனை வேண்டி நிற்க்கின்றேன்

வாழ்க மண் சஞ்சிகையின் பணி, வளர்க அதன் பயன்.

அன்புடன் திருமதி. இந்து தெய்வேந்திரம்.

சோஸ்ற் தமிழ்க்கல்வி-கலாசார அமைப்பின் அதிபர்.

*Bankverbindung:* **Konto Nr.**: 65 89 410 **BLZ**: 414 500 75 **Bank**: Sparkasse Soest

# பெருமைசேர் வாழ்த்துக்கள்..

பொன் புத்திசிகாமணி
எழுத்தாளர்
ஜேர்மனி



இருபத்தைந்து ஆண்டுகள் என்பது மிக நீண்ட பயணம். இந்தப்பயணத்தில் நாம் எதைச்சாதித்தோம் என்பதே கேள்வியாகும்.இந்த வகையில் 'மண்' என்ற பெயரில் சஞ்சிகையை ஆரம்பித்து அதனை இத்தனை ஆண்டுகள் நடாத்தி வருகின்ற மண் ஆசிரியர் திரு வ.சிவராசா அவர்கள் சாதனைக்குரிய மனிதராகப்போற்றப்படுகின்றார். முதலில் அவருக்கும் சஞ்சிகையில் பங்காற்றிவரும் அவரது குடும்பத்தினர்க்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களை எனது குடும்பத்தின்சார்பில் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.சிறப்பாக மண் சஞ்சிகையில் எழுதிவரும்,எழுத்தாளருக்கும்,வாசகருக கும் இந்த வாழ்த்துக்கள் போய்ச்சேரட்டும்.அவர்களும் இந்த வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர்கள்.

யேர்மனியில் எத்தனையோ சஞ்சிகைகள் காலத்திற்குக்காலம் தோன்றி மறைந்திருக்கின்றன. கையெழுத்துப்பிரதியாக ஆரம்பித்து இன்று அச்சாகி தாயகம் வரை சென்று பெருமை சேர்த்திருக்கிறது.இந்த மண்சஞ்சிகை.ஐந்து,பத்து,பதினைந்து, இருபது என்று பல சிறப்பான ஆண்டு விழாக்களை தனது வாசகர்களோடும், எழுத்தாளர்களோடும் அபிமானிகளோடும் மிகவும் சிறப்பாகக்கொண்டாடியது. ஒவ்வொருவிழா நடைபெறும்போதும் அடுத்த சிறப்பாண்டு விழா எப்போது என்பதுபோல் வாசகர்கள் எதிர்பார்த்திருப்பதை என்னால் அப்போதே அறிய முடிந்தது.அந்த அளவிற்கு விருப்பம் நிறைந்த வாசகர்களையும்,சிறார்களையும் தன்னகத்தே வைத்திருப்பது சாதனையென்றே சொல்லவேண்டும்.

புலம்பெயர் தேசத்தில் எமது சிறார்களின் தாய்மொழிக்கல்வி அவசியமானது. இதனைக்கருத்தில்கொண்டே 'மண்' சஞ்சிகையில் பலபக்கங்கள் அதற்காகவே ஒதுக்கப்பட்டிருக்கி ன்றன.இதனைப்படித்துப்பயன் பெற்ற நம்சிறார்கள் மெல்ல,மெல்ல இதற்கே எழுத ஆரம்பித்தார்கள்.இன்று முழுக்க,முழுக்க சிறுவர் ஆக்கங்களைக்கொண்டே இந்தப்பக்கங்கள் நிரப்பப்படுகின்றன. ஓவியம், குறுக்கெழுத்துப்போட்டி, பொது அறிவுப்போட்டி,திருக்குறள்,ஆத்திசூடி சின்னச்சின்ன கவிதைகள்,கதைகள் என்று சிறுவர்கள் படித்துப்பயன் பெறும்வகையில் சிறப்பாகதமிழ்க்கல்வியை ஊட்டிவருகின்றது. தாயகத்தில் இருந்து பல சிறுவர்களின்சிறப்பான எழுத்தாக்கங்கள் இடம்பெற்றிருப்பதை வாசகர்கள் பார்த்திருப்பீர்கள். இந்தச்சிறப்பாண்டில் இலங்கையிலிருந்து ஒருகட்டு ஆக்கங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன என்று மண் ஆசிரியர் என்னிடம் சொல்லிப் பெருமைப்பட்டார். அந்தப்பெருமையில் அவரின் வெற்றியைக்கண்டேன்.

சிறுவர்களுக்கு மாத்திரமன்றி பெரியவர்களும் படித்து பயன்பெறக்கூடிய கட்டுரைகள், தாயகத்து நிகழ்வுகள், உலகப்புதினங்கள், வைத்தியக்குறிப்புகள் என்று நிறையவே சொல்லலாம். இச்சஞ்சிகையில் ஆக்கங்களை எழுதியே பலர் தகுதிவாய்ந்த எழுத்தாளர்களானார்கள் என்று சொன்னால் மிகையாகாது. இருபத்தைந்து ஆண்டுகள் எத்தனையோ கஸ்ரங்களுக்கு மத்தியில் இச்சஞ்சிகையை நடாத்திவிட்டேன் தொடர்ந்து நடாத்த வேண்டும் என்கின்ற ஆசை இருக்கிறது. எழுத்தாளர்கள் வாசகர்கள் ஒத்துழைக்கும் பட்சத்தில் இன்னும் பலவருடங்கள் என்னால்தொடரமுடியும்..என்று அவர் என்னிடம் சொன்னபோது அவரின் சலிப்பில்லாத உழைப்பைக்கண்டு வியந்து போனேன்.அவரது இந்த எண்ணம் நிறைவேற எழுத்தாளர்களும் வாசகர்களும் பெருமனதோடு ஒத்துழைப்பினை வழங்கவேண்டுமென்று இவ்வேளையில் கேட்டுக்கொள்ளுகின்றேன். எம்மால் முடியவில்லையென்றால், செய்பவர்களுக்கு ஆதரவாக இருப்போம். வாழ்க!..வளர்க!.. இந்த சஞ்சிகையின்

இன்னுமொரு பக்கத்தை வாசகர்கள் அறிந்து வைத்திருப்பீர்கள். மண் சஞ்சிகையின் மனித நேயப்பணி. இலங்கைப்பெறுமதியில் பலகோடிகளை அதற்காக அனுப்பிவைத்த பக்கங்கள் அவை. ஆதரவற்றோர் நிதிக்காக நீங்கள்தான் அள்ளிக்கொடுக்கிறீர்கள். அனுப்பிவைத்த பணத்திற்கு ஒரு சதம் பிசகாது கணக்கிருக்கும் அடுத்த இதழ்விரியும்போது. எத்தனை ஆதரவற்ற சிறுவர்களின் வாழ்வாதாரம்,கல்விக்கென்று இந்தப்பணம் உதவுகின்றது.ஆசிரியர் திரு.வ.சிவராசா அவர்களின் அறுபதாவது பிறந்த நாள் விழாவின்போது தாயகத்திலிருந்து வந்த வாழ்த்துச்செய்திகள்

வாசிக்கும்தோறும் நெஞ்சை உருக்குவதாய் இருந்தன. ஒரு மனிதனுக்கு இதைத்தவிர வேறு என்ன சிறப்பு வேண்டும். இந்தப்பிள்ளைகளே ஆக்கங்களை அங்கிருந்து அனுப்பிவைக்கின்றார்கள்.இது எவ்வளவு போற்றுதற்குரிய விடையம். ஆழிப்பேரலையின் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அள்ளிக்கொடுத்தது மண்சஞ்சிகை.அதற்கான நிதியை நீங்களே மனிதாபிமானத்தோடு அள்ளிக்கொடுத்தீர்கள். இவரிடம் கொடுத்தால் உரிய இடத்திற்குப் போய்ச்சேருமென்ற நம்பிக்கையைப்பெற்றவர்,திருவ. சிவராசா அவர்கள். இந்தப்பணிகளில் இவரது குடும்பத்திற்கும் பெரியபங்கிருக்கிறது. மனைவி, மகள், மகன்கள் என்று எல்லோரும் சேர்ந்தே செயல்படுகிறார்கள்.

புலம்பெயர் சூழலில் இத்தகைய சேவை செய்வது எல்லோராலும் முடியுமென்றில்லை, அதற்கும் மனதில் நல்ல சிந்தனை தோன்றவேண்டும். இலக்கியப்பணியுடன் இந்தச்செயற்பாட்டிற்கான நேரத்தை ஒதுக்கி மனநிறைவோடு செயற்பட்டு வருகின்ற இந்த நல்லமனிதர் குடும்பத்திற்கு நல்லாசி வழங்குவோம். இன்னும் பலஆண்டுகள் சீரோடும் சிறப்போடும் செயல்பட்டு பல ஆண்டு விழாக்களைக் கொண்டாட வேண்டுமென்று எனது குடும்பத்தின் சார்பாகவும் வாழ்த்துக்களைத்தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

## வறுமையும் வசதியும்....

உலகம் முழுவதும் 270 கோடி பேருக்கு இணையத்தள வசதி உள்ளது. நாள் ஒன்றுக்கு 2,000 கோடி எஸ். எம்.எஸ் (SMS) தகவல்கள் அனுப்பப்படுகின்றன. இதற்கான செலவைக் குறைத்தால் தினமும் 10 ஆயிரம் கோடி எஸ்.எம்.எஸ் அனுப்ப முடியும். உலகம் முழுவதும் 250 கோடி பேர் நாள் ஒன்றுக்கு 120 (இந்திய) ரூபா சம்பளம்பெறுபவர்களாகத்தான் உள்ளனர். அவர்களுக்கு இணையத்தளம் எட்டாக்கனியாக உள்ளது. இவ்வாறு கூறியிருக்கிறார் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த பேஸ்புக் (Facebook) சமூகத் தொடர்பு இணையத்தளத்தின் முக்கியமான நிறுவனரான மார்க் சுக்கர்பெர்க். இவர் அமெரிக்காவின் முதல்தர செல்வந்தரான மைக்ரோசொப்ற் கம்யூட்டர் நிறுவனத்தின்தலைவர் பில் கேற்ஸ் இதற்கு அடுத்த நிலையிலுள்ள பணக்காரராவர்.

# பணிதொடரக் கைகொடுப்போம்

திருமதி கலைவாணி ஏகானந்தராசா
சங்கீத ஆசிரியை (Dip. in Music)
ஜேர்மனி



"மண்"சஞ்சிகையின் 25 ஆண்டுகளின் நிறைவு. 1990 ஆம் ஆண்டு ஆரம்பித்த சஞ்சிகை 2015 ஆம் ஆண்டு 169 ஆவது இதழுடன் 25 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. ஒரு தனிமனிதனின் முயற்சி இது. அனுபவித்தவர்கள் நிமிர்ந்து பார்த்து அதிசயப்படுகிறோம். ஆனால் ஆசிரியர் திரு சிவராஜா அவர்கள் மிக சர்வசாதாரணமாகவே நினைத்துக்கொள்கிறார். காரணம் அவருக்குள் இருக்கும் உத்வேகம் இன்னமும் நிறைய செய்யவேண்டும் என்கிற ஆர்வம் துடிப்பு.

இந்த சஞ்சிகை மூலம் வாசகர்களுக்கும் மக்களுக்கும் கிடைத்தவை என்ன? ஐந்து வயது பாலர் முதல் நூறு வயது முதியவர் வரை பயன்பெறவைக்கும் கட்டுரைகள், கதைகள், கவிதைகள், செய்திகள், விமர்சனங்கள்,, மூளைக்கு வேலை கொடுக்கும் குறுக்கெழுத்துப் போட்டிகள், பொது அறிவுக் கேள்விகள் சாதனை படைத்தவர்களை வாழ்த்துவதும், பாராட்டுவதும், பரிசில்கள் வழங்குவதும், இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.இவற்றை எல்லாம் விட மிக உன்னத பணி மனித நேயப்பணி.

வாழ்ந்த மண்ணில் தொப்புள்கொடி உறவுகளின் துயர் போக்க செய்யும் உயர்ந்த பணி. இந்த 25 வருடங்களில் பல லட்சங்களை வாசகர்களிடம் திரட்டி, ஆதரவற்ற எம் உறவுகளின் கண்ணீரைத் துடைத்து வந்துள்ளார். பல நூறு சிறார்களுக்கு கல்வி வசதிக்காக உதவியுள்ளார்..இத்தனைக்கும் ஆசிரியர் சிவராஜா அவர்களுக்கு கிடைத்தது என்ன? பிறர்பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும் என்று சும்மாவா சொல்லிவைத்தார்கள். அவர் வழியிலே அவருக்கு ஊக்கத்துடன் கை கொடுத்துவரும் அவர் மனைவி பல வழியிலும் கை கொடுத்து சஞ்சிகையை வெளி கொணர உதவி வரும் அவர் பிள்ளைகள் இவர்களின் அர்ப்பணிப்புகளையும் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.

இவற்றுக்கெல்லாம் நன்றி என்ற வார்த்தையுடன் நின்றுவிடாது அவர் பணி தொடர கை கொடுப்போமா? சஞ்சிகை தொடர எமது ஆக்கங்களைக் கொடுத்து உதவுவதுடன், மனித நேயப் பணியிலும் இணைந்து எமது உறவுகளை வாழவைப்பதுடன் நாமும் வாழ்ந்ததற்கான பலனைப் பெறுவோமாக.

வாழ்க ஆசிரியர் பணி.... வளர்க மண் சஞ்சிகை...

---

## தமிழருவியின் வாழ்த்து...

மண் சஞ்சிகை வெள்ளிவிழா காண்பதையிட்டு மிக்க

மகிழ்ச்சியடைகிறேன் ஒர் நூலை வெளியிடுவதிலுள்ள

சிரமங்களை நானறிவேன்.அந்தவகையில் கடந்த

25 ஆண்டுகளில் நீங்கள் கண்ட சோதனைகளை

சாதனைகளாக்கிவெற்றிகண்டுள்ளீர்கள்வாழ்த்துக்கள்.

**தமிழருவி நயினை விஜயன் - ஜேர்மனி**

## வாழ்த்து...

புள்ளிமானைப் போல்.. வடம்பிடித்து தடம்பதித்து

வெள்ளிவிழாக் கண்டிடும் மண் மலருக்கு

எங்கள் குடும்பம் சார்ந்த வாழ்த்துக்கள்..

எத்தனைஇடர்வரினும் அத்தனையும்புன்முறுவலுடன்

வெற்றிகொள்வதுமண்ணின்குடும்பமே!..வாழ்த்துக்கள்!..

**வரதன் குடும்பம் - ஜேர்மனி**

# வெள்ளிவிழா வாழ்த்து

திருமதி. சாந்தினி துரையரங்கன் B.F.A.
(நுண்கலைமாணி - பரதநாட்டியம்)
ஜேர்மனி



**மண் சஞ்சிகையின் வெள்ளி விழா வாழ்த்துக்கள்**

புலம் பெயர்ந்து வாழும் நாட்டிலும் எம் தாய் மொழியை கைவிடாது அதனை வளர்க்க அரும்பாடுபடுபவர்களில் மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் சிவராசா அவர்களும் ஒருவராவார். இவரின் முயற்சியால் வெளிவந்துகொண்டிருக்கும் மண் சஞ்சிகை தனது வெள்ளிவிழாவை கொண்டாடுகின்றது என்பது ஒரு சாதாரண விடயம் அல்ல. இது தமிழ் மேல் வைத்த தன்னலம் அற்ற சேவையாகும். பல இன்னல்கள் மத்தியிலும் விடாது தம் ஆர்வத்தினால் சஞ்சிகையுடன் சேர்ந்து மனித நேயப்பணிகளையும் தொடர்ந்து செய்துவருவது என்பது மிகமிகப் பாராட்டப்பட வேண்டிய செயலாகும்.

மண் சஞ்சிகை சிறுவர்கள், பெரியோர்களிற்கு ஏற்ப பல பகுதிகளைக் தன்னகத்தே கொண்டுள்ளது. நாட்டில் நடைபெறுகின்ற முக்கிய நிகழ்வுகள் பற்றிய செய்திகளையும் இது காவி வருகின்றது. இன்று இச் சஞ்சிகை தனது 25வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். தொடர்ந்தும் பல வெற்றி விழாக்களை கொண்டாட வேண்டும் என்ற ஆவலுடன் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ் வேளைதனில் ஆசிரியர் அவர்களின் அர்ப்பணிப்புடனான சேவையையும் நாம் வாழ்த்தி வணங்குவதுடன் அவருக்கு உறுதுணையாக செயற்படுபவர்களையும் வாழ்த்துகின்றேன். இவர் நீடூழி காலம் நலமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப்பணிகின்றேன். நன்றி

வாழ்க தமிழ்

வளர்க உங்கள் பணி



# வாழ்த்துச்செய்தி..

ப.பசுபதிராசா
எழுத்தாளர்
ஜேர்மனி



வாழ்த்துக்கள், வந்தனங்கள் பலகோடி. இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து வெள்ளிவிழாக்காணும் மண் சஞ்சிகைக்கும் அதன் ஆசிரியப்பெருமகன் அண்ணன் சிவராசா அவர்கட்கும் என் இதயம் சுமந்து அளிக்கும் இதயம் நிகர் வாழ்த்துக்கள். இன்று நீங்கள் வெள்ளிவிழா நாயகனாக பவனி வந்து, இன்னும் பல ஆண்டுகள் கடந்து தங்கத் தாரகையாக தங்க நாயகனாக நாளைய அவனியில் நடைபோட வாழ்த்துகிறேன்.

மகிழ்ச்சி இதுதான் வாழ்க்கையின் மூடு மந்திரம். இதைத் தேடி ஓடியபடிதான் அகிலம் அசைகின்றது. அதிலும் தனக்கும் தன் குடும்பத்திற்கும் என்பதே சாமான்யமான எதிர்பார்ப்பு. ஆனால் உண்மையான மகிழ்ச்சி எப்படி எனில் அது பிறர் நெஞ்சில் பீறிட்டுக்கொண்டு எழும்புவதற்கு ஒரு மனிதன் செய்யும் நல்ல நடவடிக்கைகளில் உருவாக்கப்படுவது அப்பேற்பட்ட ஈடு இணையற்றசிந்தனை மேவிய செயற்பாட்டில் ஒரு கால் நூற்றாண்டு காலம் ஆழமான நேசக்கரம் ஒன்று நாற்பது இலட்சம் மக்கள் மத்தியில் நடுநாயகமாக காலத்தின் தேவையோடும், சேவையோடும் பற்றிப் படர்ந்து வெற்றிகள் கனிந்து நிற்கின்றது என்றால் அது மண் சஞ்சிகையின் மகத்தான மக்கள் பணி என்பதைத்தவிர நாம் காண வேறு ஏதும் இல்லை எனலாம்.

நேர்மையும், உண்மையும், நம்பிக்கையும் உறுதியின் அத்திவாரமாக அமைந்துவிட்டால் அது கோபுரமாகத் திகழும் என்பதும் மக்கள் அதை வணங்கும் வரலாற்றை உருவாக்கித் தருவார்கள் என்பதற்கு "மண்" ஒரு நிகழ்காலச் சம்பவங்களின் இனிய எடுத்துக்காட்டு என்பது வெறும் புகழ்ச்சியல்ல. இன்று எங்கு பார்த்தாலும் சமூகத்தை ஊமையாக்கும் சங்கார, சதிகார, அதிகாரங்களுக்குத்தான் கரம்கொடுப்போர் இணைந்துகொண்டு தீமைகளைப் பங்குபோடுகிறார்கள்.

மக்களிடம் எதையும் எதிர்பாராது, மக்களின் அனுமதியின்றி தான்தோன்றித்தனமாக சமூக அமைதியின்மையை ஏற்படுத்துகின்றனர். ஆனால்

மக்கள் பணி என்றால் எப்படி என்று முற்று முழுதான தனது அர்ப்பணிப்பை வழிகாட்டிச் செல்லும் திசைகாட்டியே இந்த மண். எதிர்காலமும் அதன் நோக்கமும் கலைந்துவிடாது நாளைய தலைமுறைக்கு ஒரு அந்நிய மண்ணிலிருந்துகொண்டு, அடையாளப்படுத்தியபடி, தாய் மண்ணையும் அந்நிய மண்ணையும் இணைக்கும் பாலமாக ஒரு தலைமுறை அறிந்துவரும் ஆக்கபூர்வங்களில் தன் அரியசேவையை அசையாது செய்தது மண்.

இந்த இருபத்தைந்து வருட புகலிடவாழ்வில் புற்றீசல்கள் எனப்புறப்பட்ட எத்தனை சஞ்சிகைகள், பத்திரிகைகள், சங்கங்கள், சபைகள், தொண்டு நிறுவனங்கள் என்று கணக்கிலடங்கா. காகிதத்திட்டங்கள் காற்றோடு காற்றாக, காகித ஓடங்களாக, இலட்சியமற்று நல் இதயங்கள்கூட இல்லாமல் திசைநோக்கி இலட்சியத்தோடு பயணிக்கத்தெரியாமல் சயனித்துப்போன சம்பவங்கள் ஆயிரம்.

சமூக இடர்களைப் பேனா தூக்குபவன் தர்மத்தின் தானத் தலைவனாக, சமூக நெறிகளுக்கு தன்னை அர்ப்பணிப்பவராக இருக்கவேண்டிய ஆளுமையை விடுத்து அந்தச் சஞ்சிகை, பத்திரிகையோடே தன் பெயரை இணைத்து அடையாள இனம் காட்டும் ஆசாமிகளாக, விளம்பரத்திற்கு அலையும் விட்டில் பூச்சிகளாக, பிரமுகர் என்ற விபரீத ஆசைகளுக்காக உலவும் வாய்ச்சொல் வீரர்களிடையே மண்ணும் அதன் மார்க்கங்களும் கருத்திற்கொண்ட எழுத்துக்கு தன் கழுத்தை கொடுக்கும் பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றிய ஊடகம் "மண்" மட்டுமே.

ஒரு பத்திரிகைப்பணி என்பது நிகழ்காலத்தில் பெரிதும் நடாத்தி முடிப்பது சாத்தியமற்றது.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் தொழில் நுட்ப நூதனங்கள், எழுதுவதற்கான சாதனங்களின் பெருக்கம் என்பன பத்திரிகைப் பணியை இலகுபோல் இருந்தாலும் அரசியல் குமுறல்கள், கொந்தளிப்புகள், சார்புநிலை பற்றிய முரண்பாடுகள் முட்டி மோதும். இந்நேரம் ஒரு பத்திரிகைப்பணி முன்னெடுப்பது இலகு இல்லை. மேலும் தனி ஒரு மனிதனாகக் கணனிக்கையாள்வு என்பது பரீட்சையமற்ற ஒரு நிலையில் ஒரு உதவி ஆசிரியர்கூட இல்லாமல் விளம்பரம்கூட ஏற்காமல் ஒரு கால் நூற்றாண்டு நகர்வது ரொம்பவும் சவாலான காரியம். ஆயினும் இதன் பின்னால் இருந்து கண்ணை இமைத்தவர்கள் மக்கள் என்ற மாபெரும் சக்தி என்பதால் மண்ணுள் ஈரம் இருந்தது.. மக்கள் கண்ணில் வீழ்ந்தது.. இதுவே மண்ணின் மகத்தான வெற்றியின் இரகசியம்.

"மண்' உள்வாங்கிய படைப்புக்களும் படைப்பவனின் தகுதியைத்தாண்டி வளரும் இளம் சமூகத்தின் மனக்கிளர்ச்சிகளை, அவர்களின் படைப்புக்களுக்குச் சுதந்திரமளித்துப் படரவிட்டதால் மண்ணில் இன்னமும் அழகு தெரிகின்றது. இப்பேற்பட்ட மாண்புமிகு படைப்புக்களோடும் மக்கள் பணியோடும் பல்லாண்டு... பல்லாண்டு இன்னலுறும் மனிதகுலச் சேவையை இனிது முன்னெடுத்துச் செல்ல என் மனம் எங்கும் பூத்த மகிழ்ச்சியால் வாழ்த்துகிறேன்!.

வாழ்க!...வாழ்க!...

---

பி.சி.இராஜகருணா
ஈழமுருகதாசன்
எழுத்தாளர்
ஜேர்மனி
**Eelaam**

**worldkovil.com**
***web/youtube***
**rajakaruna**
rajakaruna@live.de

வாழ்த்துச்செய்தி

புலம்பெயர்தேசமதில் 25ஆண்டு இலக்கியப்பணியை மேற்கொண்டு வருகின்ற மண்சஞ்சிகைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புலம்பெயர்ந்தாலும்
இனம்பெயராமலும்
தமிழ்மண்பெயராலும்
தமிழ்ச்சமூகம் சிறக்க
தமிழ் இலக்கியம்
ஊட்டி வளர்த்த
மண்ணே பொன்னே
வாழிய... வாழிய... வாழியவே!....

# வெள்ளிவிழாக்காணும் மண் இதழ்...

திருமதி நகுலா சிவநாதன் B.A
எழுத்தாளர்
ஜேர்மனி



அகவை 25 இல் கால் பதிக்கும் மண்மலரை வாழ்த்துவதில் மிக்க மகிழ்வு அடைகிறேன். ஆண்டுகள் பலவாய் ஓடி மறைந்தாலும் மண் மலரின் சேவைகள் என்றென்றும் போற்றுதற்குரியது.ஆரம்ப காலம் முதல் இந்த இதழின் வளர்ச்சியுடன் இணைந்திருந்தேன். சிறார்களை தமிழ்மொழியினூடாகவளர்ப்பதற்கு ஊன்றுகோலாய் இருக்கின்ற சஞ்சிகைஇது. ஒவ்வொரு ஆண்டும் சிறார்களை ஊக்குவிக்கும் போட்டிகள் வைத்து தமிழோடு வளர்ப்பதில் முன்னின்ற இதழாக மண்ணைப் பார்க்கிறேன். பல போட்டிகளுக்கு நடுவராகப் பணிபுரிந்த காலங்களை உணர்வோடு நோக்குகிறேன். எத்தனை இடர்கள் வந்தாலும் அதனை மிக காத்திரமாக கொண்டு சென்று பணி புரிந்த மண்ணாசிரியரின் வனப்பு மிக்க பணி மிக மிக போற்றுதற்குரியது.

அதனை விட தாயகத்து சிறார்களின் வளர்ச்சியில் மண் இதழ் ஆற்றிய பணி மகத்தானது. ஒவ்வொரு இல்லங்களை தேடி அவர்களின் வளர்ச்சியில் ஈடுபாட்டோடு சிறுதுளி பெரு வெள்ளமாக பணங்களை அன்பளிப்பு செய்து காத்திரமான வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைந்த மண் போற்றப் படவேண்டியது. இத்தனை காலம் இனிதாக நற்செயல்களால் ஊக்கமுடன் பதியங்களாக்கிய அருமை ஆசிரியர் திரு சிவராசா காலத்தால் பாராட்டப்பட வேண்டியவர். வாழும்போதே அவரின் சேவை வாழ்த்தப்பட வேண்டும். அருமையான குணநலத்துடன் பண்புசார் செயல்களைப் படிமுறைகளாக்கி மண் இதழின் வளர்ச்சியில் அயராது உழைத்தவர்.சஞ்சிகை நடாத்துவது என்பது சாதாரண ஒன்றல்ல.

எழுத்து அச்சு ஒழுங்கமைப்பு அத்தனையும் சரிவரப்பார்த்து இரவு பகல் அயராது பாடுபட்டு உழைத்தவர்.அவரின் இந்த அயராத முனைப்பு எத்தனையோ எழுத்தாளர்களையும் தமிழோடு எழுத வைத்தது. சிறியவர்களோடு பெரியவர்களையும் ஊக்கமுற வைப்பது இவரின் செயற்பாடு. நானும் இச் சஞ்சிகை நடாத்திய பல போட்டிகளில் ஆரம்பம் முதல் ஈடுபட்டு பல பரிசில்களை பெற்றுக் கொண்டேன். இந்த நல்ல இதழ் தொடர்ந்து வெற்றி நடை போட வேண்டும். பற்றிப்படர்ந்து தமிழ் வளர்த்து ஆலமரமாக நின்று நிலைக்க வேண்டும்.

சாதனை ஏட்டில் பொறிக்கப்படவேண்டிய இதழ் இது. சரித்திரம் படைக்கட்டும் நாளை. புலத்தோடு நிலத்தையும் இணைத்துச்சமாந்தரக் கோட்டில் பவனி வரும் மண் பல்லாண்டு பல்லாண்டு நடை பயில வேண்டும்.வாழ்க மண்மலர்க! வளர்க உன் தொண்டு! அன்புடன் வாழ்த்தி மகிழ்றோம்...

## வாசகர் வாழ்த்து......

மா.அரிச்சந்திரன் - லண்டன்

மண் சஞ்சிகையின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவிற்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். மண் சஞ்சிகைமூலம் ஐரோப்பிய நாடுகளில் தாய்மொழியாம் தமிழை அழியாமல் தடுக்கின்ற முயற்சியின் செயற்பாட்டில் செயற்பட்டுவருவது பாராட்டுக்குரியவிடையமாகும். அதே நேரத்தில் இலங்கையிலும் அல்லலுறும் மக்களுக்குப் பல உதவிகளை செய்துவருவதை மண் சஞ்சிகைமூலம் நாம் அறியக்கூடியாதக இருக்கின்றது. இப்பணிகளைத் தொடர்ந்து செய்ய இறைவன் ஆசீர்வதிக்கட்டும். வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!...

# வாழ்த்து!..

திருமதி கீத்தா பரமானந்தன்
எழுத்தாளர் - ஜேர்மனி

தமிழர் புலப் பெயர்வு ஏற்பட்டு ஐரோப்பிய நாடுகளை அடைந்த போது தாய் மொழித் தாகம், தாய் மண் நேசம் கொண்ட தமிழ் மக்கள், தம் தாய் மொழி ஆர்வத்தின் உந்துதலால் தாம் வாழும் நாடுகளில் சஞ்சிகைகள் பத்திரிகைகள் என்பவற்றை, தம் பெரு முயற்சியால் வெளிக் கொணர்ந்தனர். அவ்வாறு வெளி வந்த பல சஞ்சிகைகள், பத்திரிகைகள், கால ஓட்டத்தில் நின்று நிலைத்திட முடியாமல், பொருளாதாரம், சொந்த வாழ்வு, போட்டிகள், பூசல்கள், என்ற பல்வகைக் காரணங்களால், தோற்றுப் போனமை ,தமிழ் மக்களின் துாரதிஸ்ட்டமே ,இத்தனை இன்ல்கள் இடையூறுகள் அனைத்தும் தாண்டி "மண்" எனும் பெயர் தாங்கி 25, வருடங்களாக சோதனை கடந்த சாதனை இளவலாக மண் சஞ்சிகை தனது வெற்றியின் பெருமிதத்தில், வெள்ளிவிழா கொண்டாடுகிறது. இந்த மலரின் வாசனையை நுகர்ந்தவள், நுகர்பவள் என்ற வகையில் அதன் மகிழ்வில் நானும் பெருமிதம் கொள்கிறேன் இம் மலரின் பெயர்ச் சிறப்பை எண்ணி பலமுறை நான் மகிழ்ந்திருக்கிறேன். என் மண் வாசத்தை தமிழ் வாசத்தை எனக்குத் தருவதால் "மண்" எனும் பெயர் மிகப் பொருத்தமே, யார் இப் பெயரை சூட்டினாரோ, அவருக்கு என்றும் மனம் நிறை வாழ்த்துக்கள், சொல்லிக்கொள்வேன் ,இச் சஞ்சிகை ஓர் இளையவரின் வளர்ச்சியைப் போன்று நாளுக்கு நாள் தன் வளத்தை ,ஆற்றலை வளர்த்துக் கொண்டே வருகிறது, உள்ளார்ந்த விடயங்களிலும், அட்டைப் படச் சிறப்பிலும், மனித நேயப் பணியிலும் சஞ்சிகையின் மண் வாசனை நறுமணம் பரப்புகிறது. எழுத்தாக்கம் உள்ளவர் எவரும் இதில் இணையலாம். இங்கு பார பட்சம் பார்க்கப்படுவதில்லை, குழந்தைகளும் தம் ஆற்றலை வளர்த்துக் கொள்ள, தேடல் செய்ய இங்கே இடமுண்டு ,இச் சஞ்சிகை மூலம் நான் நிறையவே தகவல்களை அறிந்திருக்கிறேன் ,பயனடைந்தும் இருக்கிறேன் .இச்சஞ்சிகை முலம் வாழ்வு பெற்றிருப்பதையும் கண்டிருக்கிறேன், இச் சஞ்சிகையின் ஆரம்பகால குழந்தைகள் பலர் இன்றைய இளையவராய் சஞ்சிகையின் வளர்ச்சியில் தம் தொழில் நுட்பத் திறன் மூலம் பங்காற்றுவதையும் அறிதிருக்கிறேன், இத்தனை சிறப்புக்களையும் தாங்கி வெளி வரும் மண் சஞ்சிகை, இளையோர் ஆற்றலோடு போட்டி போட்டு மெருகுற வேண்டுமெனும் அவாக் கொள்கிறேன் .ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை தொடரும் எழுத்தாளர் சிறப்புக்கண்டு மகிழ்கிறேன். எல்லா மனிதர் வாழ்விலும் தொடரும் இன்ப துன்பங்கள் இச் சஞ்சிகையின் ஆசிரியர் குழாத்திற்கும் ஏற்பட்டிருக்கும், இருந்தும் தவறாது இரு மாதத்திற்கு ஒரு தரம் மலர் நம் வாசல் தேடி வந்துவிடும். வருடங்கள் தோறும் பங்கு பெறும் பெரியவர், குழந்தைகளை ஊக்குவிக்கும் பாங்கில், போட்டிகள் வைத்து பரிசுகள் கொடுக்கவும் இது தயங்கியதில்லை, இப்படிப் பன் முகம் கொண்டு பணியாற்றும் மண் சஞ்சிகையின் வெள்ளிவிழா எனும் வெற்றி விழாவிலே அதன் பயன் பெற்ற வாசகியாய், எழுத்தாக்கம் தருபவளாய் ,மகிழ்வுடன், என்றும் பசுமை குன்றாச் செழிப்புடன் நறுமணத்துடன் பல நூறு நற் பணியாற்ற வாழ்த்துக்கள் .வாழ்த்துக்கள்!..



# வெள்ளிவிழா வாழ்த்து

சோம சிவ குலநாயகம்
முன்னாள் ஊடகவியலாளர் - சமாதான நீதவான்
பசுமைவளத்திட்ட ஆர்வலர் பிறீமன் - ஜேர்மனி



மண்ணின் வெள்ளிவிழாவுக்கு எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் இந்நேரத்தில்"மண்" இல்லாமல் எதையும் விதைக்கமுடியாது. விதைப்பின் பெறுபேறு பூமியில் வாழும் உயிர்களின் உணவாகும். எப்படி மண் உணவைப்பெறப் பயன்படுகிறதோ அதே போலவே புலம்பெயர்ந்த நம்மவர்களுக்கு எமது கருத்துக்களை வெளியரங்கப்படுத்துவதற்கு ஜேர்மனி டுஸ்பேர்க் மாநகரிலிருந்து மண் என்ற சஞ்சிகை பயன்படுகிறது. ஆசிரியர் திரு வ சிவராசா அவர்களின் முயற்சியால் கடந்த இருபத்தைந்து வருடங்களாகத் தொடர்ந்து வெளியிடப்பட்டதன் பலனாக இவ்வருடம் வெள்ளிவிழாக் காண்கின்றது.

இந்தச் சஞ்சிகை கல்வி, கலை, இலக்கியம் மற்றும் மனிதநேயச் சமூகசேவை என இருமாத இதழாகத் தொடர்ந்து வெளிடப்பட்டுப் புலம்பெயர் மனிதநேயப் பணியாளர்களுக்குக் கைகொடுத்துத் தாயகத்தில் ஆதரவற்றோருக்கும் தக்க சமயத்தில் நல்கி நிதிக்கணக்கையும் , பற்றுச்சீட்டையும் பிரசுரித்து வருவது"மண்ணை மேடாக்கி"மேலும் மலை உச்சிக்கு உயர்த்தியுள்ளது. இதை ஒரு பண ஜீரணிப்பு என்றே கூறவேண்டும்.

தாயகத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களின்போது பலர் மனம் உவர்ந்து பணம் நல்கியுள்ளனர். அதற்கு என்ன நடந்தது, ஜீரணித்ததா!.. என அறியமுடியாத நிலையில் உன்னத மண் சஞ்சிகை ஒரு சவாலாக அமைந்துள்ளமை வாசகர்களாகிய எமக்குப் பெருமையாக உள்ளது. இன்று வெள்ளிவிழாக்காணும் மண் மலர் மேலும் விளைந்து வைரவிழாக்காண இறையருள்பெற இறைஞ்சுகிறோம். வாழ்க!..வளர்க!..

# விழுதுவிட்டு உயர்க!...



வெள்ளிவிழா வாழ்த்து புலம்நோக்கிப் புலர்ந்த பொழுதில் நிலம் நோக்கிய நெறிப்படுத்தலும்தமிழின் தாகமே தனித்துவ மூச்சாகமண்ணிதழாய் வெற்றிகொண்டு வெள்ளிவிழாக் காண்கிறதுஅயராத முனைப்போடு அத்திவாரப் பாலமிட்டுஅன்னைமொழி வார்ப்புகளை அங்கீகாரம்ஆக்கி வைத்த மண்ணிதழே வாழிய -நீஎண்ணக்கரிய ஏற்றுமுறு சேவைகள்தோற்றிடா கைங்கரியம் தொலைநோக்கிய பார்வைமனிதநேய சேவை என மங்காத் தமிழேமன்றம் கண்டிட்ட மண்ணிதழே வாழிய -நீ. அயராத சேவை வளம் உணர்வான தாய்த் தமிழை உயரவைக்கும் சேவை வளம்தயங்காது இளையோரும் தமிழோடு உறவுகொள்ளபதிர்வினா விடையோடு பூத்திருக்கும் தகவல் வளம்வறுமையில் வாடுகின்ற தேசத்தின் நாற்றுகளைசெழிப்போடு படரவைக்க பாடுபடும் பண்பின் களம் ஆற்றலில் வீச்சுக் கொண்டு ஆக்குகின்ற படைப்புக்களைபோற்றலில் கௌரவிக்கும் புலம் நோக்கிய எழத்தின் தளம்ஆண்டுகள் 25 அயராத பணியின் சுமைதாங்கலில்ஒன்றிணைந்த நிர்வாக செழிப்பின் நிலம்ஓய்வின்றிப் படரட்டும் ஓங்கியே வளரட்டும்தேங்காது தேசமெல்லாம் தென்தமிழாய் முழங்கட்டும் நீண்டுயரும் வெள்ளிவிழா நாற்றாண்டாய் பற்றிப் படரட்டும் விண்ணுயர்ந்த கொள்கைகளும் வீறுகொண்ட படைப்புகளும்தன்னலத்தை புறம் தள்ளும் பொதுநலத்தின் சேவைகளும்மண்ணிதழின் மதிப்புகளே மகுடமிட்ட சேவைகளேஉன்னிதழின் எழத்தாணி உலகையே ஆளட்டும்விண்ணுயர் சேவையே விழது விட்டுயர்க வாழ்த்துக்கள்...

திருமதி வசந்தா ஜெகதீசன்
எழுத்தாளர்
ஜேர்மனி

# பதிப்பகங்கள் பற்றி..

முல்லை அமுதன்
இணையத்தள ஆசிரியர்
லண்டன்



முல்லை அமுதன்

ஈழத்து படைப்பாளர்களின் அபரிமிதமான வருகையும் அவர்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் பிரசுர களமும் விரிந்து கொண்டே செல்வதை அவதானிக் கலாம். பலவகை மன அழுத்தங்களுடன் வாழ நிர்ப்பந்திக்கப்படும் சமூகத்தில் இருந்து முகிழ்விட்டு பிரவகித்தோடும் படைப்பாளர்களின் படைப்புக்களின் குரல்களை, எழுத்துக்களை தாங்கி பார்வைக்கு தருகின்ற,கேட்க வைக்கின்ற அச்சு,ஒலி,ஒளி ஊடகங்களும் நிறையவே வந்துவிட்டன.கணினி வலையமைப்பும் கைகளுக்குள் வந்துவிட மின்னம்பலங்களில் பார்க்கவும்,கேட்கவும் ஊடகங்கள் அதிகமாக வந்துவிட்டன.

மேலும்,தங்களின் படைப்புக்களை லாவகமாக பதிவிலிடக்கூடிய தளங்களும் வசப்படிருக்கின்றன. அந்நாட்களில் எமக்கு அது வாய்த்திருகாததால் காற்றோடுபோனவைகளுடன், கறையானுக்கும் இரையானதும், இயற்கை அனர்த்தங்களுடன், யுத்த சூழலும் படைப்புக்களை அழித்தபடி தொடர்கின்றன. பல படைப்புக்கள் அழிந்து போனதால் மீள பதிப்புக்கள் செய்யவும் வாய்ப்பில்லாது போய்விட்டது.இருக்கும் சிலதும் படைப்பாளர்களுக்குப்பிறகு அவர்களின் குடும்பங்களின் தொடர்ச்சியான பங்களிப்பு இலக்கியத்திற்குக் கிடைகாததால் அழியும் நிலைக்கும் ஆளாகின்றன.

இந்த நிலையால் ஆர்வமுள்ள இன்றைய தேவையாளர்களுக்கு வெறுமையே கிடைக்கின்றது. ஆங்காங்கே மறுபதிப்புக்கள் கிடைத்தாலும் போதியனவாக இல்லை என்பதே வருத்தம். அண்மையில் உறவுக்காரரிடம் நூல் பற்றி விசாரித்த போது ஒட்டுப்பை செய்யும் ஒருவருக்குக் கொடுத்துவிட்டதாகச் சொன்னார். அவருக்கு தன் ஜீவனம் முக்கியமாகப்பட்டது. ஆனால் அந்தநூல் இன்று கிடைக்காத வாசர்களை காலம் ஏமாற்றிவிடுகிறது. இன்று புலம்பெயர் சூழலில் படைப்புலகில் நுழைந்தவர்களின் படைப்புக்கள் நூலாக வந்து பலரிடம் சென்று சேர்கிறது. ஆனால் அதிகமான நூல்களின் வருகையின் வேகம் ஆபத்தையும் தந்துவிடுவதை உணரப்படுகிறது. புற்றீசல் போல பதிப்பகங்களும் வந்துகொண்டிருக்கின்றன. இவை தரமான வாசகனை வசப்படுத்துமா என்கிற கேள்வியும் தொக்கி நிற்கின்றன. குறைந்தசெலவில் அச்சிடும் வாய்ப்பு இருப்பதாலும் படைப்பாளர்களை ஈர்க்கவும் செய்வதால் நூல்களின் வருகையும் அதிகரிக்கின்றன. அறிமுக விழாக்கள் மூலம் விட்டதைப் பிடிக்கலாம் என்கிற நினைப்பும் படைப்பாளர்களை வேறொரு திசைக்கு இட்டுச் செல்லமுனைய வைக்கும். ஒரு கட்டத்தில் வியாபாரப்பொருளாகி எழுத்தின் தரம்குறைகிற அபாயமுள்ளன. அழகுடனும், நேர்த்தியான கட்டமைப்புக்களுடனும் வாசகர்களை உள்வாங்கும் நோக்கத்துடனும், காலத்தால் பேசவைக்கும் திறமைகளுடனும் இருக்கிற பதிப்பகங்களும் இல்லாமலில்லை.நாம் எழுததொடங்கிய காலத்தில் நூலை வெளியிடுவது என்பதே சிரமம் தருகிற செயல்பாடுதான்.நாமே வெளியிட்டு,நாமே கடைகளில்கொண்டு சேர்த்து அதில் எத்தனை நூல் பழுதாகும்,காசு கைக்கு வரும்,வராது.கடைக்காரர்களின் ஏமாற்று இன்றும் தொடகிறது மறுக்கமுடியாதுதான்.

முன்னர் சிரித்திரனின் கவின் அச்சகம், அலை வெளியீடுகள், குலசிங்கம் அவர்களின் உதயம் புத்தகசாலை வெளியீடுகள், சிறிலங்கா, ஆனந்தா, சுப்பிரமணிய ,பூபாலசிங்கம் புத்தகசாலைகள், கு.வி அச்சகவெளியீடுகள், ஜோசேபாலாவின் வெளியீடுகள், மலையக வெளியீட்டகம்,சாரல் பதிப்பகம். கலைவாணி புத்தகசாலை வெளியீடுகள்,தனலட்சுமி புத்தகசாலை திருமகள் புத்தகவெளியீடுகள், மூன்றாவது மனிதன் பதிப்பகம், கல்கின்ன தமிழ் மன்ற வெளியீடுகளைச் சொல்லலாம். இலாபநோக்கமில்லாது செயல்பட்டன.

சிறிமாவோ ஆட்சிக்காலத்துதடைகள் நல்ல நூல்கள் வெளியிட நிறுவனங்கள் முற்பட்டன. வீரகேசரி நிறுவனத்தாரின் வீரகேசரிப் பிரசுரங்கள் பல எழுத்தாளர்களை இனங்காட்டின. நிலக்கிளி, பொன்னம்மாளின் பிள்ளைகள், நன்றிக்கடன், இங்கேயும்மனிதர்கள், மூட்டத்தினுள்ளே, நெருபு மல்லிகை, தங்கச்சியம்மா, கங்கைக்கரைஓரம், விடிவுகால நட்சத்திரங்களாகச்சொல்லிக்கொண்டே போகலாம். அ.பாலமனோகரன், செம்பியன

இப்படிப் பலரைச் சொல்லிக்கொண்டே போகலாம். அ.பாலமனோகரன், செம்பியன் செல்வன், வை.அஹ்மத்ட், ஜோன்ராஜன், செ.குணரத்தினம், பொ. பத்மநாதன், செங்கை ஆழியான், கே.டானியல்,கே.

விஜயன், தி.ஞானசேகரன், மொழிவாணன், அருள். செல்வநாயகம், கே.எஸ். ஆனந்தன், இந்துமகேஷ், அருள். சுப்பிரமணியம் என்று பலரை பலருக்கும் இனங்காட்டியது. கலாவல்லி சஞ்சிகையை வெளியிட்ட மெய்கண்டான் நிறுவனம், மாணிக்கம் சஞ்சிகையை வெளியிட்ட மாணிக்கம் நிறுவனம் சிலநூல்களை வெளியிட்டன. நீலமாளிகை, கோத்தியின் காதல், கர்ப்பக்கிருகம்.

காற்றில்கலக்கும் பெருமூச்சுக்கள் எனப்பல நூல் களையும் சொல்லலாம். திருகோணமலையில் திருமைலைசுந்தாவின் அம்மா பதிப்பகமும், சித்தி அமரசிங்கம் அவர்களின் இலக்கியச்சோலை அமைப்பும் பலநூல்களை வெளியிட்டு வாசகர்களுக்கு அறிமுகம்செய்துவைத்தன. மட்டக்களப்பில் அன்புமணி அவர்களின் மலர் வெளியீடாகாவே செ.யோகநாதனின் தோழமை என்றொரு சொல் குறுநாவல் வெளிவந்திருந்தது. மலர் சஞ்சிகை மூலம் மேலும் பலநூல்கள் வந்திருந்தன. அதே போல் கண.மகேஸ்வரனின் தாரகைசஞ்சிகையும், உதயம் நூல் வெளியீட்டுத்திட்டத்தின் மூலம் சில

நூல்களும் வந்திருந்தன. உதயம் வெளியீட்டகத்தாரின் நூல் வெளியீட்டுத்திடம் வெற்றி பெற்றிருக்குமாயின் இன்னும் பலநூல்கள் வந்திருக்கலாம். எனினும் சாதித்ததாகாவே உதயம் நிறுவனத்தாரை போற்றலாம்.

அந்தனி ஜீவாவின் மலையக வெளியீட்டகமும், சாரல்நாடனின் சாரல்பதிப்பகமும் நல்லநூல்களை தந்திர்ந்தன. கலாநிதி மு.நித்தியானந்தன் யாழ்ப்பாணத்தில் விரிவுரையாளராக இருந்த போது வைகறை வெளியீட்டகத்தின் மூலம் மூன்று நூல்களை வெளியிட்டு பலரையும் வியக்கவைத்தார். தோட்டக்காட்டினிலே, ஒரு. கூடைக்கொழுந்து குறிப்பிடத்தக்கன. ந. முரளிதரன், என்.எஸ்.எம். ராமையா, தெளிவத்தை ஜோசேப், மலரன்பன், மொழிவரதன் போன்றவர்களை எமக்குஅறிமுகம் செய்துவைத்தார்கள்.இங்கு தான் பதிப்பகங்களின் கடமை முக்கியம் பெறுகின்றன. இப்போது மட்டக்களப்பில் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் நூல்களை வெளியிடுவதுடன், தமிழியல் விருதுகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தகது. தேசியகலை இலக்கியப் பேரவையின் நூல்கள் கணிசமான படைப்பாளர்களை இலக்கிய உலகம் பெருமைகொள்ளும் வகையில் வெளியிட்டு வருகின்றன

சிவசேகரம், முருகையன் நூல்கள் சிறபான வரவேற்பைப் பெற்றிருந்தன. அதே போல் புலோலியூர் இரத்தின வேலோனின் மீரா வெளியீட்டகமும் தரமான நூல்களை வெளியிட்டு வருகின்றன யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடிலிருந்தபோது நல்ல நூல்கள் தனியாகவும், நிறுவன அமைப்புக்களாலும் வெளிவந்தன. மீரா பதிப்பகம் மூலம் டேவிட் லிகோரி நல்ல நூல்களை வெளியீட்டார். செங்கை ஆழியான் கமலம் வெளியீட்டகம் மூலம் தனது நூல்களையும், யாழ் இலக்கியவட்டம் மூலம் பிறரது நூல்களையும் வெளியிட்டார். கவிஞர். இ. நாகராஜன். கே.வி.நடராஜன் போன்றோரை எமக்கு அறிமுகம் செய்துவைத்தன. அதே போல புண்ணியாமீன் தன் சிந்தனை வட்டம் ஊடாக நிறைய நூல்களையும் வெளியிட்டு வருகிறார்.

80களின் பிற் பகுதியில் கலைஞன் பதிப்பகம் புதுவையின் "இரத்த புஷ்பங்கள்" ,காலத்தின் யுத்தங்கள் (பதினொரு எழுத்தாளர்களின் சிறுகதைகள்), தாவையூர். காண்டீபனின் "இருளின் விடிவு" குறுநாவலையும் வெளியிட்டிருந்தனர். அதே போல ரஜனி பதிப்பகம் யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியிலிருந்து 85இல் செங்கைஆழியானின்

ஓ..அந்த அழகிய பழைய உலகம் நாலுடன் மண்டைதீவு கலைச்செல்வியின் நாலையும் வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. செவ்வந்தி சஞ்சிகையும் நூல்கள் வெளியிட்டது ஞாபகம். தினகரனிலிருந்து விலகிய பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி வந்த முரசொலியை நடத்திய திருச்செல்வம் அவர்களின் முரசொலி நிறுவனம் கே.ஆர்.டேவிட் போன்றபடைப்பாளர்களின் நூல்களை வெயிட்டனர். சொக்கன், சண்முகதாஸ் போன்ற அறிஞர்களின் கூட்டு முயற்சியால் முத்தமிழ் கழகம் ஊடகநூல்களை வெளியிட்டு பதிப்பு முயற்சிக்கு உதவினர் அப்போது.இப்போது ஆரோக்கியமான சூழலா அல்லது வசதிகள், வாய்ப்புகள் வந்ததா தெரியவில்லை. மாதம்மூன்று நூல்களாவது வருகின்றன.புலம்பெயர் இலக்கிய ஆர்வலர்களின் நிதிப்பங்களிப்புடன் நூல்கள் வருவதும் சிறப்புச் சேர்க்கின்றது.. தையிட்டி. இராஜதுரையின் நூல் உதாரணம். தமிழகத்திலும ,காந்தளகம், மித்ரா,மணிமேகலைப்பிரசுரம், அலைகள், விழயல், கிரியா, காலச்சுவடு, உயிர்மை, வம்சி, நர்மதா, தகிதா, ஓவியாபதிப்பகம், அன்னம், அகரம், பல்கலை, வடலி, சாளரம், சந்தியா, விஜயாபுத்தகாலயம், வானதி, சோமுபுத்தகநிலையம், ஆழி பதிப்பகம்,

கிழக்குப் பதிப்பகம், கறுப்புப்பிரதி, புது எழுத்து, சைவ சித்தாந்தபெருமன்றம், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் என பட்டியல்நீள்கிறது . பலர் படைப்பாளர்கள் தனித்தும் இலங்கையிலும்,தமிழத்திலும் வெளியிட்டு தங்களை பதிவு செய்கின்றனர்.ஆயிரம் நூல்கள் வரவேண்டும். ஆரோக்கியமான சூழலினை பதிப்பகமும் ஏற்படுத்தல்வேண்டும். பணம் பண்ணலாம் என்று படைப்பாளர்களை நோகடிப்பதும்,அவர்களை படைப்புலகம் நோக்கிய பயணத்திசை திருப்பி விடுவதும் நடந்துவிடக்கூடாதவாறு கைகோர்த்து பயணிக்கவேண்டும்.

எம்.டி.குணசேன நிறுவனம், கொடகே நிறுவனம் நல்ல நூல்களை வெளியீடுள்ளன. குணசேன நிறுவனம் ஆதவன் பத்திரிகை மூலம் இலக்கியப் பங்களிப்பு செய்தமை வரலாற்றில் மறக்கமுடியாதது. மல்லிகைப்பந்தல் பல நூல்களை யாழ்ப்பாணத்திலிருந்தும், கொழும்பிலிருந்தும் வெளியிட்டு வருகின்றமை இலக்கிய மனங்களுக்கு ஆறுதலான விடயம். வீரகேசரிப்பிரசும் வந்த காலத்தில் அதற்கு ஈடாக ஜனமித்திரன் வெளியீடும் பல ஜனரஞ்சக நூல்களை வெளியிட்டு வாசகர்களை அணைத்துக்கொண்டது.

ஒவ்வொரு படைப்பாளனுக்குள்ளும் ஊற்றெடுக்கின்ற வகையில்தான் அவர்களின் படைப்புக்களும்,வெளியீடுகளும் அமைகின்றன. ஒவ்வொரு கிராமங்கள்தோறும் உருவான படைப்பாளர்களும் தனித்தும்,ஒருமித்தும் வெளியிட்டு தங்களின் இருப்பை ஸ்திரபப்படுத்தியே வருகின்றனர். கோணைத்தென்றல், படிகள், வகவம், கண்டி

கொழும்பு நாவலப்பிட்டி, கிளிநொச்சித் தமிழ்ச் சங்கங்களும் நூல்களை வெளியிட்டு எமது நூல் தேவையை, வாசகர்களின் தாகத்தை, ஆய்வாளர்களுக்கு தருகின்றமை குறிப்பிடத்தான் வேண்டும். குமரன் பதிப்பகம் பல நூல்களை வெளியிட்டுஇன்றும் வரவேற்புடன் பயணிக்கின்றது. புலம்பெயர்நாடுகளில் தேசம்வெளியீட்டாளர்கள், திருமுருகன் அறிவகம், அயோத்தி நூலகசேவை, தமிழியல்பதிப்பகம், ரத்தினம்பவுண்டேசன் ஈழவர் இலக்கியச் சங்கம்,ஜேர்மனியில் எழுத்தாளர்சங்கம், கனடாவில் காலம் புத்தகம், தமிழர்தகவல்,தாய்வீடு,படைப்பாளர் சங்கம்,நோர்வேயில் சுவடுகள்பதிப்பகம்குறிப்பிடத் தக்கவெளியீடுகளை தந்துள்ளன. இன்னும் நிறைய இருக்கலாம். அவுஸ்திரேலியாவில் முருகபூபதிபோன்றோரின் வெளியிட்டுமுயற்சிகளையும குறிப்பிடவேண்டும். அவுஸ்திரேலிய எழுத்தாளர்களை ஒன்றிணைத்து வருடாந்த விழாக்கள்நடத்துவதுடனும் அவ்வப்போது தொகுப்பு நூல்களையும் வெளியிட்டு வருகின்றார்

அவருடன் பல எழுத்தாளர்கள் இணைந்து செயல்படுவது குறிப்பிடத்தக்கது.திருகோணமலையில் மைக்கல் கொலின் ஆசிரியராக இருந்து வெளியிட்ட தாகம் சில நூல்களை வெளியிட்டிருந்தது. தாமரைத்தீவானின் "மீறல்கள்" என்னும் சில..கொழும்பில் இருந்தவாறு கமத்தொழில் திணைக்களத்தில் கடமையாற்றிய நாவலாசிரியர் சோ.ராமேஸ்வரன் தன் பதிப்பகம் ஊடாக நிறைய நாவல்களையும், சிறுகதைகளையும் வெளியிட்டடிருந்தமை குறிப்பிடத்தக்கது.கொழும்பு எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பகம் மேமன்கவியின் "யுகராகங்கள்" உட்பட சிலநூல்களை வெளியிடிருந்தனர். யாழ்பாணத்திலிருந்து வெளி வந்த கணபதிகணேசனின் மேகம் சஞ்சிகையும் நூல்களை வெளியிட்டிருந்தது.

கவிஞராகவும்,பின்னாளில் பத்திரிகையாளனாகவும் அடையாளப்படுத்திய கணபதி கணேசன் இந்தியாவிலும்,மலேசியாவிலும் சஞ்சிகையாளனாக மிளிர்ந்தமை பதியவேண்டியது.யாழ்ப்பாணத்தில் காந்தளாதிபரின் தந்தையாரின் சிறிகாந்தா அச்சகம் பதிப்பு முயற்சிகளை மேற்கொண்டதின் தொடர்ச்சியாவோ காந்தளகமும் இன்றும் தொடர்கின்றது.ஜேர்மனியில் வெற்றிமணி பத்திரிகையும்,லண்டன ' புதினம் பத்திரிகையும் வரலாற்றில்தம்மை பதியும் வண்ணம் நூல்களை பதிப்பித்தனர்.அவற்றையும் நாம் பதிவிலிடவேண்டும்.நூல்களின் தேவை இருக்கும் மட்டும் நூல் வெளிட்டாளர்களும் தேவையே. படைப்பாளரின் கைகளைப் பலப்படுத்தும் வகையில் பதிப்பகங்களின் தேவையும் ,நோக்கமும் இணையவேண்டும்.

# தெரிந்த திருக்குறள் தெரியாத பல தகவல்கள்.......

தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள்.இது மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம் அல்லதுதர்மம், பொருள், இன்பம் அல்லது காமம் ஆகியவற்றைப்பற்றிவிளக்கும் நூல். இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர் என்றும் அனைவருக்கும் தெரியும். இந்த திருக்குறளைப்பற்றி சில அரிய தகவல்கள்:

| | |
|---|---|
| திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு | - 1812 |
| திருக்குறளின் முதல் பெயர் | - முப்பால் |
| திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் | - 133 |
| திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள் | - 380 |
| திருக்குறள் பொருட்பாலில் உள்ள குறட்பாக்கள் | - 700 |
| திருக்குறள் காமத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள் | - 250 |
| திருக்குறளில் உள்ள மொத்த குறட்பாக்கள் | - 1330 |
| திருக்குறளில் உள்ள சொற்கள் | - 14,000 |
| திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் | - 42,194 |
| திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் | - அனிச்சம், குவளை |
| திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் | - நெருஞ்சிப்பழம் |
| திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை | - குன்றிமணி |
| திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து | - ஔ |
| திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் | - குறிப்பறிதல் |
| திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள் | - பனை, மூங்கில் |
| திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட (1705) ஒரே எழுத்து | - னி |
| திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் | - ளீ,ங |
| திருக்குறளில் இடம்பெறாத இரு சொற்கள் | - தமிழ், கடவுள் |
| திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் | - தஞ்சை ஞானப்பிரகாசர். |
| திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் | - மணக்குடவர் |
| திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் | - ஜி.யு.போப் |
| திருக்குறள் உரையாசிரியர்களுள் 10 - வது உரையாசிரியர் | - பரிமேலழகர் |
| திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் | - ஒன்பது. |

திருக்குறளில் கோடி என்ற சொல் ஏழ இடங்களில் இடம்பெற்றுள்ளது.

எழுபது கோடி என்ற சொல் ஒரே ஒரு குறளில் இடம் பெற்றுள்ளது.

ஏழ என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது.

திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழிபெயர்த்துள்ளனர்

திருக்குறள் நரிக்குறவர் பேசும் வக்போலி மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

---

# மகத்தான சேவையில் மண்!...

"மண்" என்னும்போது அது நிலத்தையும் நாம்வாழும் பூமியையும் குறிக்கும் சொல்லாகும். இப்பூமியில் சகல ஜீவராசிகளும் பிறந்து வளர்ந்து இறுதியில் இம்மண்ணுக்கே சங்கமமாகிவிடுகின்றன. பிறப்பதும் மடிவதும் இந்த மண்ணில்தானே!.. இப்படியான ஒரு மகோன்னதமான பூமியின் பெயரைச்சூட்டி "மண்" எனற பெயரில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக வெளிவந்துகொண்டிருக்கும் இச்சஞ்சிகையின் பணிகளோ மலை உச்சி போன்றதே. இச்சஞ்சிகையில் கலை இலக்கிய எழுத்துப்பணிகளோடு தாயகத்திற்கான நிதிஉதவிப் பணிகளையும் முன்னெடுத்து மனிதநேயத்தை நிலைநாட்டி வருவது சிறப்பான அம்சமாகும். மண்ணின் பணிகளோடு அனைவரும் ஒன்றிணைந்து வளர்த்தெடுப்போம். நான் தற்போது நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும் மண்ணை வாழ்த்தவேண்டுமென்ற ஆவலில் நான் தொலைபேசியில் சொல்லச்சொல்ல இன்னொருவர் மூலமே எழுதி இந்த வாழ்த்தைத் தெரிவிப்பதில் மனம்மகிழ்கிறேன். வாழ்க!..வளர்க!..

க.பத்மகுணசீலன்
இலங்கை உயர்கல்வி அமைச்சின்
ஓய்விநிலை சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளர்.
விஜயலட்சுமி ஞாபகார்த்த சிறுவர் கழகம்
கீல் நகர் - ஜேர்மனி



# மண்செழிக்க மனம்நிறைந்து வாழ்த்துகின்றோம்....

தமிழ்மொழிச்சேவை கலாச்சார மன்றம்
Essen - Germany

உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல், மற்றதுஅது

தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

புலம்பெயர்வாழ் மண்ணில் தமிழ்த்தாயின் தொண்டனாய் தமிழ்மொழியை வளர்த்து இன்று தமது மண்சஞ்சிகையின் 25 வது அகவையை கொண்டாடிக்கொண்டு இருக்கும் பிரபலமிக்க மண்சஞ்சிகையின் ஆசிரியரும்,அதன் நிர்வாக இயக்குனருமாகிய மதிப்புக்குரிய திரு.வ.சிவராஜா அவர்களுக்கு அவர்களின் பணி வானளவாக தொடரவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனின் ஆசி பெற வாழ்த்துகின்றோம். பெரிய இலட்சியம் இருந்தால் அருமையான எண்ணம் வரும். எண்ணம் உயர்ந்தால் நற்பணிகள் எல்லாம் உயர்ந்ததாகவே இருக்கும். அந்தவகையில் தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு தன்னால் இயன்ற பொதுப்பணிகளை செய்து வருபவரும் கடந்த 27 வருடங்களாக எமது மன்றத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் சிரமம் பாராது அழைத்தவுடன் மறுகாரணம் கூறாது வருகை தந்து எமது நிகழ்வுகளை தன் புன்முறுவல் முகத்துடன் நிகழ்வு முடியும் வரை நடாத்த உதவி வழங்கும் நல்ல மனிதர். தாயகத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இன்று வரை தன்னால் இயன்ற பல நற் பணிகளை செய்து வரும் பெருந்தகை. அவரது இந்த நற்பணிகள் மென்மேலும் தொடரவும், வளரவும் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்க இவரின் தொண்டு!... வளர்க செந்தமிழ்!...

தமிழ்மொழிச்சேவை கலாசாரமன்றம்
எசன் தமிழ்ப்பாடசாலை - ஜேர்மனி.

நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள்.

தமிழ்மொழிச்சேவை கலாசார மன்றம் எசன்
Sevanar Str. 1-3
45127 Essen
Essentamilpaadasaalai@hotmail.de

T: 004920194616372



# மண் சஞ்சிகையின்
# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும் கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்று உதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். இவர்கள் அனைவரும் வருடாவருடம் இத்தொகைளை வழங்கிவருகிறார்கள். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

| | | |
|---|---|---|
| 01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480.00 யூரோ |
| 02. திரு.திருமதி.யஜிந்தா.ராஜமோகன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - மட்டக்களப்பு | - 480.00 யூரோ |
| 03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி | - சுவீஸ்லாந்து | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - கிளிசொச்சி | - 480.00 யூரோ |
| 04. செல்வன்.நகுல்.துரையரங்கன | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - திருகோணமலை | - 480.00 யூரோ |
| 05. செல்வி.அஜந்தி.அழகராசா | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480.00 யூரோ |
| 06. செல்வன்.ஜெய்சன்.ஜெயபாலன் | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - திருகோணமலை | - 480.00 யூரோ |
| 07. திருமதி.பராசக்தி.பரமசாமி | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480.00 யூரோ |
| 08. திருமதி.ரதி.சின்னத்துரை | - பிரித்தானியா | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480.00 யூரோ |
| 09. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480.00 யூரோ |
| 10. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு | - வவுனியா | - 480.00 யூரோ |
| 11. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - மட்டக்களப்பு | - 240.00 யூரோ |
| 12. செல்வி.சுகிர்தா.தவராஜ் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - கிளிநொச்சி | - 100.00 யூரோ |
| 13. செல்வன்.சியாந்த்.எமில்.சர்வானந்தன் | - ஜேர்மனி | |
| (ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு | - வவுனியா | - 200.00 யூரோ |

# மனித உறவுகள் - வெற்றியின் அற்புதம்

Human Relationship The Magic of Success

குடும்பத்திலும் சரி ,அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும்

இதோ சில எளிய வழிகள்.

01. நானே பெரியவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
02 அர்த்தமில்லாமலும் தேவையில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே.. இருப்பதை விடுங்கள். (Loose Talks)
03. எந்த விஷயத்தையும் பிரச்சனையும் நாசூக்காகக் கையாளுங்கள். (Diplomacy)
04. விட்டுக்கொடுங்கள். (Compromise)
05. சில நேரங்களில் சில சில சங்கடங்களை சகித்துத் தான் ஆகவேண்டும் என்று உணருங்கள்.
06. நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடசிவரை வாதாடாதீர்கள் (Adamant Argument).
07. குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள். (Narrow Mindednes)
08. உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Crrying Tales)
09. மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Complex)
10. அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள். (Over Expectation)
11. எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக்கொண்டிராதீர்கள்.
12. கேள்விப்படுகின்ற எல்லா விஷயங்களையும் நம்பிவிடாதீர்கள்.
13. அற்ப விஷயங்களை பெரிது படுத்தாதீர்கள்.
14. உங்கள் கருத்துகளில் உடும்புப்பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக்கொள்ளுங்கள். (Flexibility)
15, மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். (Misunderstanding)
16. மற்றவர்களுக்கு உரிய மரியாதையை காட்டவும், இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
17. புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல நடந்து கொள்ளாதீர்கள்.
18. பேச்சிலும், நடத்தையிலும் திமிர்த்தனத்தையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும், பண்பாட்டையும் காட்டுங்கள்.
19. அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து அளவளாவுங்கள். (Initiative)
20. பிணக்கு ஏற்படும் போது. அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சை துவங்க முன்வாருங்கள்.
21. தேவையான இடங்களில் நன்றியையும் பாராட்டையும் சொல்ல மறக்காதீர்கள் . பாராட்டுக்கு மயங்காத மனிதனே இல்லை. அதுவே உங்களுக்கு வெற்றியாக அமையும்.



„மண்“ சஞ்சிகை
கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்
„Mann“ (Erde) Tamilisches Magazin



# அறிவித்தல்

எமது சொந்த நாட்டில் நடக்கின்ற இனக்கலவரங்களில் தாய், தந்தை, உற்றார், உறவினர்களை இழந்து அநாதை இல்லங்களில் அல்லற்பட்டு வருபவர்கள், போரினால் கை, கால் போன்ற அங்கங்களை இழந்தவர்கள், நிரந்தர முடமாக்கப் பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், அகதிகள், சுனாமியால் பாதிக்கப்பட்டவர் கள் ஆகியோருக்கு உதவும் நோக்கில் „மண்“ சஞ்சிகையின் வாசகப் பெருமக்களும் இரக்க சிந்தனை படைத்த அன்பு உள்ளங்களும் மனமுவந்தளித்து வரும் நிதிஉதவியினால் 26.09.1991 தொடக்கம் 31.12.2014 வரை 43997,35 ஜேர்மன் மார்க்குகளையும், 45,436-.50 யூரோக்களையும், 1500.00 பவுண்ஸ்களையும் நேரடியாக அனுப்பிவைத்துள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

## யாழ்மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| அமல அன்னை அன்பகம் | அரியாலை | 1045.35 | ---- | ---- |
| பரமானந்தா அநாதை இல்லம் | வதிரி - கரவெட்டி | 1000.00 | ---- | ---- |
| செயற்கைக்கால் பொருத்தும் நிலையம் | ஜெயப்பூர் - யாழ்ப்பாணம் | 3000.00 | 350.00 | ---- |
| ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம் | யாழ்ப்பாணம் | 2000.00 | 1000.00 | ---- |
| அறவழி நிலையம் | சாவகச்சேரி | 1500.00 | 860.00 | ---- |
| மகேஸ்வரா இல்லம் | மானிப்பாய் | 500.00 | ---- | ---- |
| சிறிசாரதா ஆச்சிரம் | பருத்தித்துறை | 3000.00 | 200.00 | ---- |
| துர்க்கா மகளிர் இல்லம் | தெல்லிப்பழை | 1500.00 | ---- | ---- |
| ஞானசம்பந்தர் இல்லம் | உரும்பிராய் | 500.00 | ---- | ---- |
| யாழ்பல்கலைக்கழகம் | யாழ்ப்பாணம் | 5852.00 | ---- | ---- |
| வலுவிழந்தோர் வாழ்வகம் | உடுவில் - சுன்னாகம் | 4600.00 | 1750.00 | ---- |
| குருநகர் சிறுவர் இல்லம் | யாழ்ப்பாணம் | ---- | 200.00 | ---- |
| கிறிஸ்துவமாணவர் குருமடம் | யாழ்ப்பாணம் | ---- | 400.00 | ---- |
| யாழ்முத்துதம்பி ம. வித்தியாலயம் | திருநெல்வேலி | ---- | 200.00 | ---- |
| | | 24497.35 | 4960.00 | 00.00 |

## கிளிநொச்சி மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| குருகுலம் | கிளிநொச்சி | 1000.00 | ---- | ---- |
| கருணை நிலையம் | உருத்திரபுரம் | 500.00 | ---- | ---- |
| காந்தி நிலையம் | உருத்திரபுரம் | 500.00 | ---- | ---- |
| நவஜீவனம் | பரந்தன் | 500.00 | ---- | ---- |
| ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம் | கிளிநொச்சி | 5000.00 | 1250.00 | ---- |
| செஞ்சோலை சிறுவர் இல்லம் | கிளிநொச்சி | ---- | 400.00 | ---- |
| ரூத் பெண்கள் இல்லம் | கிளிநொச்சி | ---- | 7900.00 | 300.00 |
| யோகசுவாமிகள் திருவடி நிலையம் | வன்னேரிக்குளம் | ---- | 300.00 | ---- |
| | | 7500.00 | 9850.00 | 300.00 |

## திருகோணமலை மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| அன்பு இல்லம் | திருகோணமலை | 500.00 | ---- | ---- |
| சிறிசண்முகா இல்லம் | திருகோணமலை | 2000.00 | 4340.00 | ---- |
| சிவானந்தா தபோவனம் | திகோணமலை | 1000.00 | ---- | ---- |
| றகுமான் சுனாமி இல்லம் | புல்மொட்டை | ---- | 500-00 | ---- |
| | | 3500.00 | 4840.00 | 00.00 |

## மன்னார் மாவட்டம்:

| | | DM | Euro | GB Pound |
|---|---|---|---|---|
| திருக்குடும்ப கன்னியர் மடம் | பேசாலை | 500.00 | ---- | ---- |
| ஆயர் (மறைமாவட்டம்) | மன்னார் | 1000.00 | ---- | ---- |
| மடு அகதிகள் முகாம் | மன்னார் | 3500.00 | ---- | ---- |
| வாழ்வுதயம் | மன்னார் | 1500.00 | 1700.00 | ---- |
| பொழிவகம் காப்பகம் | மன்னார் | ---- | 300.00 | 300.00 |
| | | 6500.00 | 2000.00 | 300.00 |

### மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - இராமகிருஷ்ண மிசன் | - மட்டக்களப்பு | - 500.00 | - ---- | - ---- |
| - சிறுவர் இல்லம் களுவாஞ்சிக்குடி | - மட்டக்களப்பு | - 500.00 | - 200.00 | - ---- |
| - மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம் | - முறக்கொட்டாஞ்சேனை | - ---- | - 3115.00 | - ---- |
| - திருஞானசம்பந்தர் குருகுலம் | - களுவாஞ்சிக்குடி | - ---- | - 2590.00 | - ---- |
| - மட்டக்களப்பு மாவட்ட ஒன்றியம் | - மட்டக்களப்பு | - ---- | - 500.00 | - ---- |
| - யோகசுவாமிகள் பெண்கள் இல்லம் | - சித்தாண்டி | - ---- | - 2400.00 | - ---- |
| | | - 1000.00 | - 8805.00 | - 00.00 |

### முல்லைத்தீவு மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - உதய தாரகை நிலையம் | - மல்லாவி | - 1000.00 | - ---- | - ---- |
| - இனிய வாழ்வு இல்லம் | - புதுக்குடியிருப்பு | - ---- | - 400.00 | - ---- |
| - திருக்குடும்ப வாழ்வு இல்லம் | - முல்லைத்தீவு | - ---- | - 540.00 | - ---- |
| - பரிசுத்த இசிடோரின் சுனாமி இல்லம் | - முல்லைத்தீவு | - ---- | - 700.00 | - ---- |
| | | - 1000.00 | - 1640.00 | - 00.00 |

### வவுனியா மாவட்டம்:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - கிருபை சிறுவர் இல்லம் | - வவுனியா | - ---- | - 300.00 | - ---- |
| - அகிலாண்டேஸ்வரி அருளகம் | - வவுனியா | - ---- | - | - 300.00 |
| - ஊனமுற்றோர் மறுவாழ்வுச்சங்கம் | - வவுனியா | - ---- | 10851.50 | - ---- |
| - S. V. விஜயன் வைத்தியசாலை | - வவுனியா | - ---- | - 500.00 | - 600.00 |
| - இந்து அன்பகம் சிறுவர் இல்லம் | - வவுனியா | | - 1.190-00 | |
| | | - 00.00 | - 12.841.50 | - 900.00 |

### ஜேர்மனி:

| | | DM | Euro | GB Pounds |
|---|---|---|---|---|
| - புனர்வாழ்வுக்கழகம் | - ஜேர்மனி | - ---- | - 500.00 | - 00.00 |
| | | - 00.00 | - 500.00 | - 00.00 |

| மொத்தம் | 43.997,35 DM | 45,436.50 € | 1500,00 GB Pounds |
|---|---|---|---|

இத்திட்டத்திற்கு நிதி உதவி புரியவிரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் வங்கிவிபரத் திற்கு உங்கள் அன்பளிப்புகளை அனுப்பி உதவிபுரியுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கி றோம்.

"சிறு துளி பெரு வெள்ளம்!......"
"இன்றே செய்வோம் அதை நன்றே செய்வோம்!......

ஆசிரியர்
"மண்" சஞ்சிகை
Duisburg/Germany
01.01.2015

"MANN" - ERDE e.V.
V. Sivarajah
Am Windhövel 18A
47249 Duisburg
Germany

Tel.: 0203/8073898
Fax: 0203/8073898
e-mail:
v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்:
BANKVERBINDUNG
„MANN" ERDE Verein e.V.
Sparkasse Duisburg
Konto-Nr.: 225 000 421
BLZ: 350 500 00



# நன்றிப்பெருக்கு!...

இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவுவிழா சிறப்புடன் மலர்வதற்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். குறிப்பாக இந்த வெள்ளிவிழா மலருக்கு வாழ்த்துக்கள் தந்து மலரைச் சிறப்பித்தவர்களுக்கும், நிதியுதவி புரிந்த பெருமக்களுக்கும் என்றும் ஆலோசனைகள், உதவிகள் புரிந்துகொண்டிருக்கும் ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். வெள்ளிவிழா சிறப்புடன் நடந்தேற சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய மாணவச் செல்வங்கள், வாசகர்கள், எழுத்தாளர்கள், நலன்விரும்பிகள் யாவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள். பயணம் தொடர கை கொடுக்கும் யாவருக்கும் மண்ணின் பெரு நன்றிகள் உரித்தாகட்டும்!...

-ஆசிரியர்-

Bäckerei - Konditorei - Stehcafé

# Mülder

Seit 1928

Qualität aus Meisterhand

Inh.S.Balamohan *Betriebswirt d.H & Bäckermeister*


Heidemannstr 83, 50825 Köln, Tel:0221 554977



25 Jahre Mann-Erde / Jubiläumsausgabe

# ERDE

Germany



Wissen, Kultur & Literatur